தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்

தொகுதி - IV

(காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி -IV)

பொதுப்பதிப்பாசிரியர்

முனைவர் **சீ. வசந்தி** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.

ஆணையர் (பொ)

பதிப்பாசிரியர்

இரா. சிவானந்தம்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை - 600 008

2013 - திருவள்ளுவர் ஆண்டு 2044

BIBLIOGRAPHICAL DATA

TITLE	:	**Tamilnattu Kalvettukal Vol.IV**
General Editor	:	Dr. S. VASANTHI M.A., M.Phil., Ph.D.
Copyright	:	Tamilnadu State Dept. of Archaeology
Subject	:	EPIGRAPHY
Language	:	Tamil
Edition	:	First
Publication No.	:	263
Year	:	2013
No. of Copies	:	1000
Type Point	:	12
No. of Pages	:	248
Paper Used	:	80 Gsm Maplitho
Printer	:	**The Chennai Printer's** Industrial co-operative Society Limited, No. 6, Pycrofts Road, (Bharthi Salai) Triplicane, Chennai-600 005
Publisher	:	**State Dept. of Archaeology,** Tamil Valarchi Valaagam, Halls Road, Egmore, Chennai - 600 008.
Price	:	Rs. 103

உள்ளடக்கம்

வ.எண்		பக்க எண்
	பதிப்புரை	i-ii
	முன்னுரை	iii-x
1.	சிவபுரம்	1
2.	இடையார்பாக்கம்	49
3.	கூரம்	55
4.	காஞ்சிபுரம் - சொக்கீசுவரர் கோயில்	70
5.	திருப்பருத்திக்குன்றம்	72
6.	பள்ளன்கோயில் செப்பேடு	87
7.	தாங்கி	92
8.	கருங்குழி	96
9.	ஆலம்பரை	97
10.	கடப்பாக்கம்	98
11.	வேம்பனூர்	99
12.	நல்லூர்	100
13.	ஓணம்பாக்கம்	101
14.	மதூர்	102
15.	அரசர் கோயில்	103
16.	ஆனூர்	111
17.	நெடுகுன்றம்	142
18.	காவாந்தண்டலம்	147
19.	தொடூர்	164
20.	பிச்சிவாக்கம்	167
21.	சோமங்கலம்	177

முனைவர் சீ. வசந்தி எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.
ஆணையர் (பொறுப்பு)

தொல்லியல் துறை,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
ஆல்சு சாலை, எழும்பூர்,
சென்னை- 600 008.

நாள் : 15.03.2013

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கல்வெட்டுகளைப் படியெடுக்கும் பணியினை முதன்மைப் பணிகளில் ஒன்றாக செய்து வருகின்றது. தமிழகத்திலுள்ள 32 மாவட்டங்களில் 26 மாவட்டங்களில் கல்வெட்டுப் படியெடுக்கும் பணி நிறைவுற்றுள்ளது. இதர மாவட்டங்களில் படியெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. இத்துறை கல்வெட்டுப் பிரிவு வாயிலாக 6113 கல்வெட்டுகள் 42 தொகுதிகளாக இதுவரை வெளிவந்துள்ளன. இந்நூல் 'தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் தொகுதி-IV', தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள் வரிசை எண் 42ஆக வெளிவருகிறது.

தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை 85 வரலாற்றுச் சின்னங்களைப் பேணிப் பாதுகாத்து வருகின்றது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் இத்துறையின் கீழ் 11 வரலாற்றுச் சின்னங்கள் உள்ளன. அவற்றில் சிவன்கூடல், விட்டலாபுரம் ஆகிய வரலாற்றுச் சின்னங்களில் உள்ள கல்வெட்டுகள் 'காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுதி-I' என்னும் நூலில் வெளிவந்துள்ளன. ஏனைய 9 வரலாற்றுச் சின்னங்களில் உள்ள கல்வெட்டுகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அவைமுறையே சிவபுரம், இடையார்பாக்கம், கூரம், காஞ்சிபுரம் சொக்கீசுவரர் கோயில், திருப்பருத்திக்குன்றம் திரைலோக்கியநாதர் மற்றும் சந்திரபிரபா கோயில், தாங்கி, கருங்குழி, ஆலம்பரை ஆகியனவாகும். இது தவிர மாவட்டத்தின் பிற ஊர்க் கல்வெட்டுகளும் இத்தொகுதியில் வெளிவருகின்றன.

இக்கல்வெட்டுகளைப் படித்துப் பதிப்பித்து நூலாக வெளிக்கொணர்ந்துள்ள இத்துறை கல்வெட்டாய்வாளர் திரு. இரா. சிவானந்தம் அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

இந்நூலினை D.T.P. செய்து அட்டைப்படம் வடிவமைத்த இத்துறை அச்சுப்பிரிவு பணியாளர்கள் திருமதி தே. சத்தியவதி, திரு. மு. சக்திவேல் ஆகியோருக்கும் எனது பாராட்டுகள்.

2012-2013-ஆம் நிதியாண்டு பகுதி திட்டத்தின் கீழ் இந்நூலினை வெளியிட அனுமதியளித்து, நிதியுதவி வழங்கிய தமிழ்நாடு அரசுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

துறை அலுவலர்களின் உழைப்பாலும் பெரு முயற்சியாலும் இது போன்ற நூல்களை வெளியிடுவதில் இத்துறை மகிழ்ச்சியடைகிறது. வரலாற்றுச் செய்திகளை எழுதிட உதவும் முதன்மைத் தரவுகளில் ஒன்றான இக்கல்வெட்டுச் சான்றுகளைப் பயன்படுத்தி ஆய்வாளர்களும், ஆர்வலர்களும் தமிழகத்தின் பண்டைய வரலாற்றுச் சிறப்புகளை வெளிக்கொணர வேண்டும் என்பதே என் ஆவல். இச்சீரியப் பணியில் ஈடுபட்டு வரும் எம்துறையைச் சார்ந்த அலுவலர்கள் அனைவருக்கும் எனது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தி. வசந்தி

முன்னுரை

தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை, வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதை முதன்மைப் பணிகளில் ஒன்றாக செய்து வருகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் இத்துறையின் கீழ் 11 வரலாற்றுச் சின்னங்கள் உள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 11 வரலாற்றுச் சின்னங்களில் சிவன்கூடல், விட்டலாபுரம் ஆகிய கோயில்களில் உள்ள கல்வெட்டுகள் 'காஞ்சிபுரம் மாவட்டக் கல்வெட்டுகள்-தொகுதி-I' என்ற நூலில்வெளியிடப்பட்டுள்ளன. இதர 9 வரலாற்றுச் சின்னங்களான சிவபுரம், இடையார்பாக்கம், கூரம், திருப்பருத்திக்குன்றம்-திரைலோக்கியநாதர் மற்றும் சந்திரபிரபா கோயில், காஞ்சி-சொக்கீசுவரர், தாங்கி, கருங்குழி, ஆலம்பரை ஆகியவற்றில் உள்ள கல்வெட்டுகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

சிவபுரம்

முதலாம் இராஜராஜன் காலத்தில் இக்கோயில் முழுக் கற்றளியாகக் கட்டப்பட்டுள்ளது. இம்மன்னனின் பெயரில் 'ராஜராஜ ஈஸ்வரமுடையார்' என்று இப்கோயில் அழைக்கப்பட்டுள்ளதை அவனது 24-ஆம் ஆண்டு (கி.பி. 1000) கல்வெட்டால் அறிகிறோம். அன்று இவ்வூர் 'உரோகடம்' என்றழைக்கப்பட்டது. முதலாம் இராஜேந்திரனின் 12-ஆம் ஆட்சியாண்டு வரை இவ்வூர் 'உரோடகம்' என்ற பெயரிலேயே அழைக்கப்பட்டுள்ளது. இம்மன்னனின் 13-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இவ்வூரினை இக்கோயிலுக்கு தேவதானமாக அளித்து 'சிவபுரம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. அது தொடர்ந்து, இவனின் 21-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு 'புரிசை நாட்டு சிவபுரத்து ராஜராஜஸ்வரமுடையார்' என்று குறிப்பிடுவதிலிருந்து இவ்வூருக்கு சிவபுரம்' என்ற பெயர் நிலைபெற்றுள்ளது எனலாம்.

முதலாம் இராஜேந்திரன் தனது 8-ஆவது ஆட்சியாண்டில், இக்கோயிலில் இரண்டு நந்தா விளக்கெரிக்க இம்மன்னனே 180 ஆடுகள் கொடையாக அளித்துள்ளான் மேலும் இவனது 9-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி.1021) ஸ்ரீராஜராஜ ஈஸ்வரமுடைய மஹாதேவர் கோயிலுக்கு அரசன் இராஜேந்திர சோழனே ஆபரணங்கள் செய்தளித்த தகவல் கூறப்பட்டுள்ளது. அணிகலன்களின் பெயர்களும் அவற்றின் எடையும் கூறப்பட்டதுடன், அணிகலன்களில் பதிக்கப்பட்ட மாணிக்கம், வயிரம், பச்சை, இளஞ்சிவப்புக்கற்கள், சிறிய மாணிக்கம் ஆகியனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆபரணங்களுடன் வெண்சாமரை, 80 பொற்பூக்கள் போன்றனவும், இக்கோயில் ஆடவல்லார் அபிமாந மேரு விடங்க தேவருக்கு திருவபிஷேகம் செய்த பொன்னும் பொன்னாலான திருமாலை, தோடு, வாகு வலையம், திருக்கைய்க்காறை நான்கு, திருக்காற்காறை இரண்டு, பாதசாயல் இரண்டு ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்பட்ட பொன்னின் அளவுகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல அத்தேவர்

தேவியார்க்கும் திருமாலை, வாகு வலையம், பட்டிகை ஆகியனவும் அணிகலன்கள் கொடுக்கப்பட்ட விவரம் கூறப்பட்டுள்ளது. இஷபவாகன தேவருக்கும், அவர் தேவியார்க்கும் ஆபரணங்கள் மன்னன் பெயரிலேயே செய்தளிக்கப்பட்டிருக்கின்றன.

(1) ஸ்ரீராஜேந்திர சோழன் இட்ட பொற்பூ

(2) ஸ்ரீராஜேந்திர சோழன் பொன்னின் தளிகை

(3) ஸ்ரீராஜேந்திர சோழன் மண்டை

(4) ஸ்ரீராஜேந்திர சோழன் பட்டம்

(5) ஸ்ரீராஜேந்திர சோழன் வெண்சாமரை

மேலும் இக்கோயிலில் சிறப்பான வழிபாடுகள் நடந்துள்ளதை இங்குள்ள கல்வெட்டுகள் பகிர்கின்றன.

இடையார்பாக்கம்

இவ்வூர்க் கோயிலில் நான்கு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகளில் காலத்தால் பழமையானது முதலாம் குலோத்துங்கனின் 13-ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1083) கல்வெட்டாகும். இம்மன்னனின் 37-வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி. 1107), மன்னனின் ஆணைக்கிணங்க இத்திருக்கற்றளி சந்திரசேகரன் இரவி என்கிற சோளேந்திரசிங்க ஆசாரியன் என்பவனால் எடுப்பிக்கபட்டுள்ளச் சிறப்புச் செய்தியினை அளிக்கிறது. எனவே, முதலாம் குலோத்துங்கனின் 13-ஆம் ஆட்சியாண்டிற்கு முன்னர் எடுப்பிக்கப்பட்டுள்ளதை உறுதிசெய்யலாம். அதாவது கி.பி. 1070-1083-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டக் காலம்.

இவ்வூர், அன்று 'புரிசை' என்கிற ஊரின் ஒரு பகுதியாக இருந்துள்ளது. இரண்டாம் குலோத்துங்கனின் காலத்தில் (கி.பி. 1145) இவ்வூர் இடையாற்றுப்பாக்கமான ராஜவிச்சாதிர சதுர்வேதிமங்கலம் என்றழைக்கப்பட்டுள்ளது. ஆகவே புரிசை என்ற ஊரிலிருந்து பிரித்து 'இடையாற்றுப்பாக்கம்' என்ற பெயர் வழங்கப்பெற்றுள்ளதை அறியமுடிகிறது. தற்போது இவ்வூர் 'இடையார்பாக்கம்' என்று மருவியுள்ளது.

அருளாள பட்டன் மகள் ஆண்டமைச் சானி என்கிற பிராமணப் பெண் இக்கோயில் இறைவன் 'திருப்படக்காடுடைய மகாதேவருக்கு' நந்தாவிளக்கெரிக்க புரிசை ஊரார் வசம் நிலம் ஒன்றினை இரண்டாம் குலோத்துங்கனது 12-வது ஆட்சியாண்டில் (கி.பி. 1145) அளித்துள்ளாள். இவ்விளக்கு நீண்ட நாட்களாக எரியாமல் இருந்துள்ளதை அறிந்த பின்னர், இரண்டாம் இராஜாதிராஜன் காலத்தில் (கி.பி. 1174) இந்நிலத்தினை ஊராரே வைத்துக் கொண்டு விளக்கெரிக்க மாற்றாக பசுக்கள் வழங்கிட வழிவகைச் செய்யப்பட்டுள்ளது.

இடையார்பாக்கம்

கூரத்தில் இரண்டுக் கோயில்கள் உள்ளன. ஒன்று சிவன் கோயில், மற்றொன்று பெருமாள் கோயில். இக்கோயில்கள் இரண்டும் பல்லவர் காலத்தியவை. பெருமாள் கோயிலில் தந்திவர்மனின் காலத்தியக் (கி.பி. 808) கல்வெட்டும், சிவன் கோயிலில் நந்திவர்மன் கல்வெட்டும் (கி.பி. 866) காலத்தால் முந்தையக் கல்வெட்டுகளாக

காணப்படுகின்றன. இச்சிவன் கோயில் தூங்கானை மாட வடிவில் கட்டப்பட்டுள்ளது. தமிழகத்தில் காணப்படுகின்ற தூங்கானை வடிவ கட்டடக் கோயில்களில், இக்கோயிலே மிகப்பழமையானது. இக்கோயில் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்டச் சின்னமாக உள்ளதென்பதும் சிறப்பாகும்.

இவ்வூர்க் கோயில்களில் பல்லவ மன்னர்களான தந்திவர்மன், நந்திவர்மன், நிருபதுங்கவர்மன் ஆகியோரது கல்வெட்டுகளும், சோழ மன்னர்களான முதலாம் ஆதித்தன், முதலாம் பராந்தகன், முதலாம் இராஜராஜன் போன்றோரின் கல்வெட்டுகளும் இராட்டிரகூட மன்னன் கன்னர தேவன் எனும் மூன்றாம் கிருஷ்ணனின் கல்வெட்டு ஒன்றும் இடம்பெற்றுள்ளன.

பல்லவர் காலத்தில் கூரம் என்றழைக்கப்பட்ட இவ்வூர் சோழ மன்னர்களில் முதலாம் இராஜராஜன் காலத்தில் 'கூரம் என்கிற இராஜவிச்சாதிர சதுர்வேதிமங்கலம்' என்று பெயர் மாற்றமடைந்துள்ளது. இவ்வூர் பிராமணர்களுக்குத் தானமாக வழங்கப் பட்டுள்ளதை அறிகிறோம். சிவன் கோயில், பல்லவர் காலத்தில் பெருந்திருக்கோயில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கோயில்களில் பூசை செய்வதற்காக நிலம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலம் அர்ச்சனா போகம் என்ற பெயரால் சுட்டப்பட்டுள்ளது. அதேபோன்று கோயிலில் இறைவனுக்கு அமுதுபடி, பிராமணர்களுக்கு உணவளிக்கவும் வழிவகைச் செய்யப்பட்டுள்ளதை இங்குள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. மேலும் இவ்வூரில் சுப்ரமணியர் கோயில் ஒன்றிருந்ததையும் இவ்விறைவனுக்கு மூன்று சந்தியின் போதும் அமுதுபடைக்க இவ்வூர் சபையார் ஏற்பாடு செய்துள்ளனர்.

காஞ்சிபுரம் - சொக்கீசுவரர் கோயில்

சொக்கீஸ்வரர் கோயில் என்றழைக்கப்படும் இக்கோயில் முற்காலச் சோழர்களில் உத்தமச் சோழன் காலத்தில் எடுப்பிக்கப்பட்டது. இதற்குச் சான்றாக ஒரே ஒரு கல்வெட்டு அதுவும் உத்தமசோழனின் கல்வெட்டு மட்டுமே இங்கு காணக் கிடைக்கின்றது. அக்காலத்தில் இக்கோயில் 'தெற்கிருந்த நக்கர்' எனும் பெயரால் வழங்கப்பெற்றுள்ளது. இக்கோயிலில் உள்ள பிள்ளையார், அன்று 'கரிகால சோழப் பிள்ளையார்' என அழைக்கப்பட்டுள்ளார். இப்பிள்ளையாருக்கு 'சந்திவிளக்கு' வைக்கப்பட்டச் செய்தியினை இக்கல்வெட்டு உணர்த்துகின்றது.

திருப்பருத்திக்குன்றம்

காஞ்சிபுரம் சிவகாஞ்சி, விஷ்ணுக் காஞ்சி, ஜின காஞ்சி என்று மூன்று பிரிவுகளை உள்ளடக்கியது. ஜின காஞ்சிப் பகுதியில் அமைந்துள்ள திருப்பருத்திக் குன்றத்தில் திரைலோக்கியநாதர் கோயில், சந்திரபிரபா கோயில் ஆகிய இரு கோயில்கள் அடுத்தடுத்து உள்ளன. இக்கோயில்களை தமிழ்நாடு தொல்லியல் துறை பராமரித்து வருகின்றது. திருப்பருத்திக்குன்றத்து சமணக் கோயில் பல்லவர் காலத்திலே எடுக்கப்பட்டுள்ளது என்பதை பள்ளன் கோயில் செப்பேடு கூறுகிறது. சந்திரபிரபா கோயில் பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்ட மணற்கல்லினாலும், அதே கட்டட அமைதியையும் கொண்டு விளங்குகின்றது. ஆனால் பல்லவர் காலத்தில் எழுப்பப்பட்ட திரைலோக்ய நாதர் கோயில் பிற்காலச் சோழர்களில் முதலாமாவான் ஆன முதலாம் குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்தில் தற்போதைய கற்றளி அமைப்பில் முழுவதும் புதிதாக எடுப்பிக்கப்பட்டுள்ளது.

நாகை மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம் பள்ளன் கோயில் என்ற ஊரில் செப்பேடு ஒன்று கண்டெடுக்கப்பட்டதால் இது 'பள்ளன் கோயில் செப்பேடு' என்று அழைக்கப்படுகிறது.

இச்செப்பேடு முற்காலப் பல்லவ மன்னன் சிம்மவர்மனின் 6-வது ஆட்சியாண்டில் வெளியிடப்பட்டது. அதாவது கி.பி. 546-ஆம் ஆண்டைச் சார்ந்தது. இச்செப்பேடு, திருப்பருத்திக்குன்றத்தில் இருந்த நந்தி சங்கத்தைச் சார்ந்த வஜ்ஜிர நந்தி எனும் சமண முனிவருக்கு ஊர் ஒன்றினை பள்ளிச்சந்தமாக வழங்கியதைக் கூறுகிறது. எனவே இக்கோயிலில் கி.பி 6-ஆம் நூற்றாண்டிலிருந்து வழிபாட்டில் இருந்து வருகிறது என்பதை அறிகிறோம். திருப்பருத்திக்குன்றம் தொடர்பான செப்பேடு என்பதால் இந்நூலில் அச்செப்பேடு வெளியிடப்பட்டுள்ளது.

திரைலோக்கியநாதர் கோயில் முழுவதும் கற்றளியாக அமைக்கப்பட்டது முதலாம் குலோத்துங்கன் காலத்தில்தான். மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்தில் திருச்சுற்று மண்டபம் சீர்செய்யப்பட்ட விவரத்தினை அவனது 22-ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1200) கல்வெட்டு கூறுகிறது. இவனது ஆட்சியிலும் இவனது மகன் மூன்றாம் இராஜராஜனின் ஆட்சியிலும் குறுநில மன்னனாக இருந்த காடவ மன்னன் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனால் இக்கோயில் திருமதில் எடுக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் இராஜராஜனின் ஆட்சியின்போது தியாகசமுத்திரபட்டையார் என்பவர் காண்ணிப்பாக்கம் என்ற ஊரினை இக்கோயிலுக்கு பள்ளிச்சந்தமாக அளித்துள்ளார்.

விஜயநகர மன்னர் இரண்டாம் புக்கரின் அமைச்சர் இருகப்பா என்பவர் இக்கோயில் கருவறை முன் உள்ள சங்கீத மண்டபத்தை எடுப்பித்ததாக ஒரு கல்வெட்டு கூறுகிறது. மேலும் கி.பி. 1362-இல் மன்னன் இரண்டாம் புக்கரின் நலன் வேண்டி மாமண்டூர் அருகே உள்ள மகேந்திரமங்கலம் என்ற ஊரினை இக்கோயிலுக்குப் பள்ளிச்சந்தமாக வழங்கியுள்ளார்.

தாங்கி

நெடுந்தூரம் பயணம் செய்பவர்கள் ஆங்காங்கே சிறிது ஓய்வு எடுத்து பயணத்தைத் தொடர்வது அக்கால வழக்கம். அவ்வாறு ஓய்வு எடுப்பதற்காக நெடுஞ்சாலை ஓரங்களில் மண்டபங்கள், சத்திரங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சென்னை - காஞ்சிபுரம் சாலையில் இதுபோன்று சத்திரங்கள் பெயர் கொண்ட ஊர்களில் பல உள்ளன. எடுத்துக்காட்டாக பிள்ளைச் சத்திரம், சுங்குவார் சத்திரம் போன்றவை. அதுபோன்று காஞ்சிபுரம் - செங்கல்பட்டு நெடுஞ்சாலையில் தாங்கி என்னும் ஊரில் ஒரு வழிப்போக்கர் மண்டபம் அமைந்துள்ளது. இம்மண்டபம் பிற்காலத்தைச் சார்ந்தது. அதாவது இம்மண்டபம் கி.பி. 1777-ஆம் ஆண்டு இவ்வூரைச் சேர்ந்த தீத்தர் செட்டி, மூத்தர் செட்டி ஆகியோரால் நிறுவப்பட்டது என்பதை இங்குள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

கருங்குழி

முகம்மதியர்களால் கட்டப்பட்ட இக்கோட்டையை, கி.பி. 1781-ஆம் ஆண்டு கேப்டன் தேவிஸ் என்பவன் தலைமையிலான ஆங்கிலேயர் படை கைப்பற்றியது இச் செய்தியை கல்வெட்டாக வெட்டியுள்ளனர்.

ஆலம்பரை

மொகலாயர் கட்ட அமைதியில் உள்ள கோட்டை ஒன்று ஆலம்பரை என்னும் இவ்வூரில் உள்ளது. இக்கோட்டை பிரெஞ்ச் ஆட்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. பிரெஞ்ச்-ஆங்கிலேயர் இடையேயான போரில் இக்கோட்டை ஆங்கிலேயர்களால் சிதைக்கப்பட்டது.

இக்கோட்டை அருகே உள்ள கல்லறைப் பகுதியில் ஒரு துண்டு கல்வெட்டு காணப்படுகிறது. இது ஜயமலிஈஸ்வரமுடைய மகாதேவர் கோயில் திருநந்தவனத்தினை சீர்படுத்திய விவரத்தினைக் கூறுகிறது. இவ்வூர் அருகே வேம்பனூர் என்ற ஊரில் முத்தாலம்மன் கோயில் முன்மண்டபம் அடிப்பகுதியில் இரு துண்டுக்கல்வெட்டுகள் காணப்படுகின்றன் அதில் ஒன்று ஜயமலிஸ்வரர் கோயில் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. எனவே இக்கோயில் ஜயமலிஸ்வரமுடையார் கோயிலாக கருத வாய்ப்புள்ளது.

மேலும் இங்குள்ள கல்வெட்டில் 'இடைக்கழிநாடு' என்று குறிப்பும் காணப் படுகிறது. இக்கல்வெட்டு முழுமையாக இல்லை. தற்போது 'கடப்பாக்கம்' என்று அழைக்கப்படும் ஊர் இடைக்கழி நாடு என்ற பெயரிலும் அழைக்கப்படுகிறது. சங்க காலப் புலவர்களில் ஒருவரான இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் இப்பகுதியைச் சார்ந்தவர். எனவே இடைக்கழி நாடு சங்க காலம் முதல் இன்று வரை அப்பெயரிலே வழங்கி வருகின்றது எனக் கூறலாம். சோழர் காலத்திலும் இப்பகுதி இடைக்கழி நாடு என்ற பெயரிலே அழைக்கப் பட்டதை வேம்பனூர் கல்வெட்டில் 'இடைக்கழி நாடு' என்ற குறிப்பு வாயிலாக அறிகிறோம். இவ்வூரிலிருந்த ஜயமலீஸ்வரர் கோயிலுக்கு விளக்கு ஒன்று வைப்பதற்கு 90 ஆடுகள் தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் 3¾ வேலி நிலம் இக்கோயிலுக்குத் தேவதானமாகக் கொடுக்கப்பட்டுள்ளச் செய்தியும் தெரியவருகிறது.

ஓணம்பாக்கம்

மேல்மருவத்தூரிலிருந்து செய்யூர் செல்லும் சாலையில் 9 கி.மீ தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூரில் ஊசிமலை, கருப்புக்குன்று ஆகிய இரு சிறுமலைகள் உள்ளன. ஊசி மலையினை குரவன் குன்று, பஞ்சபாண்வடர் மலை என்றும் அழைக்கின்றனர். இம்மலையில் சமணர்ப் படுக்கைகள் காணப்படுகின்றன. கருப்புக் குன்று என்றழைக்கப்படும் மலையில் சமணத் தீர்த்தங்கரர் சிற்பங்கள், பார்சுவதநாதருக்கென்று குடைவிக்கப்பட்ட சிறு கோயில், சமணர்படுக்கைகள் உள்ளன. இம்மலைக்கு மேல் பகுதிக்கு செல்லும் பாதையில் 4 அடி உயரமுள்ள சிறுகுன்றினை குடைந்து அதில் பார்சுவநாதர் சிற்பம் பாங்குற செதுக்கப்பட்டுள்ளது. இச்சிறு கோயில் குன்றின் முகப்பில் கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கிரந்த எழுத்துக்களால் பொறிக்கப்பட்டக் கல்வெட்டு ஒன்று தென்படுகிறது. சமண சமயத்தில் சமயம், சமுதாயத்தினை நிர்வகிக்கும் குழுவிற்கு 'இருபத்து நான்கு' என்ற பெயரில் அமைப்பு உள்ளது. இதனை நிறுவிய 'வசுதேவசித்தாந்த படாரர்' என்ற சமணமுனியால் இச்சிறுகோயில் நிறுவப்பட்டது.

அரசர்கோயில்

திருவரசுரம் பெருமாள் கோயில் இறைவன் ஸ்ரீசேனாபதி ஆழ்வார் எனக் குறிப்பிடப்படுகிறார். இக்கோயில் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டுகள்

இரண்டு உள்ளன. இக்கோயில் ஆழ்வார் வழிபாட்டிற்கு தானங்கள் அளிக்கப்பட்டுள்ளன. பாத்தூர் சபை நிர்வாகத்தின் உறுப்பினராக இருந்த காஞ்சி சொக்கத் தேவரான கூத்தவர்மன் பட்டன் என்பவன், இம்மன்னனின் 14-ஆம் ஆட்சியாண்டு வரை அவனுக்குரிய நிலத்தினை உழுது அனுபவித்து வந்த வேளையிலே அதற்குரிய வரிகளை செலுத்தாமல் ஊரைவிட்டு சென்று விட்டான். இந்நிலத்தினை அன்றாடு நற்காசு வாசிபடர் வராகன் 27 பணம் கொண்டு ஸ்ரீசேனாபதி பெருவிலையாக பொது ஏலத்தில் வாங்கி திருவரசுரர் நாயனர் கோயிலில் உள்ள ஸ்ரீசேனாபதி ஆழ்வார்க்கு கொடையாக அளிக்கப்பட்டுள்ளது.

ஆனூர்

ஆனூர் எனும் இவ்வூரினை கல்வெட்டுகள் ஆனியூர், ஆனியூரான சத்யதசிரய குலகாலச் சதுர்வேதிமங்கலம், ஆதியூரான சத்யாசிரயகுலகாலசதுர்வேதிமங்கலம் என்று சுட்டுகின்றன. இவ்வூரில் சுப்ரமணியர், தேவேந்திரன், பிடாரி போன்றோருக்கும் கோயில்கள் இருந்துள்ளன. மீமாம்சை, சாத்திரங்கள் ஆகியவை விவரித்துக் கூறப்பட்டுள்ளன. அரசும் காலமும் கூறப்படாத கல்வெட்டு ஒன்று சித்திரமொழிப் பெரிய நாட்டார் செய்த தர்மத்தைக் குறிக்கிறது. சித்திரமேழிப் பெரியநாட்டார் இக்கோயிலைக் கல்லால் கட்டியவர்களாக இருக்க வேண்டும். இன்று வேதநாராயணர் என்றழைக்கப்படும் கோயிலின் பழம்பெயர் 'நடுவில் திருமுற்றம் சித்திரமேழி விண்ணகர்' என்பதும் ஆநியூர் சத்ரிய குலகாலச் சதுர்வேதிமங்கலம் எனப் பெயர் சூட்டப்பட்டு பிராமண ஆட்சியூராக இருந்துள்ளதும் தெரியவருகிறது. சித்திரமேழிப் பெரிய நாட்டாரின் சின்னங்களான கலப்பை, மேழி, தமரு, சக்கரம், செண்டு ஆகியவை கல்வெட்டின் தலைப்பில் செதுக்கப்பட்டுள்ளன. பிற்காலத் திருப்பணியில் இக்கல்வெட்டு இடம் மாறி வெறும் கல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இன்று இக்கோயிலிலுள்ள முழுமையான கல்வெட்டு இது ஒன்று மட்டுமே.

காவாந்தண்டலம்

கல்வெட்டுகளில் இவ்வூர் காவான்தண்டலம், காய்வான்தண்டலம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வூரில் சோழீஸ்வரர் எனும் சிவன் கோயில் ஒன்றும், இலட்சுமிநாராயணசாமி கோயில் ஒன்றும் உள்ளன. சோழீஸ்வரர் கோயிலில் நான்கு கல்வெட்டுகள் உள்ளன. அவை,விக்கிரமச் சோழனின் மூன்று கல்வெட்டுகளும், மூன்றாம் குலோத்துங்கனின் ஒரு கல்வெட்டும் ஆகும். எனவே இக்கோயில் விக்கிரம சோழன் காலத்தில் எடுக்கப்பட்டதாக இருக்கலாம் என்றால் இல்லை. இவ்வூர் பெருமாள் கோயிலில் உள்ள முதலாம் இராசேந்திரனின் 4-ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1016) கல்வெட்டு ஒன்று. ஜெயங்கொண்ட சோழமண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து தமனூர் நாட்டு காய்வாந்தண்டலம் ஆன சதுர்வேதிமங்கலத்தில், இந்நாடு வகை செய்கிற அதிகாரி வைகூருடையான் வல்லாள கண்டன் பிச்சன் என்பவன் மன்னன் முதலாம் இராஜேந்திரனின் பெயரில் 'ராஜேந்திர சோழ ஈஸ்வரமுடைய மகாதேவர்' கோயிலை எழுப்பியுள்ளான்என்ற செய்தியைச் கூறுகிறது. சோழீஸ்வரர் கோயில் முதலாம் இராஜேந்திரன் காலத்தில் கட்டப்பட்டது என்றாலும், அக்கோயிலில் இம்மன்னனது கல்வெட்டு ஏதுமில்லை. அக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளில் காலத்தால்

முற்பட்டது விக்கிரமசோழனின் 5-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டாகும். இக்கோயில் இறைவன் வழிபாட்டுச் செலவினங்களுக்கு இறையிலியாக நிலம், சபையாரால் அளிக்கப் பட்டுள்ளது. இக்கோயில் தற்போது சோழீஸ்வரர் கோயில் என்றழைக்கப்படுகிறது.

இலட்சுமி நாராயாணசாமி பெருமாள் கோயிலில் காணப்படும் பல்லவ மன்னன் கம்பவர்மனின் 14-வது ஆட்சியாண்டு (கி.பி. 896)) கல்வெட்டில் வேங்கை நாட்டு குளனூர் என்னும் ஊரைச் சார்ந்த மானசர்வ்வன் என்பவன் இவ்வூர் விஷ்ணுக் கோயிலை எடுப்பித்தச் செய்தியை தருகிறது. மேலும் இம்மன்னனின் 15-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி.பி.900) இக்கோயில் இவனது பெயரிலேயே 'மானசர்வ்வ விஷ்ணுகிருகம்' என்றழைக்கப்பட்டதை அறிகிறோம். முதலாம் இராசேந்திரன் கல்வெட்டும் இச்செய்தியினை உறுதிப்படுத்துகிறது.

பிச்சிவாக்கம்

இவ்வூர் பட்டமுடீஸ்வரர் கோயிலில் பார்த்திவேந்திரவர்மன் காலக் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இவை தரைப்பகுதியில் பதிக்கப்பட்டுள்ளன. கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இச்சிவன் கோயில் எழுப்பப்பட்டது. கி.பி. 1914-ஆம் ஆண்டு இவ்வூர் வேளாள குலத்தைச் சார்ந்த திருவேங்கட முதலியார் என்பவரால் தற்போதைய கோயில் முழுவதும் கருங்கற்களால் புதிதாக எடுக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் முன்னோர்களால் செங்கற்களால் கட்டப்பட்டக் இக்கோயிலை கருங்கல்லால் எழுப்பியச் செய்தி கிடைக்கிறது. அன்றைய மாவட்ட ஆட்சியர் ரைஸ் துரை, தாசில்தார் நரசிம்ம அய்யர் ஆகியோரின் முயற்சியினால் எடுக்கப்பட்டதையும் கூறுகிறது. எனவே கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இருந்த கோயில் மிகவும் சிதிலமடைந்து கிடைந்ததால் செங்கல் கொண்டு அவரது முன்னோர்களால் கட்டப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதலாம்.

சோமங்கலம்

மூன்றாம் குலோத்துங்கனுடைய14-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு(கி.பி. 1192) இவ்வூரில் ஏரி பலமுறை உடைந்ததையும் அதனைச் சரி செய்ததையும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. குன்றத்தூர் நாட்டுச் சோமங்கலமான பஞ்சநதிவாண சதுர்வேதிமங்கலத்து ஏரி குலோத்துங்க சோழனின் 12 ஆவது ஆட்சியாண்டில் பெருமழை பெய்து வெள்ளம் ஏற்பட்டு ஒரேநாளில் ஏழிடத்தில் பெருமடை உடைப்பு ஏற்பட்ட போது, திருச்சுரகண்ணப்பந் திருவேகம்பமுடையான் காமன் கண்டவானவன் சரி செய்தான். மன்னனுடைய 13 - ஆவது ஆட்சியாண்டில் இரண்டிடங்களில் உடைப்பு ஏற்பட்டபோதும் இவனே சரி செய்தான். மன்னனின் 14 - ஆம் ஆட்சியாண்டில் இவனிடமிருந்து 40 பழங்காசுகள் மகாசபையினர் பெற்று மடைகளையும், கரையினை சீர் செய்துள்ளனர். இதனின் வட்டி கொண்டு பன்னிருபிடிபரப்பு கொண்ட 40 குழி நிலத்துக் கரையினை ஆண்டுதோறும் கல்லிக்கரை செய்யவும் சம்மதித்துள்ளனர்.

குன்றத்தூர் நாட்டு சோமங்கலம் என்கிற இராசசிகாமணிச் சதுர்வேதிமங்கலத்திலுள்ள உடையார் சோமீஸ்வர முடைய நாயனார் திருமடைவிளாகத்திலும் இவ்வூர் பெருமாள் கோயிலான திருநிலை அழகிய பெருமாள் திருவிடையாட்டத்திலும் உள்ள மனைகளில் குடியேறும் கைக்கோளர்களுக்கு இடங்கைவரிகள் சர்வ மானியமாக கொடையளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையை நாட்டு கைக்கோள முதலியார்களும், யாதவராயர் சோழ கோனாரும் கல்லில் வெட்டுவித்தனர்.

இது ஸ்ரீவீரப்பிரதாப தேவராய உடையார் ஆட்சிக்காலத்தில் திருமடை வளாகத்தில் கைக்கோளர், குடியேறாது பாழ்பட்டுவிட்ட காரணத்தினால் அவர்கள் குடியேற சலுகை வழங்கப்பட்டது. சீபண்டாரத்திலிருந்து பட்டடை நூலாயத்திற்கு முதல் பெற்றுக் கொண்டு இவர்களே விளக்கும் பூசைத் திருப்பணியும் செய்ய வேண்டும் என்றும்; கைக்கோளருடன் மற்ற பிரிவினர் குடியேறவும், செக்கு இட்டுக்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டதை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

சோமீஸ்வரமுடைய நாயனார் கோயிலுக்கு திருநொந்தா விளக்குக்கும் பூசைத் திருப்பணிக்கும் அதிகாரிக்கு திருப்பரிவட்டம் போன்றவற்றிற்காகவும் அரசர் பிரதாப தேவமகாராயரே தானம் அளித்தச் செய்திக் கூறப்பட்டுள்ளது.

தமிழக அரசியல் வரலாற்று சமூகம் பொருளாதாரம் போன்ற ஆய்விற்குத் தேவையான அரியத் தகவல்களைக் கொண்ட இந்நூல், தமிழக வரலாற்றினை ஆய்வு செய்யும் ஆய்வாளர்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் சிறப்புற வெளியிடுவதற்கு முழு ஒத்துழைப்பினை நல்கிய இத்துறை ஆணையர் பொறுப்பு முனைவர் சீ. வசந்தி அவர்களுக்கு எனது நன்றி.

இரா. சிவானந்தம்
கல்வெட்டாய்வாளர்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 501/2013**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	24
வட்டம்	:	ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1009
ஊர்	:	சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	:	288/1959-60
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	1
அரசன்	:	முதலாம் இராஜராஜன்			

இடம் : சிவன் கோயில் நுழைவாயிலின் தென்புறம்

குறிப்புரை : ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணவிற் கோட்டத்து புரிசைநாட்டு உரோடகத்து ஊரார்கள், இவ்வூர் ராஜராஜ ஈஸ்வரமுடைய மஹாதேவற்க்கு இறையிலி தேவதானமாக முன்னர் கொடையளித்த நிலம் நீக்கி மற்றோர் நிலத்தை இறையிலி தேவதானமாக விற்றுக் கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது. முன்னர் கொடையளித்த நிலத்தின் எல்லைகளும் அப்போது விற்ற நிலத்திற்கு எல்லைகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்த சாசனத்தை ஊரார் சொல்ல எழுதியவர் வைகானஸன் கேசவ சங்கர நாராயணன் ஆவார்.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* திருமகள் போலப் பெருநிலச் செல்வியு ஙனக்கே உரிமை பூண்டமை மன
2. க்கொளக் காஙளூர்ச்சாலை கலமறுத்தருளி வேங்கைய் நாடும் கங்கபாடியுங் நுளம்பபாடியும் தடிகை
3. ய்பாடியும் குடமலைநாடும் கொல்லமும் கலிங்கமும் எண்டிசை புகழ்தர ஈழமண்டமும் இலட்ட
4. பாடி ஏழரை இலக்கமும் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் வளர் ஊழியுள் எல்லா யா
5. ண்டு தொழுதகைய் விளங்கும் யாண்டேய் செழியரைத்தேசு கொ[ள்] *ஸ்ரீகோவி ராஜராஜகெஸரிவந்மரான*
6. *ஸ்ரீராஜராஜ* தேவற்க்கு யாண்டு உ௰ச ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து [மண]விற் கோட்டத்து

7. ப் புரிசை நாட்டு உரோடகத்து ஊரோம் நிலவிலையாவணக் கையெழுத்து எம்மூர் ஸ்ரீ ராஜ

8. ராஜ-ஈ-ப்ஷ ரமுடைய உ(ா)ஹா தேவற்க்கு முன்பு நாங்கள் இறைஇலி தேவதானமாக உதகஸூலவ்ருஞ் செய்து குடு

9. த்த நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை ம[ரு]த்துவ கிழவன் தேவானை திருவடி சேரிய்க்கு மேற்கும் தென்பாற்கெல்லை

10. . . விலி ஏத்ததுக்கு வடக்கும் இன்னும் தென்பாற்கெல்லை சூளை ஏத்தத்துப் பள்ளக்கழுவலுக்கு வடக்கும்

11. இன்னுங் கீழ்பாற்கெல்லை சூளை ஏத்தத்துப் பள்ளக் கழுவலுக்கு மேற்கும் இன்னும்

12. தென்பாற் கெல்லை சூளை ஏத்ததுக்குக் கழுவலுக்கு வடக்கும் மேல் பாற்கெல்லை [ம]ள்ளை ஏத்ததுக்கு கிழக்கும் இன்

13. னும் தென்பாற்கெல்லை மள்ளை [ஏ*]த்ததுக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை முடக்கொற்றன் கொல்லைக்கும் கண்ண

14. [மு]தைய கிழவன் கொல்லைக்கு கிழக்கும் வடபாற்கெல்லை ஆற்றங் கரைய்க்குத் தெற்க்கும் இன்னான் கெல்லை உள்அகப்பட்ட நிலம் உண்

15. ணிலம் ஒழிவின்றிக் கீணோக்கிய கிணறும் மேநோக்கிய மரமும் மற்றும் எப்பேற்பட்டதும் முன்பு நாங்கள் ஸ்ரீ ராஜராஜ

16. -ஈ-ப்ஷரமுடைய ஊஹாஷேவற்க்கு இறைஇலி தேவதானமாக உஉக ஸூலவ்ருஞ் செய்து குடுத்த நிலம் நீக்கி நாங்க

17. ள் இறைஇலி தேவதானமாக விற்கின்ற நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை சிற்றரையா மூதூர் நிலத்துக்கு மேற்க்கும் தெ

18. ன்பாற்கெல்லை சூளையான அளகன . . . ஏரிய்க்கும் உரோகடத்து ஊர் நின்றும் கூவத்துக்குப் போன

19. ப்பெருவழிக்கு வடக்கு மேல்பாற்கெல்லை சூளை ஏத்ததுக்கு கிழக்கு தென்பாற்கெல்லை கெகற்றதி ஏத்ததுக்கு [வ]டக்கும் இந்நுஞெ[ன்*] பாற்கெல்

20. லை . . . பட்டிக்கு வடக்கும் மேல்பாற்கெ[ல்*]லை நீரோ[டு] காலுக்கு கடம்பங்கால்லுக்கு கிழக்கும் இன்னும் மேல்பாற்கெல்லை முடக் கொற்றன் குறி

21. ச்சி வெற்ப்பில் கீழைய்க்கரைய்க்கு மேற்க்கு ஒரு கோல் ஆற்றுக்கேய் வர கிழக்கு வடபாற்கெல்லை பாலாற்றில் நாங்க

22. ள் உடைய நிலத்துக்குத் தெற்கும் இன்னான்கெல்லை உள்ளகப்பட்ட நிலம் உண்ணில ஒழிவின்றிக் கீணோக்கிய

23. கிணறும் மேநோக்கிய மரமும் ஊர் இருக்கையும் ஏரியும் மேடும் பள்ளமும் மற்றும் உடும்போடிய் ஆமைய் ந

24. டஞ நிலம் எப்பேறப்பட்டதும் உண்ணில மொழிவின்றி இறைஇலி தேவதானமாக விற்றுக்குடுத்தோம் இன்

25. னிலத்துக்கு . . . பெறுவதாகவும் சென்னா[ள]ம

26. ஞ்சி செய்யாததாகவும் அன்னீர் பாய்ச்சியக் கொள்ளப் பெறுவதாகவும் இந்நிலஞ் சுட்டி நீர்விலை கொள்ளப் பெறாத

27. தாகவும் எம்மூர் வரிசை ஆள(ா) நால்குடி மடவிளாகத்து இறுப்பதாகவும் இவர்களைச் சில்லிறை சோறு மாட்டு உள்பட மற்றுமெப்பே

28. பர்ப்பட்டதுங் காட்டப்பெறாததாகவும் இப்பரிசொட்டி இறைஇலி ஷேவ தானமாக ஒரு காலாவதும் இரு காலாவதும் முக்கா

29. லாவதும் விற்றுக்குடுத்தோம் உரோடகத்து ஊரோம் ஊரார் சொல்ல எழுதிநேன் இவ்வூர் வைய்கானஸன் கேசவ

30. ன் சங்கர நாராயணநேன் இவை என் எழுத்து

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 502/2013

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	9
வட்டம்	:	ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1021
ஊர்	:	சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	:	287/1959-60
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தம் கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	2
அரசன்	:	முதலாம் இராஜேந்திரன்			

இடம் : சிவன் கோயில் அர்த்த மண்டபத் தெற்குச் சுவர்

குறிப்புரை : முதலாம் இராஜேந்திர சோழன் மெய்கீர்த்தியுடன் தொடங்குகிறது இக்கல்வெட்டு. ஸ்ரீராஜராஜஈஸ்வரமுடைய மஹாதேவர் கோயிலுக்கு அரசன் இராஜேந்திர சோழனே ஆபரணங்கள் செய்தளித்த தகவல் கூறப்பட்டுள்ளது. அணிகலன்களின் பெயர்களும் அவற்றின் எடையும் கூறப்பட்டதுடன், அணிகலன்களில் பதிக்கப்பட்ட மாணிக்கம், வயிரம், பச்சை, இளஞ்சிவப்புக்கற்கள், சிறிய மாணிக்கம் ஆகியனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆபரணங்களுடன் வெண்சாமரை, 80 பொற்பூக்கள் போன்றனவும், இக்கோயில் ஆடவல்லார் அபிமாந மேரு விடங்க தேவருக்கு திருவபிஷேகம் செய்த பொன்னும் பொன்னாலான திருமாலை, தோடு, வாகு வலையம், திருக்கைய்க்காறை நான்கு, திருக்காற்காறை இரண்டு, பாதசாயல் இரண்டு ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்பட்ட பொன்னின் அளவுகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல அத்தேவர் தேவியார்க்கும் திருமாலை, வாகு வலையம், பட்டிகை ஆகியனவும் அணிகலன்கள் கொடுக்கப்பட்ட விவரம் கூறப்பட்டுள்ளது. இஷபவாகன தேவருக்கும், அவர் தேவியார்க்கும் ஆபரணங்கள் மன்னன் பெயரிலேயே செய்தளிக்கப்பட்டிருக்கின்றன.

(1) ஸ்ரீராஜேந்திர சோழன் இட்ட பொற்பூ

(2) ஸ்ரீராஜேந்திர சோழன் பொன்னின் தளிகை

(3) ஸ்ரீராஜேந்திர சோழன் மண்டை

(4) ஸ்ரீராஜேந்திர சோழன் பட்டம்

(5) ஸ்ரீராஜேந்திர சோழன் வெண்சாமரை

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* திருமன்னி வளர இருநில மடந்தையும் போற்சயப்பாவையுஞ் சீர்த்தனிச் செல்வியுஜன் பெருஜேவியராகி இன்புற நெடு

17. ட்டின மாணிக்கம் ஒன்று[ம்*] ஆக கல்லடங்க தன்மக் கட்டளைக் கல்லால் நிறை ஒன்பது மஞ்சாடியும் நாலு மாவும் மேற்படி தாலி ஒன்றினால் ஏறின மாணிக்

18. கம் ஒன்றும் வயிர[ம்*] மூன்றும் பச்சை ஒன்று நடுவு கட்டின சிறிய மாணிக்கம் ஒன்றும் ஆகக் கல்லடங்கத் தன்ம கட்டளைக் கல்லால் நிறை எட்டு மஞ்ச[ா]

19. டியு[ம்*] மூன்று மாவும் நாண் இரண்டிநாள் தன்மக் கட்டளைக் கல்லால் நிறை பொன் முக்கழஞ்சரையும் வட்டமணி இருபத்தொன்றினாற் தன்ம கட்டளைக் கல்லால் நிறை

20. [பெ]ான் கழஞ்சே காலும் திருச்செவிமலர் பன்னிரண்டினால் மேற்படி கல்லால் நிறை பொன் முக்கழஞ்சு *ஸ்ரீ ராஜேந்த்ர* சோழன் வெண்சாமரை ஒ

21. ன்றினால் அலகு நிலைப்படி குடிஞைக் கல்லால் நிறை பொன் இருபத்து நாற் கழஞ்சே மஞ்சாடியும் *ஸ்ரீ ராஜேந்த்ர* சோழன் வெண்சாமரை ஒன்றினா

22. ல் அலகு நிலைப்படி குடிஞைக் கல்லால் நிறை பொன் இருபத்து முக்கழஞ்சேய் மஞ்சாடியும் திருப்பொற்கை ஈச்சொப்பி அலகு நிலைப்படி குடி

23. ஞைக் கல்லால் நிறைபொன் இருபத்தொன்பதின் கழஞ்சேய் ஒன்பது மஞ்சாடியும் இவையிற்றிற் கொட்டைத் தலைக்கிட்ட பொன் வரயோலைப்

24. படி அரைக்கழஞ்சே யிரண்டு மஞ்சாடியும் பொற்பூ ஒன்றினால் தன்ம கட்டளைக் கல்லால் நிறை பொன் இரு கழஞ்சாகப் பொற்பூ எண்பதி

25. னாற் . . . . . . ற்றுபதின் கழஞ்சும் திருமாலை ஒன்றினாற் தன்ம கட்டளைக் கல்லால் நிறை பொன் எழு கழஞ்சேய் முக்கா

26. லே அரைக்காலும் ஆடவல்லார் *ஸஹிரா*நமேரு விடங்க ஷேவர்க்கு யாண்டு ௬ ஆவது நாள் *௩௱௪* னால் சாத்தி அருளக்குடுத்த திருவஹிஷேகம் ஒன்றிற்கு [கு]

27. டிஞைக் கல்லால் நிறை பொன் நாற்பத்தொன்பதின் கழஞ்சேய் நாலு மஞ்சாடியு[ம்*] மும்மாவரையும் திருமாலை ஒன்றினாற் மேற்படி கல்லா

28. ல் நிறை பொன் முக்கழஞ்சேய் காலே ஒன்பது மாகாணியும் கம்பி ஒன்றினால் மேற்படி கல்லால் நிறைபொன் கழஞ்சேய் ஒன்பது மாகா

29. ணியும் திருக்காதிற் சாத்தி அருளும் தோடு ஒன்றினால் மேற்படி கல்லால் நிறை பொன் கழஞ்சேய் காலே மூன்று மாவும் வாஹு வலையம் இரண்

2. துயில் ஊழிஉள் இடைதுறை நாடுஞுடர்வன வேலிப் படர் வனவாசியுஞ் சுள்ளிச் சூழ்மதிட் கொள்ளிப்பாக்கையும் நண்ணற் கருமு

3. ரண் மண்ணைக் கடக்கமும் பொருகடல் ஈழத்தரை[சர் தம்]முடியும் ஆங்க

4. வர் தேவியர் ஓங்கெழில் முடியு முன்னவர் பக்கற் தென்னவன் வைத்த சுஞு முடியும் இஜி ஆரமுஞெண்டிரை ஈழமண்ட

5. டல முழுவதும் எறிபடைக் கேரளன் முறைமையிற் சூடுங் குலதனமாகிய பலர் புகழ் முடியுஞ் செங்கதிர் மாலையும் சங்கதி

6. ர்வேலைத் தொல்பெருங்காவல் பல்பழஜீவுஞ்செருவிற் சினவி இருபத்தொருகால் அரைசுகளை கட்ட பரசிராமன் மேல் வரு

7. ஞ் சஜிமற்றீவரண் கருதி யிருத்திய செம்பொற்றிருத்தகு முடியும் மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பரகேஸரி புதூரான ஸ்ரீரா[ஜே]

8. ஞு சோழ தேவற்கு யாண்டு உ ஆவது ஜயங்கொண்ட சோழமண்டலத்து மனைஇற் கோட்டத்துப் புரிசை நாட்டு உரோடகத்து ஸ்ரீராஜ

9. ராஜ ஈசுஸ்வரமுடைய மஹாதேவற்கு உடையார் ஸ்ரீராஜேஞு சோழ தேவர்[க்கு*] யாண்டு கூ ஆவது நாள் . . . னாற் சாத்தி அருளக் குடுத்த திருப்பொ

10. ற் கொள்கை ஒன்றினால் குடிஞைக் கல்லால் நிறை பொன் இருநூற்றுக் கழஞ்சும் யாண்டு எ ஆவது நா(ரா)ள் யரு னா[ல்] உடையார் ஸ்ரீராஜேஞு சே[ா]

11. ழ தேவர் இட்ட பொற்பூ ஒன்றினால் குடிஞைக் கல்லால் நிறை பொன் ஐய்ங்கழஞ்சும் ஊரார் . . பட்டம் மூன்றினாற் தன்ம கட்டளைக்கல்

12. லின் . . .பொன் முப்பதின் கழஞ்சும் ஸ்ரீராஜேஞு சோழன் பொன் நின்றளிகை ஒன்றினான் குடிஞைக் கல்லால் அலகு நிலைப்படி பொன்

13. இருநூற்று நாற்பத்தெண் கழஞ்சும் ஸ்ரீராஜேஞு சோழன் மண்டை ஒன்றினாற் குடிஞைக் கல்லால் அலகு நிலைப்படி பொன் நாற்பத்து முக்கழஞ்

14. சே முக்காலே அரைக்காலும் ஸ்ரீராஜேஞு சோழ [பட்டம்] ஒன்றினாற் குடிஞைக் கல்லால் அலகு நிலைப்படி பொன் பதினைய்ங் கழஞ்சே

15. அரைக்காலும் மாணிக்கத்தாலி ஒன்றினால் ஏறின மாணிக்கம் ஒன்றும் வயிர[ம்*]மூன்றும் பச்சை ஒன்றும் இளநிறஞ் சிவப்பொன்றுமாக கல்லடங்க

16. த்தனம் கட்டளைக் கல்லால் நிறை அரைக் கழஞ்சே மூன்று மஞ்சாடியும் மேற்படி தாலி ஒன்றிநால் ஏறின மாணிக்க[ம்]* ஒன்றும் வயிரம் ஆறும் நடுவு க

30. டினால் மேற்படி கல்லால் நிறை பொன் ஐய்ங்கழஞ்சரையே மஞ்சாடியும் நாலுமாவும் திருக்கைய்க்காறை நாலிநால் உரு எட்டினால் மேற்படி கல்லா

31. ல் நிறை பொன் இருபதின் கழஞ்சரையே மஞ்சாடியும் ஒன்பது மாவரையும் திருக்காற்க்காறை இரண்டினால் உரு நாலினால் மேற்படி கல்லால் நிறை

32. பொன் பதின் முக்கழஞ்சரையும் பாதசாயல் இரண்டினால் மேற்படி கல்லால் நிறைபொன் நாற்கழஞ்சரையே இரண்டு மஞ்சாடியும் எழுமாவும்

33. இத்தேவர் நம்பிராட்டியார் திருவஹிஷேகம் ஒ

34. ன்பதின் கழஞ்சே[ச] ஏழுமாகாணி அரைக்காணி

35. . . கழஞ்சே முக்காலே . . . . . கையு திருமாலை ஒன்றினால் மேற்படி கல்லால்

36. பொன் முக்கழஞ்சே இரண்டு மஞ்சாடியும் த . . அரைக்காணியும் திருவு நாலும் உரு இர

37. ண்டினால் மேற்படி கல்லால் நிறை பொன் கழஞ்சே ஆறு மஞ்சாடியும் மொரு மாவும் வா

38.[ஹ ்] வலைய் இரண்டினால் மேற்படி கல்லால் நிறை பொன் ஐய்ங்கழஞ்சே இரண்டு மஞ்சாடியுமாறு

39. மாவுஞிருக்காறை இரண்டினால் உரு நாலினால் மேற்படி கல்லால் நிறை பொன் எண் கழஞ்சே காலே காணி அரைக்கா

40. ணியும் தி . . . . ப்பட்டிகை ஒன்றினால் மேல்படி கல்லால் நிறை . . . . . கழஞ்சே முக்காலே மஞ்சாடியும் அஞ்சுமாவும்

41. . . காற்காறை இரண்டினால் உரு நாலினால் மேற்ப்படி கல்லால் நிறை பொன் இரு கழஞ்சே மஞ்சாடியும் எட்டுமாவ

42. ரையும் இஷஹவாகந ஷேவர் திருவாபரண முதல் திருவஹிஷே[கம்] ஒன்றினால் குடிஞைக் கல்லால் நிறை பொன் முப்பத்து

43. [எ]ண் கழஞ்சே இரண்டு மஞ்சாடியும் ஒருமா முக்காணி அரைக்காணியும் திருமாலை ஒன்றினால் மேல்ப்படி கல்லால் நிறை பொ

44. ன் முக்கழஞ்சே ஆறு மஞ்சாடியும் மும்மா முக்காணியும் வாஹ ்வலையம் மேற்படி கல்லால்

45. நிறை பொன்னாற் கழஞ்சரையே மூன்று மஞ்சாடியும் ஒன்பது மாகாணி அரைக்காணியும் திருக்கைக்காறை இ

46. ரண்டினால் உரு நாலினால் மேல்படி கல்லால் நிறை பொன் பன்னிரு கழஞ்சே எட்டு மாவரையும் திருக்க[ா]

47. ற் காறை இரண்டினால் உரு னாலினால் மேற்படி கல்லால் நிறை பொன் பதினொரு கழஞ்சரையே அரைமாவரைக்காணியும் இஷப

48. வாஹன தேவர் நம்பிராட்டியார் திருவாபரண முதல் திருவஹிஷேகம் ஒன்றினால் குடிஞை கல்லால் நிறை பொன் பதின்எண் கழஞ்சேய் மு

49. க்காலே ஏழுமாவரையும் திருவும் நூலும் உரு இரண்டினால்

50. [எ]ட்டு மா முக்காணியும்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 503/2013**

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: 16
வட்டம்	: ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1028
ஊர்	: சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	: 227,228/1961-62
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு	: சோழர்	ஊ.க.எண்	: 3
அரசன்	: முதலாம் இராஜேந்திரன்		

இடம் : சிவன் கோயில் தெற்கு ஜகதி

குறிப்புரை : முதலாம் இராஜேந்திர சோழனின் மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. இவ்வூர் ஸ்ரீராஜராஜீஸ்வரமுடையார் கோயில் பண்டாரத்திலிருந்து சிங்காளந்தகச் சதுர்வேதி மங்கலத்து மகாசபையினர் நூறு கழஞ்சு பொன்னைப் பெற்றுக் கொண்டு அதற்கு வட்டியாக ஆண்டுக்கு 166 கலம் இரு தூணி நெல் கோயிலில் அளந்து கொடுப்பதாக சம்மதித்தச் செய்தி கூறப்பட்டுள்ளது. அதே போன்று கோட்டூர் எனும் சோழவிச்சாதிரச் சதுர்வேதி மங்கலத்து மகாசபையினர் 40 கழஞ்சுப் பொன் பெற்றுக் கொண்டு 66 கலம், 2 தூணி நெல் கோயில் பண்டாரத்தில் வந்து அளந்திட சம்மதித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. [ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ திருமன்]னி வளர இருநிலமடந்தையும் போர் செயப் பாவையும் சீர்தனிச் செல்வியும் [தன்பெருந்தேவியராகி இன்புற]
2. இடைதுறை நாடுஙடர்வன வேலிபடர்வன வாசியுஞ் சுள்ளிச்சூழ் மதிட் கொள்ளிப் பாக்கையுந் நண்ணற் கருமுரண்
3. ஈழத்தரயர் தம்முடியுமாங்கவர் தேவியரோங் கெழில் [முடி]யும் முன்னவர் பக்கற்றென்னவர் வைத்த சுஙர முடி
4. ஈழ மண்டல முழுவதும் எறிபடைக் கேரளர் முறைமையிற் சூடும் [குலத]னமாகிய பலர் புகழ் முடியும் . . . .
5. வேலைத் தொல்பெருங்காவற் பல்பழஷீவுஞ் செருவிற் சினவில் இருபத்தொரு காலரைசு களைகட்ட பரசுராமன் மேல் வருஞ் . . .
6. செம்பொற்றிருத்தகு முடியும் பயங்கொடு பழிமிக முயங்கியில் முது கிட்டொளித்த செயசிங்கனைப் பெரும் புகழோடும்

7. பாடி ஏழரை இலக்கமும் நவநெதிக் குலப்பெரு மலைகளும் விக்கிரம வீரர் சக்கர கோட்டமும் முதிர்பட வல்லை மதுர மண்டல . . .

8. நாமனைக் கோனையும் வெஞ்சின வீரர் பஞ்சப்பள்ளியும் பாசடைப் பழன மாசுணி தேசமும் அயர்வில் வண் கீர்த்தி

9. . . . . . குலத்திநி தனை விளையமர்க் களத்துக் [கிளையோடும் பிடித்துப் பலதனத் தொடு திறை] . . . .

10. [குலதனக் குவையுங் கிட்டருஞ் செறிமினை] ஒட்ட விஷயமும் பூசுரர் சேர்நல் கோசலநாடுஜூபாலனை வெம்முனை அழித்து.

11. வண்டுறை சோலைத் த[ண்ட புத்தியும் இ]ரண சூரனை முரணுறத் தாக்கித் திக்கணை கீர்த்தித் தக்கண லாடமும் கோவிந்த சஜன்மா. . .

12. தங்காத சாரல் [வங்காள தேசமும்] தொடுகடல் சங்கு கொட்டல் மயில்பாலனை வெஞ்சமர் வளாகத்தஞ்சுவித்தருளி

13. ஒண்திறல் யானை[யும் பெண்டிர்] பண்டாரமும் நித்தில நெடுங்கடலுத்திர லாடமும் வெறிமலர்த் தீர்த்தத்து

14. தறிபுனல் கங்கையும் அலைகடல் நடுவுற் பலகலஞ் செலுத்திச் சங்கிராம வி[சயோத்]துங்கபூனாகிய கிடார

15. த்தரயனைய் வாகயம் யெருகடல் கும்பக்கரியோடு மகப்படுத்துரிமை[யில் பி]றக்கிய பெருநதிப் பிறக்க

16. மும் ஆர்த்தவன் அகநகர்ப் போர்த்தொழில் வாய்தலில் விச்சாதிர தோர[ண]மும் முத்தொளிர் புனைமணிப் புத

17. வமும் [கனமணிக்] கதவமும் நின்ற ஸ்ரீ விஜயமும் துறை நீர்ப் பண்ணையும் நன்மலையூரெயில்

18. [தொ]ன் மலையூரும் ஆழ்கடலகழ் சூழ் மாயிருடிங்கமும் கலங்கா வல்வினை இலங்காசோ[கமும் காப்புறு நி]

19. றை புனல் மாப்பாளமும் காவலன் புரிசை மேவலிபங்கமும் . . . வளைய கலைத்தக்கோ

20. கார்புகழ் தலைதக்கோலமும் தீதமர்வல்வினை மாதமலிங்கமும் கலாமுரிக் கடுந்திறல் இலாமுரித்தேசமும் தேனக்கர்

21. பொழில் மானக்கவாரமும் தொடுகடற் காவல் கடுமுரட் கடாரமும் மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பரகேஸரி *வஹ்ராந*

22. உடையார் ஸ்ரீ ராஜேஜூ சோழ தேவற்கு யாண்டு ௰௬ ஆவ[து] ஜயங்கொண்ட சோழ மண்டலத்து பெருமூர் நாட்டு

23. [நடுவன்மலை சிங்காளந்தக*] . . . *ஸூதுவெஓ்தி* மங்கலத்து *ஊஹாஸலெஹை* . . .

24. எழுத்து மனையிற் கோட்டத்துப் புரிசை நாட்டு உரோடகத்து ஸ்ரீராஜராஜ ஈஸ்வரமுடைய மஹாதேவர்

25. . . . ஸ்வரகன்மிகன் பக்கல் இத்தேவர் பண்டாரத்து யாங்கள் கொண்ட கடவ பொன் ௬௩ கட்டளைக்கல்

26. லால் துளை நிறை பொன் நூற்றுக் கழஞ்சு இப்பொன் நூற்றுக் கழஞ்சும் கொண்டு கடவோமாக கொண்ட பரிசாவது

27. பொன் கழஞ்சிநுக்கும் ஆண்டு பலிசை இராஜகேசரியால் அளந்து ஆக வந்த நெல் நூற்றறுபத்தறு கல

28. நே இரு தூணியும் ஆட்டாண்டு தோறும் சங்க்ராதித்தவற் கொண்டு இத்தேவர் திருமுற்றத்தே வந்து தேவர் கன்மிக

29. ள் வசம் பண்டாரத்து அளந்து தரவு கொள்வோமாகவும் இம்முதற்பொன் கொள்கவென்று சொல்லப்பெறா

30. தோமாகவும் இந்நநிறம்பில் ஆட்டாண்டுத்தோறும் நெல்லு வழுவாமை அளப்ப

31. பெறுவதாகவும் இம்மன்றபாடு இறுத்தும் இப்பலிசை ஆட்டாண்டு தோறும் நெல்லு . . களம் அளப்ப

32. . . . .ண்டவர்க்கும் மாவடை குடுப்பதாகவும் இப்படி இட்டுக்குடுத்தோம்

33. . . . து மங்கலத்தோம் பணிக்க எழுதினேன் இவூர் ஸ்தன நாக்கய்ண்ன்

34. னான பண்டிதப் பிரியனேன் இவை என் எழுத்து யாண்டு ௰௬ ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மணவிற் கோட்டத்து

35. கன்றூர் நாட்டு கோட்டூராகிய சோழச்சதுர்வேதி மங்கலத்து சபையோம் யெழுத்து இக்கோட்டத்து புரிசை நாட்டு

36. உரோடகத்து ஸ்ரீராஜராஜ ஈஸ்வரமுடைய உடைய ஆதிதாஸ சண்டேஸ்வரன் பக்கல் இத்தேவர் பண்டாரத்து யாங்கள்

37. கொண்டு கடவ பொன் ௬௩க்கட்டளை கல்லால் துளை நிறை பொன் இப்பொன் நாற்பதின் கைக் கொண்டு கடவோம் கொண்ட பரிசாவது

38. பொன் கஞ்சினுக்கு வரை பலிசை இராஜகேசரியால் அளந்து ஆக வந்த நெல் அறுபது கலநே இரு தூணியும்

39. பண்டாரத்து அளந்து தரவு கொள்கவும் இம்முதற்பொன் கொள்கவென்று சொல்ல மாகவும் கை கொண்டு இதற்கு

40. . . நிசதம் நேர் பொன் அரசி பெறுவதாக

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 504/2013

மாவட்டம் : காஞ்சிபுரம்		ஆட்சி ஆண்டு	: 15
வட்டம் : ஸ்ரீபெரும்புதூர்		வரலாற்று ஆண்டு	: கி.பி. 1267
ஊர் : சிவபுரம்		இ.க.ஆ.அறிக்கை	: 290/1959-60
மொழி : தமிழ்		முன் பதிப்பு	: -
எழுத்து : கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு : பாண்டியர்		ஊ.க.எண்	: 4
அரசன் : முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்			

இடம் : சிவன் கோயில் அர்த்த மண்டபத் தென்புறம் நுழைவாயில் அருகில்

குறிப்புரை : ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணவிற் கோட்டத்து புரிசை நாட்டு உரோடகம் என்ற இவ்வூரிலுள்ள ஸ்ரீ ராஜராஜ ஈஸ்வரமுடைய மகா தேவர் கோயிலில் சந்தி விளக்கு ஒன்று எரிப்பதற்கு கூவம் என்ற தடாக சமுத்திர நல்லூரைச் சேர்ந்த வாசுதேவன் காராணை விழுப்பரையன் என்பவரின் மகள் ஆறைச்சியார் என்பவர் கொடையாக அளித்த ஒன்பது பணத்தையும் பெற்றுக்கொண்டு இக்கோயில் சிவபிராமணர்கள் விளக்கெரிக்க சம்மதித்தச் செய்திக் கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோற்சட பன்மர் திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவற்கு யரு வ
2. து ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மணவிற் கோட்டத்து புரிசை நாட்டு உரோடகத்து ஸ்ரீ இராஜ
3. ராஜிசுரமுடைய மாஷேவற்கு கூவமான தியாக சமுத்திர நல்லூர் இருங்கணூர்க் கிழவன் வாசுதேவன் காரா
4. னை விழுப்பரையன் பி[ள்]*ளை ஆறைச்சியார் வைத்த சந்தி விளக்கு க இவ்விளக்கு ஒன்றும் இக்கோயில் சிவப்
5. பிராமணர் காஸ்ிவ கோத்திரத்து உருத்திர பட்டனும் க[வு]ஸிக கோத்திரத்து ஆளவந்தார் பட்டனும் இவர்
6. பக்கல் கைக்கொண்ட பணம் கூ இப்பணம் ஒன்பதும் கைக்கொண்டு சந்திராதித்தவரை திருமுன்பே திச விளக்கு
7. எரிக்க கடவோமாக சம்மதித்தோம் உருத்திரபட்டனும் ஆளவந்தான் பட்டனும் இவ்வி
8. ருவோம் இது ஸிஊமஹெஸ்வர ரக்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 505/2013

மாவட்டம் :	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு :	15
வட்டம் :	ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1267
ஊர் :	சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை :	289/1959-60
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	-
எழுத்து :	கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு :	பாண்டியர்	ஊ.க.எண் :	5
அரசன் :	முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன்		

இடம் : சிவன் கோயில் அர்த்த மண்டபத்தின் தென்புறச் சுவர்.

குறிப்புரை : ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்து புரிசை நாட்டு உரோடகம் என்ற இவ்வூரிலுள்ள இராஜராஜீஸ்வரமுடைய மகாதேவர் கோயிலுக்கு சந்தி விளக்கு ஒன்று எரிப்பதற்கு மாத்தூர் கிழவன் வடுகன் இரா விழுப்பரையனின் பெண் பிள்ளை (மகள்) உமையாண்டை என்பவள் கொடையளித்த ஒன்பது காசுகளையும் இக்கோயில் சிவபிராமணர்கள் சிலர் பெற்றுக் கொண்டு விளக்கெரிக்க சம்மதித்தச் செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* கோச்சடபன்மர் திரிபுனச்சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவற்கு வரு யரு வது
2. ஜ[ய]*ங்கொண்ட சோழ மண்டலத்து மணவிற் கோட்டத்து புரிசை நாட்டு உரோடகத்து ஸ்ரீஇராஜராஜிசுரமுடை
3. ய ம[ா]ஹாதேவற்கு இவ்வூர் மாத்தூர் [கி]ழவன் வடுகன் இரா விழுப்பரையன் பெண் பி[ள்]*ளை உ[மை] யாண்டை வைத்த சந்
4. தி விளக்கு க இ[வ்]*விளக்கு ஒன்றும் இக்கோஇல் *ஶி*வப் பிராமணர் காசிவ கோத்திரத்து உருத்திரபட்டனும் கவிசிக கோ
5. த்திரத்து ஆளவந்தான் பட்டனும் கை[க்கெ]*ாண்ட பணம் கூ இப்பணம் ஒன்பதும் கைக்கொண்டு சந்திராதித்தவரை சந்தி
6. விளக்கு திருமுன்பே திருவிளக்கு எரிக்க கடவோம் உருத்திர பட்டனும் ஆளவந்தான் பட்டனும் இவ்விருவோ
7. ம் இது *ஸ்ரீமாஹேசுர* இ[ர*]க்ஷை

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 506/2013

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	7
வட்டம்	:	ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1019
ஊர்	:	சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	:	233/1961-62
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	6
அரசன்	:	முதலாம் இராஜேந்திரன்			

இடம் : சிவன் கோயிலின் அர்த்த மண்டபக் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : முதலாம் இராஜேந்திர சோழனின் மெய்கீர்த்தியுடன் தொடங்குகிறது இக்கல்வெட்டு. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்துக் கன்றூர் நாட்டு கூவமான மதுராந்தக நல்லூர் உடன் சேர்ந்த சிற்றரையர் பூதூரான ஸ்ரீ மதுராந்தக சேரியிலுள்ள ஏரிக்கு பாலாற்றிலிருந்து நீர் பாய்கிற வாய்க்காலை இவ்வூர் ஸ்ரீராஜராஜ ஈஸ்வரமுடைய மஹாதேவற்கு இறையிலி தேவதானமாகக் கொடையளித்து ஊரார்கள் கல்லில் வெட்டுவித்தச் செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னி வளர இருநில மடந்தையும் போர்ச் செயப்பாவையுஞ் சீர்த்த
2. ன் பெருஞ்தேவியராகி இன்புறதெடு துயிலூழியிடை துறை நாடு ந்துடர்வன வேலிப்படர்
3. [வன வாசியு]ஞ் சுள்ளி சூழ் மதிட் கொள்ளிப்பாக்கையு நண்ணற் கரு முரண் மண்ணைக் கடக்கமும் பெ[ா]
4. கடலீழத்தரைசர் தமுடியும் ஆங்கவர் தேவிய ரோங்கெழில் முடியு முன்னவர் பக்கற் றென்னவர் வைய்த்[த]
5. சுஙர முடியும் இஙிரனாரமு ஞெண்டிலை ஈழ மண்டல முழுவதும் எறிபடைக் கேரளன் முறைமையிற் சூடுங்
6. குலதனமாகிய பலர் புகழ் முடியுஞ் செங்கதிர் மாலையுஞ் சங்கதிர் வேலைத் தொல் பெருங் காவற் பல்ப
7. ழஙீபவுஞ் செருவிற் சினவி இருபத்தொரு காலரைசு களைகட்ட பரசுராமன் மேல் வருஞ்சாஙிபற்றிய் வர[ன்]

8. கருதி இருத்திய செம்பொற்றிருத்தகுமுடியு[ம் *] மாபொரு தண்டாற் கொண்ட கோப்பரகேஸரி வந்மரான ஸ்ரீராஜே

9. ந்த்ரசோழ தேவற்கு யாண்டு எ ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்துக் க

10. ன்றூர் நாட்டு கூவமான மதுராந்தக நல்லூர் ஊரோம் எங்களூரோடும் ஏறின சிற்[ற *]ரையர் பூதூரா[ன *] ஸ்ரீ [மது]

11. ராந்தக சேரிய் ஏரிய்க்கு பாலாற்றின் நின்[றே]ய் பா[ய் *]ந்த வாய்க்காலுக்கு கீழ்பாற்கெல்லை சிற்றரையர் பூதூரான ஸ்ரீ மதுரா

12. ந்தகச்சேரி எல்லைய்க்கு மேற்க்கும் தென்பாற் கெல்லை ஸ்ரீராஜராஜஈஸ்வர முடையார் தேவதானம் உரோடகத்து எ

13. ல்லைக்கு வடக்கும் மேல்பாற் கெல்லை இவ்வூர் [உ *]ரோடகத்து எல்லைக்கு கிழக்கும் வடபாற்கெல்லை உரோடகத்து நிலத்

14. துக்கு தெற்கும் ஆக இன்னான் கெல்லை உள்ளும் அகப்பட்ட சிற்றரையர் பூதூர்[ா] ஏரிய்க்கு பாயந்தஆற்றுக்கால் ஸ்ரீராஜரா

15. ஜஈஸ்வரமுடைய மஹாதேவற்க்கு இறைஇலி தேவதானமாக உதக பூர்வ[ம் *] செய்து ஸிலாலேகை செய்து குடுத்தோம் கூவ

16. மான மதுராந்தக நல்லூர் ஊரோம் ஊர் சொல்ல எழுதினேன் கருங்கணங் கிழவன் சட்டி சஹனேன் இவையென்

17. எழுத்து ।–

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: 27
வட்டம்	: ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1045
ஊர்	: சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	: 234/1961-62
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு	: சோழர்	ஊ.க.எண்	: 7
அரசன்	: முதலாம் இராஜாதிராஜன்		

இடம் : சிவன் கோயிலில் அர்த்த மண்டபக் கிழக்குச் சுவர்.

குறிப்புரை : முதலாம் இராஜாதிராஜன் மெய்கீர்த்தியுடன் தொடங்குகிறது. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்து புரிசைநாட்டு சிவபுரத்து ஸ்ரீராஜராஜ ஈஸ்வரமுடையார்க் கோயிலில் ஆதித்த வாரம்(ஞாயிறு)தோறும் இறைவனை ஆதித்த வாரப் பெரும்பலி எழுந்தருளச் செய்து சிறப்பு வழிபாடு நடத்துவதற்காக இக்கோயிலுக்கு அளிக்கப்பட்டிருந்த பழந்தேவதானம் துப்புரவு பத்து என்ற நிலத்திலிருந்து காணிக்கடனாக ராஜகேசரி என்ற அளவால் நெல்லு முப்பத்துநாற்கலம் பெறப்பட்டு வந்தது. இதற்கு காலளவு பறி கூறியாக ஒவ்வொரு கலநெல்லுக்கும் முன்னாழி உரி நெல் வாசியாக ஏற்றி முப்பத்தைந்து கலநே பதக்கு எழுநாழி நெல் என்று நிர்ணயிக்கப்பட்டது. இதிலிருந்து,

(1) கனியமுதுக்கும் திருவமுதுக்கும் ஓராண்டுக்கு முக்கலநே முக்குறுணியும்

(2) திருவாராதனை செய்வார், திருஉண்ணாழிகை உடையார், மாணிகள் அறுவர், பதியார் 24 பேர், பஞ்சாசாரியர், வீணை வாசிப்பான், உடுக்கை வாசிப்பான், திருப்பதியம் பாடுவான், திருவாய்க் கேழ்வி உடையான், பாடவியன் உள்ளிட்ட உவச்சர் பதின்மர், கவரி பிணாக்கள் 12பேர், திருப்பள்ளித் தொங்கலிடுவார் நால்வர், கணக்கன், பண்டாரி, திருமெய்காப்பார் நால்வர், திருப்பள்ளித் தாமம் பறித்துக் தொடுப்பான்- ஆகியோருக்கு ஒருபங்குக்கு பதக்கு நெல் வீதம் 55 பங்குக்கு ஓராண்டுக்கு 29 கலனே தூணிக்குறுணி நாநாழியும்

(3) விளக்குப் பிடிப்பார் நால்வர், கொடிப்பிடிப்பார் நால்வர், ஆகியோருக்கு நெல்லு இருகலன்

ஆகமொத்தம் முப்பத்தைந்து கலன் பதக்கு ஏழுநாழி நெல் அளிக்கப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திங்களேர்த்தரு தன் றொங்கல் வெண்கு[டை]டக்கீழ் நிலமகள் நிலவ மலர் மகட் புணர்ந்து செங்கோலோ
2. ச்சிக் கருங்கலி கடிந்து மன்னு பல்லூழியில் தென்னவர் மூவருள் மானாபரணன் பொன்முடி ஆனாப்பருமதிப் பசு
3. ந்தலைபொருகளத்தரிந்து வீரகேரளனை யானைக் கிடுவித்து சேவிற் சுந்தர பாண்டியனைத் திசை கெடத் தொல்லையுள்
4. முல்லையூர்த்துரத்தி யொல்கலில் வேணாட்டரைசைச் சேணாட்டொதுக்கி மேவுபுகழ் மிராய குடி மூவர் கெட முநி
5. ந்து வேலைகெழு காந்தளூர்ச் சாலை கலமறுத்தாகவமல்லனும் அஞ்ச கேவுதன்றாங்கரும் படையால் ஆங்கவன் சே
6. னையுள் கண்டப் பையயநுங் கங்காதரனும் வண்டமர் களிற்றொடு மடிய திண்டிறல் விருதர் விக்கியும் விசையாதித்[த]
7. நுங் கருமுன் சாங்க மைய்ய முதலினர் [சமரபீருவொத] துடைய நிமிர் சுடர் [பொன்னோடு அய்ங்க]ரிப் புரவியோடும் பிடித்
8. து தந்நாடையில் ஜயங்கொண்டொன்னார் கொள்ளிப்பாக்கை யுள்ளெரி மடுத்து வில்[லவர்] மீனவர் வெஞ்சினச்சளுக்கி
9. யர் வல்லவர் முதலெந வணங்க வீற்றிருந்த ஜயங்கொண்ட சோழன் உயர்ந்த பெரும்புகழ்க் கோவிராஜகேசரிவன்மரான உடையார்
10. ராஜாதிராஜ தேவர்கு யாண்டு ௨௰௭ ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்துப் புரிசை நாட்டுச் சி
11. வபுரத்து ஸ்ரீராஜராஜஈஸ்வரம் முடையார்க்கு ஆதித்த வாரந்தோறும் ஆதித்த வாரப் பெரும்பலி எழுந்தருளுகைக்கு நிவந்தஞ் செய்த பரி
12. சாவது இத்தேவர் பழந்தேவதானம் துரப்புவால் பத்தும் ராஜகேசரியால் காணிக்கடன் நெ[ந]ல்லு முப்பத்து நாற்கலம் இவற்
13. றுக்கு காலளவுறை பறி கூலி கலத்துவாய் முன்னாழி உரி வாசி ஆக ஏறு நெல்லுக்கலநே பதக்கெழுநாழியும் ஆக ஏற்றி நெல்லு
14. முப்பத்தைங்கலநே பதக்கெழுநாழி இவற்று . . . வதம் [கறிகளுக்குதி ருவமுது உரிக்கு] இரு நாழிக்கு நெல் ஐஞ்ஞாழி
15. யும் கறியமுதுக்கு நெல்லு நாழியும் ஆக ஒராண்டிநுக்கு நெல்லு முக்கலநே முக்குறுணியும் திருவாராதனை செய்வானுக்கும் திருவுண்ணா
16. ழிகை உடையார்களுக்கும் மாணிகள் அறுவருக்கும் பதியார் இருபத்து நால்வர்க்கும் பஞ்சாசாரியர்க்கும் வீணை வாசிப்பானுக்கும் உடு

17. க்கை வாசிப்பானுக்கும் திருப்பதியம் பாடுவானுக்கும் திருவாய்க் கேழ்வி உடையானுக்கும் பாடவியனுள்ளிட்ட உவச்சர் ஒருபதின்மரு

18. க்கும் கவரி பிணா[க்*]கள் பன்னிருவர்க்கும் திருப்பள்ளித் தொங்கலிடுவார் நால்வர்க்கும் கணக்கனுக்கும் பண்டாரிக்கும் திருமெய்[க]ாப்பார் நால்

19. வ[ரு]க்கும் திருப்ப[ள்*]ளித்தாமம் பறித்துக் தொடுப்பானுக்கும் பதக்கு நெல்லுக்குப் பங்கு ஒன்றாக வஞ பங்கு ஐம்பத்தைஞ்சுக்கு இ

20. [வை] பங்கொன்றினுக்கு ஆண்டு வரை நெல்லு தூணி பதக்கு நாநாழி ஆக வஞ நெல்லு இருபத்தொன்பதின்கலனே தூணிக்[கு]

21. றுணி நாநாழியும் விளக்குப்பிடிப்பார் நால்வர்க்கும் கொடிப்பிடிப்பார் நால்வர்க்கும் நெல்லு இருகல ே

22. [ந] முப்பத்தைங் கலநே பதக்கெழு [நாழி] . . . .[ப]நாஹேஸ்வர ரக்ஷை–

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 508/2013**

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: 8
வட்டம்	: ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1020
ஊர்	: சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	: -
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு	: சோழர்	ஊ.க.எண்	: 8
அரசன்	: முதலாம் இராஜேந்திரன்		

இடம் : சிவன் கோயில் அர்த்த மண்டபக் கிழக்குப்புறம்

குறிப்புரை : முதலாம் இராஜேந்திர சோழனின் மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்து புரிசை நாட்டு உரோடகத்து ஸ்ரீராஜராஜ ஈஸ்வரமுடைய மகாதேவர் என்ற இறைவனுக்கு திருநந்தா விளக்கு இரண்டு எரிப்பதற்கு மன்னர் முதலாம் இராஜேந்திர சோழ தேவரே 180 ஆடுகள் கொடையளித்தச் செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. திருமன்னி வளர இரு நில மடந்தையும் போற் செயப்பாவையும் சீர்த்தனிச் செல்
2. வியும் தன்பெருந்தேவியராகி இன்புற நெடிதியல் ஊழிஉள் இடைது[றை] நாடும் படர்வன
3. வாசியும் [படர்வன வாசியும்] சுள்ளி சூழ் மதிள் கொள்ளிப் பாக்கையும் நண்ணற் கருமுரண் மண்[ணை]
4. க்கடக்கமும் பொருகடல் ஈழத்தரையர் தம்முடியும் ஆங்கவர் தேவியரோங் கெழில் முடி
5. யும் முனிவர் பக்கல் தென்னவன் வைத்த சுந்தரமுடியும் இந்திரனாரமும் தெண்டிரை ஈழ
6. மண்டல முழுவதும் எறிபடைக் கேரளன் முறைமையிற் சூடுங் குலதனமாகிய பலர் புகழ்
7. முடியுஞ் செங்கதிர் மாலையுஞ் சங்கதிர் வேலைத் தொல்பெருங்காவற் பல் பழதீய்வுஞ் செரு

8. வி[ற்சினவி] இருபத்தொரு காலரைசு களைகட்ட பரசுராமன் மேல் வருஞ்சாஞிமற்றிய்வரன் கருதி இரு

9. த்திய செம்பொற்றிருத்தகு முடியு[ம்*] மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பரகேசரி பன்மரான ஸ்ரீராஜேந்த்ர சோ

10. ழ தேவர்க்கு யாண்டு அஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்து புரிசைநாட்டு உரோடகத்

11. து *ஸ்ரீராஜராஜ*ஈ*ஸ்வ*ரமுடைய *மஹா*[*ர**] ஷேவர்க்கு உடையார் *ஸ்ரீரா*ஜேந்த்ர சோழ தேவர் வைய்த்த திருநஞா விளக்கு இரண்டினா

12. ல் ஆடு நூற்றெண்பது :-

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	21
வட்டம்	:	ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1033
ஊர்	:	சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	:	280/1959-60
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	9
அரசன்	:	முதலாம் இராஜேந்திரன்			

இடம் : சிவன் கோயில் அர்த்த மண்டப வடக்குச் சுவர்

குறிப்புரை : முதலாம் இராஜேந்திரசோழனின் மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது இக்கல்வெட்டு. சோழ மண்டலத்து உய்யக் கொண்டார் வளநாட்டு திருவழுந்தூர் நாட்டு கடவூர் அரிந்தம நல்லூருடையான் நீலன் வெண் காடன் என்பவன் இக்கோயிலுக்குக் கொடுத்த பொன் துளைநிறை காசுகளை கழஞ்சாக மாற்றும் போது வந்த பொன் இருபத்தஞ்சு கழஞ்சு. இப்பொன்னுக்கு வைகாசி மாதம் முதல் ஓராண்டுக்கு ஒரு கழஞ்சுக்கு வட்டியாக ஒரு மாதத்திற்கு மஞ்சாடி பொன் நிறையுள்ள காசுகள் வீதம் 25 கழஞ்சுக்கு வட்டியாக வந்த பொன் 15 கழஞ்சு. இப்பொறுப்பை ஏற்றுக் கொண்ட சிலர் இப்பொன் கொண்டு ஸ்ரீராஜராஜீஸ்வரமுடையார் கோயில் இறைவனுக்கு நிலம் விலைக்கு வாங்கினர். இந்நிலத்திற்கு கட்ட வேண்டிய வரிகளையும், முதலாகச் செலுத்தப்பட்ட 25 கழஞ்சு பொன்னுக்கு வரியையும் தாங்களே செலுத்துவதாகக் கூறி, இந்நிலத்திற்கு நீர்பாய்ச்சும் உரிமைகள் பலவற்றையும் வரையறுத்துக் கூறி கையெழுத்திட்டுள்ளனர்.

இந்நிலம் ஸ்வாமி போகமாக அளிக்கபட்டதால் அந்நிலத்தி லிருந்து வரும் நெல்லு ஆண்டுக்கு நூற்றெண்பத்தேழு கலனே இரு தூணிப் பதக்கு. இந்நெல் கொண்டு கோயிலுக்கு செய்யும் நிவந்தம் கூறப்பட்டுள்ளது.

(1) இறைவனுக்கு உச்சியம்போதில் [மதியம்] அமுது படைக்கின்ற போது பக்கத்தில் திருச்சுற்று மாளிகையிலே உத்தமாக்கிரமமாக வேதம் ஓதும் பிராமணர் ஐவருக்கு ஒருவருக்கு அரிசி இருநாழி வீதம் ஐவருக்கும் நெல்லும், நெய்யும் புழுக்குக்கறி, மிளகுப்பொடி கலந்த கறி, மரக்கறி மூன்று, மிளகு, உப்பு, தயிர், பாக்கு வெற்றிலை, விறகு, ஐந்து இலையிட்டு உண்ணும் பிராமணன் ஒருவருக்கும் நெல்லு,

புடவை முதல் ஆகியனவற்றிற்கு ஒருவர்க்கு ஆகும் செலவு வீதம் ஐவர்க்கு ஆகும் செலவுகள் மேற்கூறிய ஒவ்வொன்றுக்கும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு அறுதியிட்டு கூறிய பின் கோயில் ஸ்ரீ காரியம் பார்ப்பார், உண்ணாழிகை உடையார் சிவ பண்டாரிகள், தேவகன்மிகள் ஆகியோர் கல்லில் வெட்டுவித்தனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீ திருமன்னி வளர இரு நிலமடன்யையும் போர் செயற்பாவையுஞ் சீர்த்தநிச் செல்வி
2. யுஙு ன் பெருஞேவியராகி இன்புற நெடுதுயிலூழியு[ள்இ]டை
3. துறை நாடுஙு டர்வன வேலி படர்வன வாசியுஞ் சுள்ளி சூழ்மதிட் கொள்ளிப் பாக்கையு நண்ணற்க
4. ருமுரண் மண்ணைக் கடக்கமும் பொரு கடலீழத்தரைசர்தமுடியும் ஆங்கவர் தேவியரோங் கெழில் முடியும் முன்
5. னவர் பக்கற் றென்ன[வர்*]வைய்த்த சுஙரமுடியும் இஙி[ர*]னாரமு[ம்*] தெண்டிரை ஈழ மண்டல முழுவதும் எரிபடைக்
6. கேரள[ன் முறைமை]யின் சூடுங்குலதனமாகிய பலர் புகழ் முடியுஞ் செங்கதிர் மாலையும் சங்கதிர் வே
7. லைத்தொல்பெருங்காவற் பல்பழஙீவும் செருவிற் சினவி இருபத்தொரு காலரைசு களைகட்ட பரசு ராம
8. ன் மேல் வருஞ் சாஙிமற்றீவரண் கருதியிருத்திய செம்பொற்றி தகுமுடியும் பயங்கொடு பழிமிக முயங்கியில் மு
9. [1]து கிட்டொளித்த சியசிங்களைப் பெரும் புகழோடும் பீடிய[ல்] இரட்ட பாடி ஏழரையிலக்கமும் நவெ[ந]திக்குல
10. [ல்]ப்பெருமலைகளும் விக்கிரம வீரர் சக்கர கோட்டமும் முதிர்பட வல்லை மதுர மண்டலமுங் காமிடை வளை நாமணைக் கோனையு[ம்]
11. [ெ]வஞ்சிலை வீரர் பஞ்சப்பள்ளியும் பாசடைப் பழநம் மாசுணி தேசமுமயர்வில் வண் பூர்த்தி[2] யாதி நகரவையில் சஙிரன் ெ

---

1. 'து' என்ற எழுத்திற்கு முன்னால் 'ப்பரகேஸரிவ' என எழுதப்பட்டுள்ளது.
2. கீர்த்தி - என்று இருத்தல் வேண்டும்

12. றால் குலத்தி ந்த்ர ரதநை[1] வினையமர் களத்துக் கிளையொடும் பிடித்து பலதந[த் *]தோடு நிறை குலதநக் குவையும் கிட்டரும் செறி[மு]ளை ஒட்ட விசை[ய]

13. மும் பூசுரர் சேர நல்க்கோசல நாடுந்தந்மபாலநை வந்முநையழித்து வண்டுறை சோலை தண்ட புத்தியும் இரணசூரநை முறணுற[த்]

14. தாக்கி தக்கணைக் கீர்த்தி தக்கணலாடமுந் கோவிந்த சந்தந் மாவிழி நோட தங்காத சாரல் வங்காளதேசமும் தொடு கடற்சங்கு வொட்ட[ல்]

15. மயில்பாலநை வெஞ்சம[ர் *] வளாகத்தஞ்சு வித்தருளி ஒண்டிறல் யாநையும் பெண்டிர் பண்டாரமும் நித்தில நெடுங்கடலுத்திரலாடமும் வெறிம

16. லர் தீர்த்த[த்] தெறி புநல் கங்கையும் அலைகடல் நடுவிற் பல கலம் செலுத்தி சங்கிராம விசையோத்துங்க பந்மநாகிய கடாரத்தரசநை

17. வாகையம் பொருகடற் கும்பக் கரியொடு மகப்படுத்துரிமையிற் பிறக்கிய பெருநிதிப் பிறக்கமுமார்த்தவ நகர் நக[2]ப் போர்த் தொழில் [வா]

18. வாசலில் விச்சாதிர தோ[ர *]ணமும் மொ[ய *]த் தொளி[ர் *] புந மணிப் புத[ல]வமுங் கநமணிக் கதவமும் நிறைசீர் விசையமும் துறை நீர்ப்[ப]

19. ந்தையும் ந[ன் *]மலை யூரெ[யி *]ற்றொந் மலையூருமாழ் கடலகழ் சூழ் மாயி[ரு *]டிங்கமும் கலங்கா வல்விநை யில[ங்]கா சோபமும் கொப்புறு நிறை புநல்

20. மாபப்பாளமுங் காவலம் புரிசை மேவிலி பங்கமும் விளைப்பந்தூருடை வளைப்பந்தூறும் கலைத்தக்கோ[ர் *] புகழ் தலைத்தக்கோ

21. காலமுங் கிதமா[3]வல்விநை மாதமலிங்கமுங் கலாமுதிர் கடுந்திறல் விலாமுரி தேசமுந்தேநக்க வார்பொழில் மாநக்க வாரமுந்தொடுக

22. டற் காவற் கடுமுரட் கடாரமுமாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பர கேசரி வந்மராந உடையார் ஸ்ரீ ராஜேந்த்ர சோழதேவர்[க் *]கு யாண்டு ௨௰௧

23. ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மணையில் கோட்டத்து புரிசை நாட்டு சிவபுரத்து ராஜராஜஈஸ்வரமுடையா[ர்] தேவதாநம்

24. இக்கோட்டத்து பாசாலி நாட்டுப் பாசாலிப் பாசாலிக் கிழவந் சேந்தந் தணிய மலையும் சூரி[ய *]ந் மாதேவடிகளு மறுப்பட்டி கணவதி

---

1. திரரதனை என்று இருத்தல் வேண்டும்

2. மார்த்தவ நகநகர் என்று இருத்தல் வேண்டும்

3. கலங்கா -

25. க்கிரம வித்தனும் உள்ளிட்டாரோம் கைய்யெழுத்து இதேவர் பண்டாரத்துக்கு முதலாக சோழ மண்டலத்து உய்யக் கொண்டா[ர்*]வ

26. ள நாட்டு திருவழுஞூர் நாட்டு கடவூர் அரிஞமை நல்லூருடையா[ந்*] நீலந் வெண்காடந் குடுத்த பொந்நி[1] யாங்கள் [செ]காண்டு கடவ

27. துளை நிறை காசுகல்லால் உயரு ப இப்பொந் இருபத்தைஞ்[சு*] கழஞ்சுங் கொண்ட பரிசாவது இவ்வாண்டு வைகாசித் திங்கள் முதல் கழஞ்சிந் வாய் காசி[ந்*]நிறை திஞ்சள[2]மஞ்சாடிப் பொந் பொலிசை பொலி(வத)வதாக இப்பரிசு வந்த பலிசையால் . . . வரைபோந்

28. யரு ~ப இப்பொந் பதிநைங்கழஞ்சுக்கும் சிவபுரத்து ஸ்ரீராஜராஜஈஸ்வர முடைய மஹாதேவர்க்கு ஆதிசாஸ [ச]ண்டேசுவர[ர்]இவ்வூர்க் கொண்டுடைய நிலங் கீழ்பாற்கெல்லை கேணி வாய்க்காலுக்கு மேற்கும் தெந்பாற் கெல்லை தட்டுக்காலுக்கு . . . க்கும் மேல்

29. பாற்கெல்லை பெருவாய்க்காலுக்குக் கிழக்கும் வடபாற்கெல்லை உள்ளைக் காலுக்குத் தெற்கும்மாக இநாந் கெல்லைக்கும் உட்பட்ட நில மொழிவின்றியே போஞது குழியாக இந்நிலத்தால் தேவற்கும் பெருமாளுக்கும் வேண்டுமிறை உள்ளிட்டு எப்பேர் பட்ட சிற்றிறை [சில்லி]றை எச்சோறு

30. கூற்று நெ[ல்*]லுட்பட்ட வெட்டியமஞ்சியும் சஞிராதித்தவற் நாங்களே இறுக்க கடவோமாகவும் [தேவர்] இறையிலியநுபவிப்பாராகவுமி ந்நிலத்துக்கு இவ்வூர் நீர் பாயாத வாய்க்கால்களிலே நீர்க்கீய்ஞவண்ணம் கல்லியுமடைச்சும் நீர் பாச்சிக் கொள்ளப் பெறுவதாகவும் நீரி[றை*]ச்சுப் பாயாத பற்று . . . . வாய்க்கால்க[ளி]

31. லே குற்றேத்த[ம்*]பண்ணியும் கூடையிறைச்சும் பாச்சிக் கொள்ளப் பெறுவதாகவும் இந்நிலம் உழுங்குடிகளை போ . . சிற்றிறை வெட்டியமஞ்சி எச்சோறு காட்டாதோமாகவும் இப்பொந்நுக்கும் இந்நிலத்துக்கும் வேண்டுமிறை ஊரோமே சஞிராதித்தவற் இறையிறுக்க தேவர் இறையிலி [அ]னுபவிக்க கல்[லெ]

32. வட்டிக் கொள்ளப் பெறுவதா[கவும் இந்]நிலத்துக்கு நீர்பாயும் போது மு. . . . . . பாச்சிக் கொள்ளப் பெறுவதாகவும் இப் . . . . . [செய்]துக் குடுத்தோம் பாசாலிக் கிழவந் சேஞந் தணியமலையும் சூ[ரி]யந் மாதேவடிகளு மறுப்பட்டி கணவதிக் கிரமவித்தநும் உள்ளிட்ட உ . . . . . வர்கள் சொல்

33. ல எழுதிநேந் இவூரிருக்கும் வெ[வள்ளா]ளந் அம்பலவந் கூத்தநேநி வை[யெந்தெழு]த்து இப்பரிசிட்டுக் குடுத்தேந் பாசாலி கிழவந்

1. பொந்நை - என்றிருத்தல் வேண்டும்

2. திங்கள் - என்றிருத்தல் வேண்டும

சேஞ ஞணி[ய]மலையேநிவையெ[ந் *]நெழுத்து இப்பரிசிட்டுக் குடுத்தேந்[பாசாலிக்]கிழவந் சேஞந[லிவு] மராயநேநெழுத்து இப்படி யறிவேன் பாசாலிக்கிழவன் சூரியந்[மாதேவடி]களேந் எழுத்து

34. இப்படியறிவேன் க்ஷசியாமணிபுரத்து திருவூறலுடையார் சிவப்பிராம[ணந் . க]ம்பந் விக்கிரமாதித்தநே நெழுத்து இப்படி யறிவேன் செட்டி மலையெநெழுத்து இப்படியறிவேன் அரும்பாக்கிழான் காமந் மார . . . . .த்து இந்நிலத்

35. தில் ஷ்ாமி போகத்தால் யாண்டு வரை முதலாம் நெல்லு அருமொழிதேவநால் நூற்றெண்பத்தேழு கலநே இருதூணிப் பதக்கு இவை கொண்டு செய்யும் நிவஞமாவது இதேவர் இதேவர் உச்சம் போதுத் திருவமிர்து செய்த[ரு *]ளும் போது பக்கத்தே திருச்சுற்று மாளிகையிலே [உத்தமாக்]கிரமமாக உண்

36. ணும் வேதம் போம்[1] பிராமணந் ஒருவநுக்கு ஒரு போதைக்கு அரிசி இரு நாழியாக பிராமணர் ஐவர்க்கரிசி குறுணி இருநாழியாக ஒருநாளைக்கு நெல்லு முக்குறுணி [இ]ரு நாழியும் பிராமணந் ஒருவநுக்கு நெ[ய் *]யொரு செவிடாக ஐவர்க்கு நெ[ய் *]யாழாக்கிநுக்கு நெல்லு இருநாழி உரியும் புழுக்கு கறியொன்று மிளகு பொடி ஒன்று . . . க்கறி ஒன்று மர

37. க்கறி மூன்றுக்கு நெல்லு முநாழி முழக்கு மிளகுக்கு முப்புக்கும் நெல்லு இரு நாழியுரியும் ஒரு நாளைக்கு பிராமணநொருவநுக்கு தயிர் உரியா[க] ஐவர்[க் *]கு தயிர் இருநாழி உரிக்கு நெல்லு இருநாழி உரி [யு *]ம் பிராமண நொருவநுக்கு வெறுங்காயிரண்டாக ஐவர்[க் *]கு பாக்கு பத்தும் வெற்றிலை இருபதுக்கும் [நெல்லு இ]ரு நாழி உரியு[ம் *] ஒருநா

38. ளைக்கு நெல்லு விறகுக்கு இருநாழியுமாக பிராமணரைவற்கு ஒரு நாளைக்கு நெல்லு ஐங்குறுணியாக ஓராட்டைக்கு நெல்லு நூற்றைம்பத்திரு [க]லநே இரு தூணிக்கும் பிராமணர் ஐவர்[க் *]கும் அஞ்சிலையிட்டு உண்டிருக்கும் பிராமண நொருவநுக்கு நெல்லுக்குறுணியும் இவநு[க்கு *] புடவை முதலு[க்கு நெல்லு] ஐங்கலமுமாக [ஒ]

39. ருவநுக்கு ஓராட்டைக்கு நெல்லு முப்பத்தைங் கலமுமேற்றி அருமொழி தேவநால் ஓரா[ட்]டைக்கு நெல்லு நூற்றெண்பத்தெழு கலநே யிருதூணிப் பதக்குங் கொண்டு சஷிராதித்தவற் நிவஞ்ஞசெய்[து] சிலாலேகை செ[ய் *]வித் தோம் சிவபுரத்து ஸ்ரீராஜராஜஈஸ்வரமுடையார் ஸ்ரீகாரியம் பாற்பாரும் [உண்ணா]ழிகை உடையா

40. ர்களும் சிவ பண்டாரிகளுள்ளிட்டு தேவர் கந்மிகளோம்

41. இது பநமாஹேஸ்வர ரக்ஷை ।–

1. வேதம் மோதும் - என்று படிக்கவும்.

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	12
வட்டம்	:	ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1024
ஊர்	:	சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	:	282/1959-60
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	10
அரசன்	:	முதலாம் இராஜேந்திரன்			

இடம் : சிவன் கோயிலின் அர்த்த மண்டப வடக்கு

குறிப்புரை : மெய்கீர்த்தி பகுதி மட்டுமே உள்ளது. பிற பகுதிகள் கிடைக்கவில்லை. மன்றாடி காளிதாதன்அடியார் என்ற பெயர் காணப்படுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னி வளர இருநில மடன்தையும் போற்சயப் பாவையுஞ் சீர்த்தனிச் செல்வியுஙு[ன்பெ]
2. ருஙேவியராகி இன்புற நெடிதினி தூழியுள் இடைதுறை நாடுஙுடர் வன வேலிப்படர் வனவாசியுஞ் சுள்ளி[ச்]
3. சூழ்மதிட் கொள்ளிப்பாக்கையும் நண்ணற் கருமுரண் மண்ணைய்க் கடக்கமும் பொரு கடல் ஈழத்தரச
4. ர் த[ம்*] முடியுமாங்கவர் தேவியரோங்கெழில் முடியு[ம்*] முன்னவர் பக்கற் றென்னவர் வைத்த சுஙர முடி
5. யும் இஙி[ர*]னாரமும் தெண்டிரை ஈழ மண்டல முழுவதும் எறிபடைக் கேரளர் மு[றைமையிற்]
6. சூடுங்குலதனமாகிய பலர் புகழ் முடியும் செங்கதிர் மாலையுஞ் சங்கதிர் வேலைத் தொல் பெருங் காவ[ற்]
7. பல் பழஙிவுஞ் செருவிற் சினவில் இருபத்தொருகாலரசுகளைய்கட்ட பரசுராமன் மேல் வருஞ்சாஙிமற்றீவரன் கருதி [இரு]
8. த்திய செம்பொற்றிருத்தகு முடியும் பயங்கொடு பழிமிக[மு]யங்கியில் முதுகிட்டொளித்த சயசிங்கனைப் பெரும் புகழொடு
9. [பீடியல்] இலட்டபாடி ஏழரை இலக்கமும் நவநெதிக் குலப்பெருமலைகளும் விக்ரம வீரர் சக்கரக் கோட்டமும் முதிர்பட வல்லைய் மது[ர]

10. மண்டலமும் காமிடைய் வளைய் நாமணைய்க் கோணையும் வெஞ்சிலை வீரர் பஞ்சப்பள்ளியும் பாசடைப் பழன[ம் மாசுணி]

11. [தே]தசமும் அயர்வில் வண் கீர்த்தியாதி நகரகவையில் ச[ந்திர]ன் தொல்குலத்து இந்திரரதனை வ[ளை]யமர் களத்துக் கிளையோடு[ம்பி]

12. டித்துப் பலதனத்தோடு தறைகுலத் தனக்குவையுங் கிட்டருஞ் செறி மிளை யொட்ட விஷயமும் பூசுரர் சேர நல் கோசலை நாடும்

13. தருமபாலனைய் வெம்முனையழித்து வண்டுறை சோலைத் தண்[டை]ட புத்தியு[ம்*] இரணசூரனைய் முரணுகத்தாக்கிய்த் திக்கனைய் கீர்த்தித் தெக்கிண

14. லாடமும் தொடுகடல்ச் சங்கு வொட்டல் மயிபாலனைய் வெஞ்சம விளாகத்தஞ்சுவித்தருளி ஒண்டிறல் யானையும் பெண்டிர் பண்டாரமும் நித்

15. தில நெடுங்கடலுத்திர லாடமும் கோவிந்த சந்தன் மாவிழிந்தோடத் தங்காத சாரல் வெங்காள தேசமும் வெறிமலர்த் தீர்த்த[த்து*]ச் செறி புனல் கங்கையும்

16. ண்டாற் கொண்ட கோப்பரகேசரி வன்மராந ஸ்ரீ ராஜேந்த்ர சோழ தேவற்கு யாண்டு ௰௨ ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மனையிற் கோட்டத்து

17. புரிசை நாட்டு உரோடகத்து ஸ்ரீராஜராஜஈஸ்வரமுடைய மஹா தேவர்[க்*]கு இத்தேவர் மடவிளாகத்திருக்கும் மன்றாடி காளிதாதனடியான்

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 511/2013

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: 12
வட்டம்	: ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1024
ஊர்	: சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	: 281/1959-60
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு	: சோழர்	ஊ.க.எண்	: 11
அரசன்	: முதலாம் இராஜேந்திரன்		

இடம் : சிவன் கோயில் அர்த்த மண்டப வடபுறம்

குறிப்புரை : முதலாம் இராஜேந்திர சோழனின் மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்து புரிசை நாட்டு சிவபுரத்திலுள்ள ஸ்ரீராஜராஜஈஸ்வரமுடைய மஹாதேவர் கோயிலில் திருநந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்கு அமணிவல்லவன் ராஜராஜனான ராஜேந்திரசோழ இருங்கோளர் தேவியார் தேவன் பொன்னாலியார் என்பவள் கொடையளித்த தொண்ணூறு ஆடுகளைப் பெற்றுக் கொண்ட திருவுண்ணாழிகை உடையார்களும் சிவ பண்டாரிகளும் நித்தம் விளக்கெரிப்பதற்கு தேவையான உழக்கு நெய்யை கோயிலுக்கே கொண்டு வந்து கொடுப்பதாக ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டுள்ளச் செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னி வளர இருநில மடந்தையும் போற் செயப்பாவை
2. யும் சீர்த்தனிச் செல்வியும் தன்பெ[பருதேவியராகி இன்புற நெ]டு துயிர் ஊழியுள் இடைதுறை
3. நாடும் துடர்வன வேலிப்படர்வனவாசியும் சுள்ளி[ச்*]சூழ் மதிட் கொள்ளிப்பாக்கையும் நண்ண[ற்]
4. க்கரு முரண் மண்ணைக் கடக்கமும் பொருகடல் ஈழ[முத்தரைய[ர்*]தம் முடியும் ஆங்கவன் தேவியர் ஓங்கெ
5. ழில் முடியும் முன்னவன் பக்கல்த் தென்னவன் வைத்த சுந்தர முடியும் இந்திரனாரமும் தென்றிசை ஈழ மண்டல மு[மு*]வ
6. தும் எறிபடை சேரலன் முறைமையிற் சூடும் குலதனமாகிய பலர் புகழ் முடியும் செங்கதிர் மாலை

7. [யும் சங்கதிர் வேலை]த் தொல் பெருங்காவல்ப் பல்பழந்தீவும் செருவில் சிநவில் [இருபத்தொரு கால்]

8. அரைசு களைகட்ட பரசுராமன் மேல் வருஞ்சாந்தி மற்றீவரண் கருதி இருத் திய செம்பொற்றிருத்தகு மு

9. [டியும்] பயங்கொடு பழி மிக முருங்கியில் முதுகிட்டொளித்த ஜயசிங்கன் அளப்பெரும் புகழ்ழோடு பிடி[யல் இ]

10. ர[ர]ட்டபாடி ஏழரை இலக்கமும் நவநெதி குலப்பெருமலைகளும் விக்கிரம வீர[ர்*] சக்கர கோட்டமும் முதிர்படவல்லை மது[ர]

11. மண்டலமும் காமிடை வளைய நாமணைக் கோணையும் வெஞ்சிந வீர[ர்*] பஞ்சப்பள்ளி[யு]ம் பாசடை பழந[ம்*] மாசுணி தேசமும்

12. [அ]யர்வில் வெண்கீர்த்தி ஆதி நகர[க]வையில் சந்திரன் தொல்குலத் திந்தி[ரரத]னை விளையமர்க்களத்துக் கிளை

13. யோடும் பிடித்து !!லதநத்தோடு நிறை குலதன குவையும் கிட்ட ருஞ்[செறிமிளை யொட்ட]விசையமும் பூசுரர் சே

14. ரநல் கோசலை நாடும் தன்மபாலனை வெம்மு[னை] அழித்து வண்ட[ம*]ற் சோலை தண்டபுத்தியும் இரண சூரனை முரணு[ற]

15. த்தாக்கி திக்கணை கீர்த்தி தக்கணலாடமும் தொடுகடர்ச்சங்கு வொட்ட மயில்பாலனை வெஞ்சமர் விளாகத்தஞ்சு வித்தருளி ஒ

16. ண்டிறல் யானையும் பெண்டிர் பண்டாரமும் நித்திரல் நெடுங்கடலுத் திரலாடமும் கோவிந்த சஹ[ன்*]மாவிழிந்தோட தங்காத சாரல் வ

17. ங்காள தேசமும் வெறிமலர்த் தீர்த்த[த்*] தெறி புந[ல்*]கங்கையும் மா[ப்*]பெருந்தண்டாற் கொண்ட கோப்பரகேசரி பநூரான ஸ்ரீராஜே

18. ஜ சோழ தேவற்கு யாண்டு யஉ ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்துப் புரிசை நாட்டு

19. ச்சிவபுரத்து ஸ்ரீ ரா ஜ ரா ஜ ·ஈ· ஶ்வ ரமுடை[ய*] மஹாதேவர்க்கு [அமனிவல்லவன்*] ராஜராஜனான ராஜேஜ சோழ இருங்கோளர்தேவி

20. யார் தேவன் பொன்னாலியார் சஹிராதி[த்*]தவற் வைத்த திருநஹா விளக்கு ஒன்றினுக்கு வைத்த சாவாமூவா பேராடு தொண்ணூறும் திருவுண்ணாழிகை உ

21. டையார்களும் சிவபண்டாரிகளுங் கண்[டடு]த்து நிசதி உழக்கு நெய் கோயிலுக்கே கொடுவஹட்டுவித்து எரிப்பிப்பதாக கையுற்றோம் திருவுண்ணாழிகை

22. உடையோமும் சிவபண்டாரிகளோமும் இது பநூமஹேஶ்வர ரக்ஷை ।

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 512/2013

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	8
வட்டம்	:	ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1020
ஊர்	:	சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	:	283/1959-60
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	12
அரசன்	:	முதலாம் இராஜேந்திரன்			

இடம் : சிவன் கோயில் அர்த்த மண்டப வடக்குச் சுவர்

குறிப்புரை : ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து, மணையிற் கோட்டத்து புரிசை நாட்டு உரோடகத்திலுள்ள ஸ்ரீராஜராஜ ஈஸ்வரமுடைய மகா தேவர் கோயிலுக்கு, இக்கோயில் தேவதான ஊராகிய சிவபுரத்தினைச் சேர்ந்த நாராணன் செல்வன் மணவாட்டி (மனைவி) வாசவி என்பவள் ஒரு நொந்தா விளக்கு எரிப்பதற்கு கொடையளித்த தொண்ணூறு ஆடுகளைப் பெற்றுக் கொண்ட திருவுண்ணாழிகையுடையார்களும் சிவபண்டாரிகளும் விளக்கெரிக்க சம்மதித்துத் தினந்தோறும் உழக்கு நெய்யை கோயிலுக்கே கொண்டு வந்து கொடுத்து விளக்கெரிப்பதாக ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டுள்ளச் செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னி வளர இருநில மடந்தையும் போற்செயப்பாவையும் சீர்த்தனிச் செல்வியும் தந்பெருந்தேவி
2. யாராகி இன்புற நெடுதுயிலூழி உள் இடைதுறை நாடும் துடர்வன வேலி படர்வனவாசியும் சுள்ளிச் சூழ் மதிட்கொ
3. ள்ளிப் பாக்கையும் நண்ணற்கருமுரண் ம[ண்*]ணைக் கடக்கமும் பொரு கடலீழத்தரசர் த[ம்*]முடியும் ஆங்கவர் தேவிய
4. ரோங் கெழில் முடியும் முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த சுந்தர முடியும் இந்திரனாரமும் தெண்டிரை ஈ
5. ழ மண்டல முழுவதும் எறிபடைக் கேரளன் முறைமையில் சூடிய குலதனமாகிய பலர் புகழ் முடியும் செங்க[திர்]

6. மாலையும் சங்கதிர் வேலைத் தொல்பெருங்காவற் பல்பழஹீவும் செரு வில்ச்சி[ன]வில் இருபத்தொரு காலரைசு களைகட்ட பரசுராமன்

7. மேல் வருஞ்சாஹி மற்றீவரண் கருதி இருத்திய செம்பொற் திருத்தகு முடியும் மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பரகேசரி பன்மரான ஸ்ரீரா

8. ஜேஜசோழ தேவற்கு யாண்டு அ ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்துப் புரிசை னாட்டுரோடகத்து

9. ஸ்ரீராஜராஜஈஸ்வரமுடைய உஹாதேவர்க்கு இத்தேவர் தேவதானம் நகரம் சிவபுரத்து[ச் ச]ங்கரப்பாடியான் நாரணன் செல்வன் மணவாட்டி

10. வாசவி சஙூ[ர*]தித்தவற் வைத்த திருநொந்தா விளக்கு ஒன்றினுக்கு வைய்த்த சாவா மூவாப் பேராடு தொண்ணூறு இவ்வாடு தொண்ணூறும் திருவுண்ணாழிகை உடையார்க

11. ளும் சிவபண்டாரிகளும் க[ண்டடு]த்து நிசதம் உழக்கு நெய் [கோயிலுக்கே கொடுவஙு] அட்டுவிய்த்து எரிப்பிப்பதாக கைய்யுற்றோம் திருவுண்ணாழிகை

12. யுடையோமும் சிவபண்டாரிகளோமும் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை ।–

த.நா.அ. தொல்லியல் துறை   தொடர் எண் : 513/2013

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	13
வட்டம்	:	ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1025
ஊர்	:	சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	:	284/1959-60
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	13
அரசன்	:	முதலாம் இராஜேந்திரன்			

இடம் : சிவன் கோயில் அர்த்த மண்டப வடக்குச் சுவர்

குறிப்புரை : ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்து புரிசை நாட்டு உரோடகத்திலுள்ள ஸ்ரீராஜராஜஈஸ்வரமுடையார் கோயிலுக்கு இக்கோயில் தேவதான நகரமாகிய சிவபுரத்தைச் சேர்ந்த சங்கரபாடியான் சாத்தன் மாகண்டனான சிவலோக சுந்தர மாயிலெட்டி என்பவர் இக்கோயிலில் இரண்டு திருநந்தா விளக்குகள் எரிப்பதற்கு கொடையளித்த 180 ஆடுகளையும் அக்கோயிலைச் சேர்ந்த திருஉண்ணாழிகை உடையார் களும், சிவபண்டாரிகளும் தேவகன்மிகளும் பெற்றுக்கொண்டு தினம் உரிய நெய் வீதம் கோயிலுக்குத் தாங்களே கொண்டு வந்து விளக்கெரிக்க சம்மதித்து கையெழுத்திட்டுள்ள செய்தி கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னி வளர இருநில மடந்தையும் போற் சயப்பாவையும் சீர்த்தநிச் செல்வியுந் பெருந்தேவியராகி இன்புற நெடிதிய
2. லூழியுள் இடைதுறை நாடுந்தொடர்வந வேலிப்படர் வநவாசியும் சுள்ளி சூழ் மதிட் கொள்ளிப் பாக்கையும் நண்ணற் கருமுரண் மண்ணைக் கடக்கமு
3. ம் பொருகடலீழத்தரைசர் தம் முடியும் ஆங்கவர் தேவியரோங்கெழில் முடியு முன்னவர் பக்கற் றென்னவர் வைத்த சுந்தர முடியுமிந்திரந[ா]
4. ரமு ஹெண்டிரை ஈழ மண்டல முழுவது மெறிபடைக் கேரளந் முறைமையிற் சூடுங் குலதநமாகிய பலர் புகழ் முடியும் செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத் தொல்பெருங் கா
5. வற் பல் பழந்தீவும் செருவிற் சிநவிலிருபத்தொரு காலரசுகளை கட்ட பரசுராமந் மேல் வரும் சாந்திமற்றீவரந் கருதியிருத்திய செம்பொற்றிருத்தகு முடியும் பயங்கொடு ப

6. ழிமிக முயங்கியில் முதுகிட்டொளித்த சயசிங்கனைப் பெரும் புகழொடும் பீடி[யல் *]இலட்டபாடி ஏழரையிலக்கமும் நவநெதிக்குலப் பெருமலைகளும் விக்கிரம வீரர் சக்க

7. ர கோட்டமு[ம் *] முதிர்படவல்லை மதுர மண்டலமுங் காமிட வளைய நாமணைக் கோணையும் வெஞ்சிலை வீரர் ப[ஞ்ச *]பள்ளியும் பாசடைப் பழந மாசுணி தேசமும் அயர்வி

8. ல் வண் கீர்த்தி யாதி [ந]கரவையில் இந்த்ரன் றொல் குலத்திந்திரரதனை விளையமர் களத்துக் கிளையோடும் பிடித்துப் பல தநத்தோடு நிறைகுலதநக்குவையுங் கிட்டருஞ்

9. செரிமிளையொட்ட விஷயமும் பூசரர் சேர நற் கோசலை நாடு தந்மபாலனை வெம்முனையழித்து வண்டுறை சோலைத் தண்ட யுத்தி யுமிரணசூரனை முரணுரத்

10. தாக்கித்திக்கணை கீர்த்தி தக்கண லாடமுணொடு கடற்சங்கு கொட்டல் மயிபாலனை வெஞ்சமர் விளாகத்தஞ்சு வித்தருளி யொண்டிறல் யானையும் பெண்டிர்ப் பண்டார

11. மு நித்தில நெடுங்கடலுத்திரலாடமும் கோவிந்தசந்த் [ன்] மாவிழிந்தோடத் தங்காத சாரல் வங்காள தேசமும் வெறிமலர்த் தீர்த்தத்தெறிபுநற் கங்கையு[ம்]

12. மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பரகேசரி பன்மரான ஸ்ரீராஜேந்த்ர சோழ தேவற்கு யாண்டு ௰௩ ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டல

13. த்து மணையில் கோட்டத்து புரிசை நாட்டு உரோடகத்து ஸ்ரீராஜராஜ ஈஸ்வரமுடையார்க்கு இத்தேவர் தேவதானம் நகரம் சிவபுரத்துச் சங்க

14. ரபாடிய[ான் சா]த்தன் ம[ா]கண்டனான சிவலோக சுந்தர மாயிலெட்டி வைத்த திருநந்தா விளக்கு இரண்டினுக்கு வைத்த சாவா மூவாப்பேராடு நூற்

15. றெண்பது இவ்வாடு நூற்றெண்பதும் கண்டடுத்து நிசதம் உரிய் நெய் கோயிலுக்கே கொ[ண் *]டு வந்து அட்டுவித்து எரிப்பிப்பதாக கை

16. ய்யுற்றோம் திருவுண்ணாழிகை உடையோமும் சிவ பண்டாரிகளோமு[ம் *] இத்தேவ[ர் *] கன்மிகளோமும் இது பந்மாஹேஸ்வர ரக்ஷை ।–

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 514/2013

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: 13
வட்டம்	: ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1025
ஊர்	: சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	: -
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு	: சோழர்	ஊ.க.எண்	: 14
அரசன்	: முதலாம் இராஜேந்திரன்		

இடம் : சிவன் கோயில் கருவறை வடக்கு குமுதம், மேற்குச் சுவர்

குறிப்புரை : கல்வெட்டு முழுமையாக இல்லை. உரோடகத்து ராஜராஜீஸ்வரம் உடையார் கோயிலில் உள்ள திரிபுரவிஜயரான சிவபுரச் செல்வர் மற்றும் இறைவி நம்பிராட்டியார் திருமேனிகளுக்கு தினமும் ஒவ்வொரு சந்தியின் போதும் திருவமிர்து, கறியமுது, நெய், தயிர், அடைக்காய் போன்றவை வைத்து வழிபாடு செய்வதற்காக நிலம் தானம் வழங்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரு[ம]ன்னி வளர இரு[நி]ல மடந்தையும் போ[ர்*]ச்சயப் பாவையும் சீர்த்தனிச் செல்வியுந்தன் பெருந்தேவியரா[கி]இன்புற நெடிதினிதூழியுள் இடைதுறை நாடு தொடர்வன வேலிப்படர் வனவாசியும் சுள்ளிச் சூழ்மதிட் கொள்ளிப் பாக்கையும் நண்ணற் கருமுரண் மண்ணைக் கடக்கமும் பொருகடலீழத்தரையர் தமுடியு மாங்கவர் தேவியரோங் கெழில் முடியும் முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த சுந்தர முடியுமிந்திரநாரமு தண்டிரை ஈழமண்டல முழுவது[ம்*] எறிபடைக் கேரளன் முறைமையிற் சூடுங்குலதனமாகிய பலர் புகழ் முடியும் செங்க
2. திர் மாலையும் சங்கதிர் வேலைத் தொல் பெருங்காவல் பல்பழந்தீவும் செருவிற் சினவில் இருபத்தொருகால் அரைசுகளைகட்ட பரசுராமன் மேல் வ[ரு]ஞ்சாந்தி மற்றீவரண் கருதியிருத்திய செம்பொ[ந்] திருத்தகு முடியும் பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்டொளித்த சயசிங்கன் அளப்பெரும் புகழோடும் பீடி[யல்*] இலட்டபாடி ஏழரையிலக்கமும் நவநெதிக் குலப்பெருமலைகளும் விக்கிரம வீர[ர்*] சக்கர கோட்டமும் முதிர் படவல்லை மதுர மண்டலமும் காமிடைவனைய் நாமனைக் கோணையும் வெஞ்சின வீரர் பஞ்சப்பள்ளியும் பாசடை பழன மாசுணி தேசமும் அயர்வில் வண்கீர்த்தியாதி நகரவையில் சந்திரன் தொல்குலத்தி

3. ஷிர[ர*]தனை விளையமர்க் களத்துக் கிளையோடும் பிடித்துப் பல தனத்தோடு நிறை குலதனக்குவையும் கிட்டரும் செறிமிளை யொட்ட விஷயமும் பூ[சு*]ரர் சேர னல் கோசல நாடும் தன்ம பாலனை வெம்முனை யழித்து வண்டுறை சோலைத்தண்ட புத்தி[யும்] இரணசூரனை முரணுக்த்தாக்கித் திக்கணை கீர்த்தித் தக்கணலாடமும் கோவிந்தசந்தன் மாவிழிந்தோட தங்காத சாரல் வங்காள தேசமும் தொடுகடற்சங்கு வொட்ட மயிபாலனை வெஞ்சமர் விளாகத்தஞ்சுவித்தருளி யொண்டிறலியானையும் பெண்டிர் பண்டாரமும் நித்திர நெடுங்கடலுத்திரலாடமும் வெறிமலர்த் தீர்த்த தெறிபுனல் கங்

4. [கையும் மாப்பொருதண்டாற்]கொண்ட கோப்பரகேசரி பன்மரான உடையார் ஸ்ரீராஜேந்த்ர சோழ தேவற்கு யாண்டு ௰௩ ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மனையிற் கோட்டத்துப் புரிசை நாட்டு உரோடகத்து ஸ்ரீராஜராஜஈஶ்வரமுடையார் கோயிலில் எழுந்தருளி நிற்கும் தி[.]வ[.]ர விஜயரான சிவபுரச்செல்வர்க்கும் நம்பிராட்டியார்க்கும் ஸந்திகடோறும் திருவமிர்தும் கறியமிர்தும் நெய்யமிர்தும் தயிரமிர்தும் அடைக்காயமிர்தும் சாத்தி அருளத் திருப்பரிசட்டத்துக்குமாக வேண்டு[ம்*] நிவந்தங்களுக்கு இத்தேவர் தேவதானம் நகரம் சிவபு[ரத்து] மஹா நகரத்தோம் எங்களூர் காலளவு கோல் பாட்ட தேவகன்மிக[1]

1. கல்வெட்டின் தொடர்ச்சி கிடைக்கவில்லை

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: 21
வட்டம்	: ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1033
ஊர்	: சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	: 286/1959-60
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊ.க.எண்	: 15
அரசன்	: முதலாம் இராஜேந்திரன்		

இடம் : சிவன் கோயில் கருவறை வடக்கு குமுதம் பத்ம குமுதம்

குறிப்புரை : சோமன் குமரனான மதுராந்தக மாராயர் என்பவர், பாசாலி நாட்டு பாசாலி வீரன் உத்தம சோழன் கங்கை கொண்டார் என்பவரிடம் முப்பது காசுகளைக் கொடுத்து, காசு ஒன்றுக்கு ஒராண்டுக்கு வட்டி ராஜகேசரி என்னும் மரக்காலால் பதக்கு வீதம், முப்பது காசுகளுக்கு வட்டியாக வந்த ஐங்கல நெல்லை, சிவபுரத்து கோயிலில் ஐப்பசி மாதத்தில் நடைபெறும் திருவேட்டைத் திருவிழாவில் இறைவன் எழுந்தருளுகின்ற போது பெருந்திருவமிர்து படைப்பதற்காகக் கொடையளித்துள்ளார்.

அக்கொடை மூலம் அரிசி ஒரு கலம், நெய் இருநாழி, எண்ணை இரு நாழி, தயிர் பதக்கு, கறியமுது நான்கு, மிளகு உழக்கு, கடுகு உழக்கு, சர்க்கரை நாழி, விறகிடுவானுக்குத் தரப்படும் செலவு ஆகியவற்றிற்கு மேற்குறிப்பிட்ட ஐங்கலம் நேர் ஆனது பற்றியும் ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு நெல் தேவைப்பட்டது என்ற விவரமும் தரப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ராஜேந்த்ர சோழ தேவற்கு யாண்டு உ௰கஆவது சோமன் குமரனான மதுராந்தக மாராயன் பாசாலி நாட்டு பாசாலி வீரர் உத்தம சோழன் கங்கை கொண்டார்க்கு குடுத்த காசு முப்பது இக்காசு முப்பதுங்கொண்டு காசு ஒந்றினுக்கு ஆண்டு வரை பலிசை நெல்லு [ரா]ஜ கேசரியால் நெல்லுப்பதக்காக ஒராண்டிநுக்கு வந்த நெல்லு ஐங்கலம் இந்நெல்லு ஐங்கலமும் கொண்டு

2. ஐ . . . . ரைத் திருநாளில்த் திருவேட்டை எழுந்தருளி இருந்த இடத்து பெருந்திருவமுதுக்கு ராஜகேசரியால் அரிசி கலத்துக்கு நெல்லு இருகலநேய் தூணிப் பதக்கும் நெய் இருனாழிக்கு நெல்லு இருதூணியும்

எண்ணை இருனாழிக்கு நெல்லு இருதூணியும் தயிர் பதக்குக்கு நெல்லுத்தூணியுமாக இரு[ன்]னாழிக்கு நெல்லு னா[ன்]னாழியும் பலவற்கத்துக்கு கறியமுது னாலுக்கு நெல்லு பதக்கு மிளகு உழக்கும் கடுகு உ[ழக்கு]ம் நெல்

3. லு . . . . இரண்டுக்கு நெல்லு குறுணி நானாழியும் சற்கரை நாழிக்கு நெல்லுப் பதக்கும் விறகிடுவானுக்கு நெல்லு குறுணியும் குசவநுக்கு நெல்லுக் குறுணியும் ஆக நெல்லு ஐங்கலமும் நேர் இது *ஸ்ரீமாஹேச்வர ரக்ஷை*।—

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	13
வட்டம்	:	ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1025
ஊர்	:	சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	:	285/1959-60
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	16
அரசன்	:	முதலாம் இராஜேந்திரன்			

இடம் : சிவன் கோயில் கருவறை வடக்கு குமுதம் பத்ம குமுதம்

குறிப்புரை : ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணையிற் கோட்டத்து புரிசை நாட்டு உரோடகத்திலுள்ள ஸ்ரீராஜராஜஈஸ்வரமுடையார் கோயிலில் இரண்டு திருவிளக்குகள் எரிப்பதற்கு வைத்த 180 ஆடுகளைப் பெற்றுக் கொண்ட திருவுண்ணாழிகை உடையார்கள், தேவகன்மிகள் மற்றும் சிவபண்டாரிகள் ஆகியோர் தினம் உரிய் நெய்வீதம் கோயிலுக்கே கொண்டு வந்து விளக்கெரிப்பதாக சம்மதித்த செய்தி கூறப்பட்டுள்ளது.

இவ்விளக்கெரிக்க 180 ஆடுகளைக் கொடுத்தவர் அந்நகரக் கரணத்தான் பிராமணன் வலியடக்கி தோளனான ஆயிரபட்டன் என்பவராவார். இந்நகரத்தின் கணக்கு எழுதும் காணியை (உரிமையை) விலைக்கு வாங்கி எழுதுவதற்கு திருவிளக்கெரிக்க 180 ஆடுகள் கொடையளித்த செய்தி கூறப்பட்டுள்ளது. அவர் பெயரைக் குறிப்பிடும் போது நகரக் கணக்கு எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால் கணக்குக் காணியை விலைக்கு வாங்கி பதவியில் அமர்ந்த பின்னர் செய்யப்பட்ட ஏற்பாடுதான் இது என்பது தெரியவருகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமந்நி வளர இரு நில மடந்தையும் போற் சயப்பாவையுஞ் சீர்த்தனிச் செல்வியுஞன் பெருஙேவியராகி இன்புற நெடிதியலூழியுளிடை துறை நாடுஙுடர்வன வேலிப்படர் வனவாசியுஞ் சுள்ளிச்சூழ் மதிட் கொள்ளிப்பாக்கையு[ம்*] நண்ணற் கருமுரண் மண்ணைக் கடக்கமும் போர் கடலீழத்தரைசர் தமுடியுமாங்கவர் தேவியரோங்கெழில் முடியு[ம்] முன்னவர் பக்கற் றென்னவன் வைத்த சுஙு
2. ரமுடியுமிஙிரனாரமு[ம்*] தெண்டிரை ஈழமண்டல முழுவது[ம்*] மெறிபடைக் கேரளந் முறைமையிற் சூடுங் குலதனமாகிய பலர் புகழ் முடியுஞ் செங்கதிர்

மாலையுஞ் சங்கதிர் வேலைத் தொல்பெருங்காவற் பல்பழஜீவும் செருவிற் சினவிலிருபத்தொரு காலரைசு களைகட்ட பரசிராமன் மேல் வருஞ்சாஹி மற்றீவரண் கருதி இருத்திய செம்பொற்றிருத்தகு முடியும் பயங்கொடு பழி மிக முயங்கியில் முதுகிட்டொளித்த சயசிங்கன் அளப்பெரும் புகழொடும் பீ

3. டிஇல் இலட்டபாடி ஏழ[ரை] இலக்கமும் நவநெதிக் குலப்பெருமலைகளும் விக்கிரம வீரர் சக்கரகோட்டமு[ம்*] முதிர்பட வல்லை மதுரமண்டலமு[ம்] காமிடை வளை நாமணைக் கோனையும் வெஞ்சின வீரர் பஞ்சப்பள்ளியும் பாசடைப்பழன மாசுணி தேசமும் அயர்வில் வண் கீர்த்தியாதி நகரவையிற் சஜிரன்றொல் குலத்திஜிரதனை விளையமர்க்களத்துக் கிளையோடும் பிடித்து பல தநத்தோடு நிறை குலதனக்குவையுங் கிட்டருஞ்செறி மிளை யொட்ட விஷயமும்

4. பூசுரர் சேர நற்கோசலை நாடுஞன்மபாலனை வெம்முனையழித்து வண்டுறை சோலைத் தண்ட புத்தியுமிரண சூரனை முரணுகத்தாக்கித் திக்கணை கீர்த்தித் தக்கண லாடமுங் கோவிஞசஞன் மாவிழி ஷோடத் தங்காத சாரல் வங்காள தேசமு[ம்*] தொடுகடற் சங்கு வொட்டல் மயிபாலனை வெஞ்சமர் விளாகத்கஞ்சுவித்தருளி ஒண்டிறல் யானையும் பெண்டிர் பண்டாரமும் நித்தில நெடுங்கடலுத்திரலாடமும் வெறிமலர்த் தீர்த்தத்தெறிபுனல் கங்கையு[ம்*] மாப்பொருதண்டாற் கொண்ட கோப்பரகேசரி வன்மரான உடையார் ஸ்ரீராஜேந்த்ர

5. சோழ ஷேவற்கு யாண்டு ய௫ ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மனையிற் கோட்டத்துப் புரிசை நாட்டு உரோடகத்து ஸ்ரீராஜராஜஈஸ்வர முடையார் தேவதானம் நகரஞ் சிவபுரத்து மாநகரத்தோம்

6. ஸஉவாத்ததால்[1] எங்கள் நகரக்கணக்கு காணியாக சந்திராதித்தவற் விலை கொண்டு எழுதுவதற்கு நகரக்கரணத்தான் ஊர் ஸு ஊணன் வலியடக்கி தோளானான ஆயிரபட்டன் இத்தேவற்கு சஜிராதித்தவற் வைத்த திருவிளக்கு உ னு

7. க்கு வைத்த சாவாமூவாப் பேராடு நூற்றெண்பது இவ்வாடு நூற்றெண்பதும் திருவுண்ணாழிகை உடையார்களும் தேவகன்மிகளும் சிவபண்டாரிகளும் கண்டடுத்து நிசதம் உரிய் நெய் கோயிலுக்கே கொ

8. ண்டு வஞ அட்டுவியத்து எரிப்பிப்பதாக கையுற்றோம் திருவுண்ணாழிகை உடையோமும் சிவபண்டாரிகளோமும் தேவகநீகளோமும் இது ஹன்மாயேஸ்வர ரக்ஷை ।–

1. சம்வத்சரத்தால் - என்று படிக்கவும்

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 517/2013

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	26
வட்டம்	:	ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1038
ஊர்	:	சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	:	226/1961-62
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	17
அரசன்	:	முதலாம் இராஜேந்திரன்			

இடம் : சிவன் கோயில் கருவறை வடக்கு குமுதம் பத்ம குமுதம்

குறிப்புரை : கன்றூர் நாட்டு சோழவிச்சாதிர சதுர்வேதிமங்கலத்து சபையார், ஜெயங் கொண்ட சோழமண்டலத்து மனையிற் கோட்டத்துப் புரிசை நாட்டு உரோகடத்து ஸ்ரீராஜராஜீஸ்வரமுடையார்க் கோயிலுக்கு நிலம் ஒன்றினை இறையிலி தேவதானமாக பத்து இராசராசன் காசு பெற்றுக்கொண்டு நிலவிலையாவனம் செய்து கொடுத்துள்ளனர். இந்நிலத்தினைப் பெற்ற இவ்வூர் உண்ணாழிகை சபையார் இறைவனுக்கு அமுது படைக்கும்போது சிவயோகி ஒருவருக்கு உணவளிக்க ஏற்பாடு செய்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னி வளர இருநில மடன்ஙயும் போற் செயப்பாவையும் சீர்த்தனிச் செல்வியும் தன் பெருஙேவியராகி இன்புறநெடுதுயில் லூழி உள் இடைதுறை நாடு ஞட[ர்*]வன வேலிப்படர்வன வாசியும் சுள்ளிச் சூழ் மதிட்கொள்ளிப்பாக்கையும் நண்ணற் கருமுரண் மண்ணைக் கடக்கமும் பொருகடலீழத்தரையர் தம் முடியும் ஆங்கவர் தே[வியரோங் கெ]ழில் முடியும் முன்னவர் பக்கற் றென்னவர் வைத்த சுஙர முடியும் இஙிரனாரமு[ம்*] தெண்டிரை ஈழ மண்டல முழுவது[மெறி]

2. படைக்கேரளன் முறைமையிற் சூடுங் குலதனமாகிய பலர்புகழ் முடியும் செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத் தொல்பெருங்காவல் பல்பழஙீவும் செருவிற் சினவிலிருபத்தொரு காலரைசு களைகட்ட பரசுராமன் மேல் வருஞ்சாஙி மற்றீவரண் கருதி இருத்திய செம்பொற்றிருத்தகு முடியும் பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்டொளித்த ஜயசிங்கன் [அளப்பெரும் புக]ழொடு பீடியல் இரட்டபாடி ஏழரை இலக்கமும் நவநெறிக்குலப் பெருமலைகளும் விக்கிரம வீரர் சக்கர கோட்டமு[ம்*] மு

3. திர்பட வல்லை மதுர மண்டலமும் காமிடை வளைய நாமனைக் கோனையும் வெஞ்சிந விரர் பஞ்சப்பள்ளியும் பாசடைபழன மாசுணி தேசமுமயர்வில் வண் கீர்த்தி ஆதி நகரவையிற் சந்திரன் றொல் குலத்திந்த்ரனை விளையமர்க்களத்து கிளையோடும் பிடித்துப் பலதனத்தோடு நிறைகுல தனக்குவையுங் கிட்டருஞ் செறிமிளையொட்ட வி[ஷயமும் பூசுரர் சேர் நற்கோசலை ந]ாடு தன்மபாலனை வெம்முனை யழித்து வண்டுறைசோலை தண்ட புத்தியு

4. மிரணசூரனை முரணுறத் தாக்கித் திக்கணை கீர்த்தித் தக்கண லாடமுங் கோவிந்தசந்தன் மாவிழிந்தோடத்தங்காத சாரல் வங்காள தேசமும் தொடு கடற்சங்கொட்டர் மயிர் வானனை வெஞ்சம[ர்*]வளாகத்தஞ்சுவித்தருளி யொண்டிறல் யானையும் பெண்டிர் பண்டாரமு நித்தில நெடுங்கடலுத் திரலாடமும் வெறிமலர்த் தீர்த்தத்தெறிபுனற் கங்கையும் . . .

5. யிற் பிறக்கிய பெருநெதிப் பிறக்கமும் ஆர்த்தவகை நகர் போர்த்தொழில் வாசல் விச்சாதிர தோரணமும் மொ[ய்*]த் தொளிர்ப் புனமணிப் புதவமுங் கனமணிக் கதவமும் நிறை [நீர்] விசையமுந்துறை நீர்ப் பண்ணையும் தொன்மலையூரையிற்ப் பொன்மலையூரும் ஆழ்கடலகழ் சூழ் மாயிருடிங்கமுங் கலங்கா வல்வினை இலங்கா வல்வினை [சோகமும்] [காவலம்] புரிசை மேவலிபங்கமும் விளைப்பந்தூறுடை வளை[ப்பந்தூருங்*] கலாமுதிர் கடுந் . . . . . .

6. புகழ் தலைத்தக் கோலமும் தீதமர் வல்வினை மாதமயிங்கமும் கலா முதிர்க் கடுந்திறல இலாமுரி தேசமும் தேனக்க வார் பொழில் மானக்க வாரமும் தொடுகடற் காவற் கடுமுரட் கடாரமுமாப் பொருதண்டாற் கொண்ட கோப்பரகேசரி பன்மரான உடையார் ஸ்ரீராஜேந்த்ர சோழ தேவற்கு யாண்டு [௨௰௬] ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மனையிற் கோட்டத்துப் புரிசை நாட்டு ஊரோடகத்து ஸ்ரீராஜராஜீஸ்வரமுடையார் ஆதி தாலஸ மண்டேஸ்வர நாயனார்[க்கு] . . . . கன்றூர் நாட்டு சோழ விச்சாதிர சருப் பேதிமங்கலத்து மஹாஸபைப் பெருமக்களோம் பூமி விலையாவண

7. க் கைய்யெழுத்து இத்தேவர்க்கு நாங்கள் இறைஇலி தேவதானமாக விற்றுக்குடுக்கிற பூமியாவது இவ்வூர்ப் பெருவரம்பின் பள்ளக்கால் வழி வடக்கு நோக்கி போன கோட்டுக் கிழக்கால் வழியான நடுவிற்செறு விற்றதற்கு கீழ்பாற் கெல்லை இள[மை] முத்தரையன் செறுவுக்கு மேற்குந் தென்பாற்க் கெல்லை . . கீழாகறத்து . . . ஒட்டிக்காற் செறுவுக்கு வடக்கும் மேல் பாற்கெல்லை இருங்கண்டித்தால் [மூற்த்தி]க் கிரமவித்தந் செறுவுக்கு கிழக்கும் வடபாற்கெல்லை புரிசைநாட்டுக் கப்பிமான கொட்டூர் எல்லைக்கு தெற்க்கும் இவ்வி

8. சைத்த இன்னா[ன் *] கெல்லைக்கும் உட்பட்ட உண்ணில ஒழிவிந்றி இபூமிக்கு எம்மில் இசைந்த விலைப்பொருள் ராஜராஜந் காசு பத்தும் [அ]றக் கொண்டு விற்றுக் குடுத்தோம் இதுவே பொருள்மாவறுதியாவ தாகவும் இ[ப் *]பரிசு இறை இலி தேவதானமாக விற்றுக் குடுத்தோம் இந்நிலத்துக்கு மேநடை நீர் பாயப் பெறுவதாகவும் நீர் [அ]றுதியில் குற்றேத்தமிட்டுங் கூடை நீர் ஏ[ற்ற]த்தும் நீர் பாச்சிக் கொள்ளப் பெறுவதாகவும் இந்நிலத்துக்கு நீர் விலையும் வெட்டியமஞ்சியும் சில்லிை

9. ற சோறுமாட்டு மற்றும் யாதேனு மொன்றுங் காட்டப் பெறாததாகவும் காட்டி *யஜாஸந* முதலாகத் தான் வேண்டு கோவுக்கு நிசதம் அரைக்காற் பொன் மன்றப் பெறுவதாக இப்பரிசு இசைஞ விற்றுக் குடுத்தோம் சோழ விச்சாதிரச் சருப்பேதிமங்கலத்து ஊஹாஸஹையோம் ஸஹையார் பணிக்க எழுதிநேன் ஊற்றுக் காட்டுக் கோட்டத்து நீர்வேளூர் நாட்டு நீர் வேளூர்க் கடுவ நிலத்து . . . . . . யறிவேன் இவை என் எழுத்து இக்கோயிலித் திருவுண்ணாழி உடையோ[ம் *] இந்நிலங் கைக்கொண்டு உழு

10. துழுவித்தும் முட்டாமை ஒரு சிவயோகியை உடையார் அமுது செய்யுங் காலத்திலே அமுது செய்விப்போமாகவும் செய்யாதொழியில் *ஸ்ரீ ஊஹெஸ்ல*[ரர் *]க்கு பிழைத்தோ[ம் *] இந்நிலத்து நெல்லு தேவகஂிகள் பண்டாரத்து முதலாக பெருவதாகவும் முதலாக்கில் விரையாக்கலி மறுத்தார் படுஞண்டபடுவோம் இது *வதூஹெஸ்ர ரக்ஷை*।–

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	16,26
வட்டம்	:	ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1028,1038
ஊர்	:	சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	:	230, 232,229/1961-62
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	18,19,20
அரசன்	:	-			

இடம் : சிவன் கோயில் கருவறையின் தென்புறக் குமுதம்

குறிப்புரை : 3 கல்வெட்டுகளும் தொடக்கம் இல்லாமலும் சிதைந்தும் முழுமை யடையாமலும் உள்ளன. இருப்பினும் சில விவரங்கள் அறியப்படுகின்றன.

ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து நீர் வேளூர் நாட்டு, நீர் வேளூர் ஊர் சபையார், புரிசை நாட்டு உரோடகடத்து ஸ்ரீராஜராஜஸ்வர முடைய கோயில் நிர்வாகிகளிடமிருந்து 400 காசுகள் பெற்றுக் கொண்டனர். இதில் காசு ஒன்றிற்கு வட்டியாக "ராஜகேசரி" என்னும் அளவையால் பதக்கு நெல்லாக 400 காசுக்கு 66 கலம் இரு தூணி நெல்லினை ஒவ்வொரு வருடம் கோயில் திருமுற்றத்தில் அளித்திட சம்மதம் தெரிவித்துள்ளனர். வெண்கூடல் சபையினர் 500 காசுகள் பெற்றுக் கொண்டு 83 கலம் 1 தூணி வருடந்தோறும் வழங்கிடச் சம்மதம் தெரிவித்துள்ளனர். அதேபோன்று மதுரை மழலைமங்கலம் சபையினரும் நெல் வழங்கிடச் சம்மதித்துள்ளனர்.

கல்வெட்டு :

I

1. ௰௬ ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து நீர் வேளூர் நாட்டு சிவன்கூடல் ஸபையோம் . . .

2. மனையிற் கோட்டத்துப் புரிசை நாட்டு உரோடகத்து ஸ்ரீராஜராஜ ஈஸ்வரமுடைய மஹாதேவர் ஸ்ரீகாஸ வஸெ்ஷுஸ்வ[ர்] கஜிகள் பக்கல் இதேவர் பண்டாரத்து யாங்கள்

3. கொண்டு கடவ காசு நானூறு இக்காசு நானூறுங் கொண்டு கட[வபொந்] கொண்ட பரிசாவது காசு ஒன்றினுக்கு ஆண்டு வரை பொலிசை ராஜகேஸரியால் நெல்லுப்பதக்காக வந்த நெல்லு அறுபத்

4. தறு கலநே இரு தூணியும் ஆட்டாண்டு தோறும் சஙூ ாதித்தவன் திருமுற்றத்துக்கே கொ[ண் *]டு வஙூ இத்தேவர் கன்மிகள் வசம் பண்டாரத்தளஙூ தரவு கொள்வோமாகவும் இவமுது காசு [கொ]

5. ள்க வென்று சொல்லிப்போஹோமாகவும் இதற்றிறம்பில் யஜாவஙு முதலாகத் தான் வேண்டு கோவுக்கு தான் வேண்டு நெற்பொன் அரிசி மன்ற பெறுவதாகவும் இம்மன்றுபாடு இறுத்து

6. [ெ]பாலிசை . . . . ற்று . . . . தாக நெல்லு . . . . டை [நா]ற்ப்பதாகவும் இப்பரிசு . . . . .

7. குடுத்தோம் வெண்கூடல் ஊஹாஸஹையோம் பணிக்க எழுதினேன் இவ்வூர் ஶிவஸ ாஹுணன் அக்கு பிரான் எண்பதுஹட்டநென் இவை என் எழுத்து யாண்டு

II

1. உயகூஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து செங்காட்டுக் கோட்டத்து மாகணூர் நாட்டு பெரும்பூதூரான . . . தச்சருபேதிமங்கலத்து மஹா ஸஹைஓம் கை எ

2. முத்து மணையிற்க் கோட்டத்துப் புரிசை நாட்டு உரோடகத்து ஸ்ரீராஜராஜஈஸ்வரமுடைய மஹாஜெவர் ஆதிஶாஸசண்டேஸ்வ ரர் கன்மிகன் பக்கல் இத்தேவர் பண்டாரத்து யாங்கள் கொண்டுக

3. டவ காசு அஞ்xறுங் கொண்டு கடவோம் கொண்ட பரிசாவது காசு ஒன்றிநுக்கு ஆண்டு வரை பலிசை ராஜகெஸரியால் நெல்லு பதக்காக வஙு நெல்லு எண்பத்து முக்கலனே தூணியு மாட்டாண்டு தோறும் சஙிரா

4. தித்தவன் இத்தேவர் திருமுற்றத்துக்கே கொ[ண் *]டு வந்து தேவகன்மிகள் வசம் பண்டாரத்துளஙூ தரவு கொண்மாகவு[1]மி ம்மு

5. . . . . . .தான் வேண்டு னெல் பொன் அரிசி மன்றப் பெறுவதாகவும் இமன்று பாடு இறுத்த இப்பலிசை நெல்லு ஆண்டாண்டு தோறும் வழுவாமை அளப்ப . . . .

III

1. ஆட்டாண்டு தோறும் வஙூ ாஷிதவற் இதேவர் திருமுற்றத்துக்கே கொ[ண் *]டு வஙு ஷேவகஙிகள் வசம் பண்டாரத்த

2. ளஙு தரவு கொள்வோமாகவும் இம்முதற் பொன் கொள்கவென்று சொல்லப் பெறாதோமாகவும் இதற்றிறம்பில் யஜா

3. ஸண முதலாகத் தான் வேண்டு கோவுக்கு நிசதம் நெற்பொன்னரிசி மன்றப் பெறுவதாகவும் இம்மன்றுபாடிறுத்து

4. இப்பலிசை யாட்டாண்டு தோறும் வழுவாமை அளப்பதா[க*]வும் இன்னெல்லுத் தண்டுவதற்கு விடை குடுப்பத[ா]

5. கவும் ஒட்டி இட்டுக் குடுத்தோம் மது[ரை]ய்மழலைமங்கலத்து ஊஹா ஸஹையோம் ஸஹையார் பணிக்க வெழுதினேன் இவ்வூ[ர்]

6. கரணத்தான் பெ . . நூற்றெண்மனான உத்தமப்பிரியனெ . . . . எழுத்து

---

1. கொள்வோமாகவும்

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 521/2013

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: 11
வட்டம்	: ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1023
ஊர்	: சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	: 231/1961-62
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊ.க.எண்	: 21
அரசன்	: முதலாம் இராஜேந்திரன்		

இடம் : சிவன் கோயில் அர்த்த மண்டபத் தென்புற ஜகதி

குறிப்புரை : ஜெயங்கொண்ட சோழமண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து நீர்வேளூர் நாட்டு நீர் வேளூர் சபையார், இம்மண்டலத்து மனையிற் கோட்டத்துப் புரிசை நாட்டு ராஜராஜீஸ்வரமுடையார் கோயில் கன்மிகள் வழியாக பண்டாரத்திலிருந்து 20 கழஞ்சு பொன் பெற்றுக் கொண்டனர். கழஞ்சு ஒன்றினுக்கு வட்டியாக 'ராஜகேசரி' என்றும் அளவையால் ஒரு கலம் இரு தூணி நெல் ஆக வருடம் ஒன்றினுக்கு 20 கழஞ்சிற்கு, 33 கலம், தூணி நெல்லும் பண்டாரத்தில் கொண்டு வந்து கொடுக்கச் சம்மதித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. யாண்டு ௰௧ ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்து நீர் வேளூர் நாட்டு நீர் வேளூர் ஊரோங் கையெழுத்து மனையிற் கோட்டத்துப் புரிசை நாட்டு ஸ்ரீராஜ
2. ராஜஈ*ஸ்வ*ர முடைய மஹாதேவர் ஆதி *ஶா*ஸ சண்டே*ஸ்வ*ரர் க*ந்மி*கள் பக்கல் இதேவர் பண்டாரத்துக் கொண்ட பொன் இருபதின் கழன்சு இப்பொன் இருபதின் கழஞ்சுங் கொண்டு கடவோங் கொண்ட பரிசாவது
3. பொன் கழஞ்சினுக்கு ஆண்டு வரை பலிசை ராஜகேஸரியால் நெல்லு கலநெ இரு தூணியாக வ௩ நெல்லு முப்பத்து முக்கலநே தூணியு மாட்டாண்டு தோறும் ச*ந்மி*ராதித்தவற் திருமுற்றத்துக்கே கொ[ண் *]டு வந்து
4. இதேவர் தேவக*ந்மி*களோடும் பண்டாரத்தள*வு* பொன் கொள்க வென்று சொல்லப் பெறாதோமாகவுமிதற்நிறம்பில் *யஶாஸந* முதலாக தான் வேண்டு கோவுக்கு தான்

5. வேண்டு . . . பொன் அரிசி மன்றப் பெறுவதாகவுமிம் . மன்று . .பாடிறுத்து இப்பொலிசை நெல்லு ஆட்டாண்டு தோறும் வழுவாமை அளிப்ப தாக[வு*]ம் நெல்லுத் தண்டவஞர்க்கு மெய்க்கண்டு

6. விடைகுடுப்பதாகவும் இப்பரிசொட்டி இட்டுக் குடுத்தோம் நீர்வேளூர் ஊரோம் ஊரார் சொல்ல வெழுதிநேன் இவ்வூர் வெள்ளாளன் கண[க்க]பாக்க முடையாநேன் இவை

7. என்னெழுத்து

த.நா.அ. தொல்லியல் துறை   தொடர் எண் : 522/2013

மாவட்டம்	:	திருவள்ளூர்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	ஸ்ரீபெரும்பத்தூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 18-ஆம் நூற்றாண்டு
ஊர்	:	சிவபுரம்	இ.க.ஆ.அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	-	ஊ.க.எண்	:	-
அரசன்	:	-			

இடம் : சிவன் கோயில் தென்புற பத்ம ஜகதி

குறிப்புரை : கைக்கோளப் படையை பற்றிய செய்தி கிடைக்கின்றது.

கல்வெட்டு :

1. துன்முகி ஹூ சித்திரை *மீ* உக உ கூவம் இராமு ணாயக்கா் எலும் பட்டல பாக்கம்
2. ஷிவ புரத்து [கை]கோள [எல்லை படை] ன்று இந்த படி . . . நடத்திவரக் கடவொம்னாச்ச. . .

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 523/2013

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	37
வட்டம்	:	ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1107
ஊர்	:	இடையார்பாக்கம்	இ.க.ஆ.அறிக்கை	:	252/1910
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	1
அரசன்	:	முதலாம் குலோத்துங்கன்			

இடம் : மகாதேவர் கோயில் கருவறை வடக்கு பட்டி மற்றும் குமுதம்.

குறிப்புரை : ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மனவிற் கோட்டத்துப் புரிசை நாட்டு புரிசை திருப்படக்காடுடைய மகாதேவர்க்கு ஒரு நந்தா விளக்கெரிக்க, இம்மண்டலத்து எயிற்கோட்டத்துக் கோநேரி நாட்டு கோநேரியைச் சார்ந்த அரசூர் கிழவன் வேளாந் மதுராந்தகன் என்பவனிடமிருந்து தொண்ணூற்று ஐந்து ஆடுகள் பெற்றுக்கொண்டு தினம் உழக்கு நெய்யினை தானும் தன்வற்கத்தாரும் அளக்க பங்கி புஞ்சையன் என்பான் உறுதியளித்துள்ளான். இக்கோயிலை சந்திரசேகரன் இரவி என்கிற சோளேந்திர சிங்க ஆசாரியன் என்பவன் முதலாம் குலோத்துங்கனின் ஆணையின் பேரில் எடுப்பித்தச் செய்தியினை இக்கல்வெட்டுக் கூறுவது சிறப்பாகும். இந்திய கல்வெட்டு ஆண்டறிக்கையில் ஆட்சியாண்டு 38 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கல்வெட்டில் தெளிவாக 37 என்றே உள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ புகழ்மாது விளங்கச் சயமாது விரும்ப நிலமகள் நிலவ மலர்மகள் புணர உரிமையிற் சிறஉ மணிமுடிசூடி மீநவர் நிலைகெட வில்லவர் குலைதர ஏநைமந்நவர் ரியலுற்றழிதரத் திக்கனைத்து தந் சக்கர
2. நடாத்தி வீரஸிංஹாஸநத்து அவநிமுழுதுடையாளோடும் வீற்றிருஉருளிய கோராஜகேஸரி வநராந் சக்ரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துංக சொழ தெவற்கு யாண்டு ௩௰௭ ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மனவிற்
3. கோட்டத்துப் புரிசை நாட்டு புரிசைத் திருப்படக்காடுடைய மஹா தெவற்கு இம்மண்டலத்து எயிற்கோட்டத்துக் கோநேரி நாட்டுக் கோநேரியில் அரசூர் கிழவந் வேளாந் மதுராஉகநேந் வைத்த திருநுஉா விளக்கு ஒந்றுக்கு

4. விட்ட ஆடு க*யரு இவ்வாடு தொண்ணூற்றைஞ்சும் சாவா மூவாப் பேராடாக இத்தேவர் சுரபி இடையந் பங்கிபுஞ்சியேந் கைக்கொண்டு இத்தேவர் பண்டாரத்தே நிசதம் உழக்கு நெய் நாநும் எந்வற்கத்தாரும் அ

5. ளக்க கடவோமாகவுமிது முட்டில், முட்டாபடி நெய்யளக்கக் கடவேநாகச் சம்மதித்தாடு தொண்ணூற்றைஞ்சுங் கைக்கொண்டு சந்திராதித்தவர் உள்ளளவும் அளக்கக் கடவேநாநேந் பங்கிபுஞ்சியேந் இது சிலாலேகை

6. செய்வித்தேந் பெருமாள் திருவாய்மொழிகருள இத்திருக்கற்றளி எடுப்பித்த சந்திரசேகரன் இரவியாந சோளேசு சிங்க ஆசாரியநேந் இவை எந்எழுத்து இத்தந்மத்தை செலுத்தாதே நின்றார் விரோத நிந்றார்

7. கங்கையிடை குமரியிடை செய்தார் செய்த பாவத்துட்படுவார் இது ஸ்ரீ வைஷ்ணவ ரக்ஷை :ஸ்ரீ

---

* க௯ - என்பதற்கு க என்று குறிப்பிடப்பட்டுள்ளது

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 524/2013

மாவட்டம் : காஞ்சிபுரம்		ஆட்சி ஆண்டு	: 13
வட்டம் : ஸ்ரீபெரும்புதூர்		வரலாற்று ஆண்டு	: கி.பி. 1083
ஊர் : இடையார்பாக்கம்		இ.க.ஆ.அறிக்கை	: 251/1910
மொழி : தமிழ்		முன் பதிப்பு	: -
எழுத்து : கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு : சோழர்		ஊ.க.எண்	: 2
அரசன் : முதலாம் குலோத்துங்கன்			

இடம் : மகாதேவர் கோயில் கருவறை மேற்கு பட்டி, குமுதம், ஜகதி

குறிப்புரை : சோழ மண்டலத்து நித்தவிநோத வளநாட்டுக் கிழார் கூற்றத்தைச் சேர்ந்த ஆரூர் உடையான் வைத்தியநாதன் திருச்சிற்றம்பலம் உடையான் என்பவன் திருப்படக்காடுடைய மகாதேவர்க்கு இவ்வூரார் வசம் நிலம் ஒன்றினை வாங்கித் தேவதானமாக அளித்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ புகழ்மாது விளங்கச் சயமாது விரும்ப நிலமகணிலவ மலர்மகள் புணர உரிமையிற் சிறஙு மணிமுடி சூடி மீநவர் நிலைகெட வில்லவர் குலைதர ஏனைமந்நவர்ரியலுற்றிழி

2. தரத்திக்கனைத்துஙுந் சக்கரநடாத்தி விஜயாபிஷெகம் பண்ணி வீர ஸிம்ஹாஸநத்து அவநிமுழுதுடையாளோடு வீற்றிருஙுருளிய சக்ரவத்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழதெவற்கு யாண்டு

3. ௰௩ ஆவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மணவிற் கோட்டத்து . . . சோழமண்டலத்து நித்த விநோத வளநாட்டுக் கிழாற் கூற்றத்து

4. . த்தங்குடி ஆருர்ருடைடையாந் வைத்யநாதன் திருச்சிற்றம்பல முடையாந் எங்கள் பக்கல் இறைவிட்டிறையிழித்து திருபடக்காடுடைய மஹாதெவற்கு தெவதாநமாகத் திருத்திவிடக் கடவதாக கொள்கிற நி

5. . . . வேட்டைக்காறந் மெந்று பேர்கூவப்படும் நிலத்துக்கு மேற்கும் தாமரை கிழாந் . . காணி நிலத்துக்கும் திருக்காணிஸ்வரமுடைய மஹாதெவர் தேவதாநத்துக்கு வடக்கும் ஈழத்தி

6. பட்டி எந்று பேர்கூவப்படும் நிலத்துக்குக் கிழக்கும் ஊர் நத்தத்தில் நாங்கள் விற்கிற நிலத்துக்கு உடலாக எல்லைக்குறி தறித்த சூலைக்கல் நட்டு எல்லைக்குத் தெற்கு மிந்நாந் கெல்லைக்கும் நடுவுபட்டு இழுப்பர்நெரியம் சூழ்

7. ந்த மேடு யெந்று பேர் கூவப்பட்ட நீர் தியாகபட்டிச் செய்வுண்ணா . . நிலைக்குழியுஙிடருமாய்ப் பழைதாய்ப் போந்த கூறுகளிலு முதலித்தரமிலி பாழோந இந்நிலந் திருத்திச் சோழ அணுக்க விளாகமெந்று பேரிட்டு

8. திருப்படக்காடுடைய மகாஜெவற்கு தேவதானமாக விடக்கடவதாகவும் இந்நிலத்துக்கு தேவஶாநங்கள் அஙராயம் கொள்ளும்படி எதுங்கொளா தோமாகவு மிந்நிலத்துக்கும் . . நீர்விலை உயஅ க்காசு வாசநநிரம முன்

9. . . . ஊரோமே இறுத்து

10. . . இந்நிலத்து . . டையாந் வெஶநாதந் திருச்சிற்

11 றம்பலமுடையாந் திருப்படக்காடுடைய ஊஹாஜெவற் . . விடக்கடவதாகவும் . . குடுத்துக் கொள

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 525/2013

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: 12
வட்டம்	: ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	: கி.பி.1145
ஊர்	: இடையார்பாக்கம்	இ.க.ஆ.அறிக்கை	: 254/1910
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊ.க.எண்	: 3
அரசன்	: இரண்டாம் குலோத்துங்கன்		

இடம் : மகாதேவர் கோயில் கருவறைத் தெற்கு குமுதம்

குறிப்புரை : ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணவிற் கோட்டத்து புரிசை நாட்டு இடையாற்றுபாக்கம் என்னும் ராஜவிச்சாதிர சதுர்வேதிமங்கலத்து இறைவன் திருப்படக்காடுடையார்க்கு விளக்கு வைக்க, இவ்வூரைச் சார்ந்த அருளாளபட்டன் மகள் ஆண்டமைச் சாநி என்கிற பிராமணப் பெண் முப்பது காசுகள் புரிசை ஊரார் வசம் கொடுத்து, நிலம் ஒன்றினை வாங்கி திருநந்தா விளக்குப் பட்டியாக அளித்து ¾ விளக்கெரிக்க தானமளித்துள்ளாள்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோ௱ாஜகேஸரி வந்மரான சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலொத்துங்க சொல செவற்கு யாண்டு ௰௨ ஆவது ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மணவிற் கோட்டத்து புரிசை நாட்டு இடையாற்றுப்பாக்கமான ௱ாஜவிச்சாதிரச் சதுற்பேதி மங்கலத்து ஆளுடையா
2. ர் திருப்படக்காடுடையாற்கு இவ்வூர் ஸவநந அருளாள ஹட்டந் மகள் ஆண்டமைச் சாநியேந் இசெவற்குத் திருநுந்தா விளக்கு கொள்வாந் காட்டிந காசு முப்பதுக்கு முக்கால் விளக்கு
3. காசு முப்பதும் ஒடுக்கிநமையில் இத்செவர் தேவதாநம் புரிசை ஊரோம் இக்காசு தந்து எங்கள்ளூரில்லே பூமிகொள நிலவிலையாவணக் கையெழுத்து எங்கள் காணியற இப்படி பலமேற்செறுவும் இதந்மேலை வடக்கில் . . . குழிக்கு வடக்கு நூற்று நாற்
4. பது நாலும் ஆகத்தடி பலவிநாள் பதிநாற் சாண் கோலால் குழி இரண்டாயிரமும் இதில் உள்ளிட்ட கிணறும் இறையிலி திருநந்தாவிளக்கு பட்டியாக இறையிழிச்சி சில்லறை செ. மாட்டு ஆள் அமஞ்சி . . .
5. லம் விற்றுக் குடுத்தோம் புரிசை ஊர்ரோம் . . .

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 526/2013

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: 11
வட்டம்	: ஸ்ரீபெரும்புதூர்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 1174
ஊர்	: இடையார்பாக்கம்	இ.க.ஆ.அறிக்கை	: 253/1910
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊ.க.எண்	: 4
அரசன்	: இரண்டாம் ராஜாதிராஜன்		

இடம் : மகாதேவர் கோயில் அர்த்த மண்டபத் தெற்கு குமுதம்.

குறிப்புரை : இடையாற்றுப்பாக்கமான இராஜவிஜாதிர சதுர்வேதி மங்கலத்தைச் சார்ந்த அருளாளபட்டன் மகள் ஆண்டமை சானி என்பவள் திருபடக் காடுடைய மகாதேவர்க்கு இக்கோயில் தேவதான நிலம் ஒரு வேலி நிலம் புரிசை ஊராரிடம் வாங்கி திருநந்தா விளக்கு பட்டியாக இவள் ஏற்கனவே அளித்த நிலம் யாரும் பயிர் செய்யாமல் கிடந்ததால், இவ்விளக்கு எரியாமல் நின்றுபோனது. இந்த நிலத்தினை ஊராரே பெற்றுக்கொண்டு ¾ திருநொந்தா விளக்கு வைக்க பசுக்கள் அளிக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இப்பெண் இரண்டாம் குலோத்துங்கனின் 12-ஆம் ஆட்சி யாண்டில் (கி.பி. 1145) இவ்விளக்கினை வைக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதை முந்தையக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸிஇராஜாதிராஜ தெவற்கு யாண்டு யக வது புரட்டாதி மாஸத்து இடையாற்றுப்பாக்கமான இ*ரா*ஜவிஜாதிரச் சதுப்பே
2. தி மங்கலத்து ஸவன்ன அருளாள பட்டன் மகள் ஆண்டமைச் சாநி ஆளுடையாற் திருப்படக்காடுடையாற்கு இத்தேவர் தேவதானம் புரிசையூரில் ஊரார் பக்கல்
3. திருநுந்தாவிளக்கு பட்டியாகக் கொண்டு விட்டநிலம் ஒருவேலியும் ஏரி கொளாதலாலும் கிராமமான மாதலாலும் இந்நிலத்துக்கு காணியாளநாய் பயிற செ
4. ய்வாரிலாமல் இவ்விளக்கு விழுந்து கிடந்தமையில் இந்நிலத்தால் இவ்விளக்கு செல்லாமை இவ்வூராரை உங்கள் நிலம் நீங்களே கைக் கொண்டு இந்நிலத்
5. தாலுள்ள திருநுந்தா விளக்கு முக்காலுக்கும் பசுவிட வேணுமென்று சொல்லி இவ்வூராற பசு விட இவூரார் பக்கல் இவிளக்கு முக்காலுக்கும் பசுக்கைக் . .

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 527/2013

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	12
வட்டம்	: காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 997
ஊர்	: கூரம்	இ.க.ஆ.அறிக்கை	:	32/1900
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	: சோழர்	ஊ.க.எண்	:	1
அரசன்	: முதலாம் இராஜராஜன்			

இடம் : கேசவப்பெருமாள் கோயில் வடக்குச் சுவர்.

குறிப்புரை : ஊற்றுக்காட்டுக் கோட்டத்து நீர்வேளூர் நாட்டுக் கூரமாகிய வித்தியாவினிதச் சதுர்வேதிமங்கலத்து மீயாளும் சபையார், அவ்வூர் நடுவில் ஸ்ரீகோயில் முகமண்டபத்தில் அனைவரும் கூடி, இவ்வூர் சுப்ரமணிய சுவாமிக்கு மூன்று சந்தியும் உணவுப் படைக்க வழிவகைச் செய்துள்ளனர்.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* சாலை கலமறுத்த *கோவிராஜராஜகேஸரிபந்மர்க்கு* யாண்டு [௰௨] ஆவது ள் . . . . ஊற்[று]க்காட்டு[க்] கோட்டத்து நீர்வேளூர் நாட்டுக் கூரமாகிய *வித்யாவிநீத* சது*ர்வ்வேதிமங்கலத்து* மீயாளும் *ஸபையோம்* எம்மூர் நடுவில் ஸ்ரீகோயிலில் முகமண்டபத்தே *ஸ(ஸ)வ்வாவயவத்தோர்* நிரம்பக் கூட்டக்குறைவறக் கூடியிரு*ந்து* எம்மூர் ஊருடைய *ஸுப்ரஹ்மண்யதேவர்க்கு* முன் உச்சியம்போதைக்கு திருவமுதிநுக்கு *ஸபையோம்* வைய்த்த உணங்கற்பிடியால் திருவமுதொன்றும் நிந்ற இரண்டு *ஸந்தி*க்குந் திருவமுது செய்வி[ப்*]பத[ற்]க்கு இ[வ்*]வூர் யாளுங்கணத்தாருள் குமுழூர் சேட்டய [க்ர]மவித்த[ன்] ஸ்ரீ[ம]ஹாஹத்துக்கு *ஸபையோ*முக்கு வி
2. ட்ட பொன் விளைக்கிந் கீழைகால்வழி இவநு[டை*]டய மும்மாவரை நிலத்திலு[ங்] கிழக்கடய *ஸபையோ*முதான பொத்தகப்படி[க்*]கு [ஒ]ருமாவரை நிலமும் ஒ . . . . *ஸ்ரீகேஸவ க்ர*மவித்தன் இத்*தே*வர்க்கு *தா*ன மட்டிக்குடுத்த களியரைக் கால்வழி மேற்படி பொத்தகப்படி அரையே முக்காணி நிலமும் ஆலிக்கொன்றைக் *கேஸவ*பட்டன் மேற்படி *தே*வர்க்கு *தா*னமட்டிக்குடுத்த புத்தூர் பொற்றைக் கொண்ட கண்ட(ன்)னேரி மேலைக்கால்வழி மேற்படி அறுமாவரை நிலமும் இருங்கண்டி எறநாராயண *க்ர*மவித்தன் மக[ன்] திருவொற்றியூர்

கூ_உவித்தன் மேற்படி தெவர்க்கு ஊன மட்டிக்குடுத்த வடபுறங்கால் மே[ற்]படி ஏழுமாவரை நிலமும் ஆக ஒன்றே அ

3. றுமாக்காணி நிலமும் இக்குடிமக்கள் இத்தெவர்க்கு இரண்டு ஸஷிக்கு திருவமுதிநுக்காக ஊனமட்டிக் [குடு]த்த[மையி[ல்] இரண்டு ஸஷிக்கு ஷிருவமு[தினு]க்கு இஹூ[ரி]யாவுதாகவும் இன்னில . . . . . . முத . . ருமாவரைக்கும் விலை உ_வூமும் இந்நிலமுட்பட ஒன்றே அறுமாக்காணி நிலத்துக்கும் இறை இழித்துவதற்க்கும் இஸ்ரீகோயிலுடைய ஶிவஸ_ாணன் ஸ்ரீகர விஜ்ஜாவிநித . . . படியான் மகன் கொவிஷசிவநான ஸ்ரீகாவைப்பட்டுடையான்பக்கல் இவ்வொன்றே அறுமாகாணி நிலத்துக்கும் இறைஉ_வூ [மறக்கெ]ாண்டு இன்னிலம் எப்பே(ா)ற்ப்பட்ட இறையூ மிறாததாந இறை] இழிய்ச்சி இந்நிலம் இரண்டு ஸஷிக்கு [தி]ருவமுதிநுக்கு(காக) சஷ_ாதித்தவலம் இறையிலியாக . . . ப்பணியெடுத்துப் பணி[ய]து ஊரு

4. டைய ஸ‾ஸ_உணூதெவர்க்கு ஶூாஷைகை செய்துகுடுத்தோம் ஸஹெயொம் இதெவர்க்கு முன்னுள்[ள] பொத்தகப்படி நிலத்தில் திருவிழாப்புறமாக . . . . மெயாவதாக . . . [நி]ன்ற பொத்தகப்படி நிலம் மூன்று ஸஷிக்கும் சுஷ்ூக்க அஷ்ூநாஹொம மாவுதாகவும் இறை இழிய்ச்சி இப்பொழுது வைத்துக்குடுத்த ஒன்றே அறுமாகாணி நிலமும் உணங்கற்ப்பிடியுங் கொண்டு தி_ஸஷியு ஷிருவமுது காட்டுவுதா[க]வும் வட்டிநாழி கொண்டு ஸஷிவிளக்கெரிக்கக் கடவார்களாகவும் ஆக இந்நிமஷங் கொண்டு இஸ்ரீகோயிலுடைய ஶிவஸ_ாஹூணன் கொவிஷனங்காடி சிவநும் இவன்றம்பிமாரும் இவர்கள் வசமே இன்னிலங்களும் உணங்கற்பிடியுங் கொண்டு இந்நிவஷப்படியே செய்வ[ா]ர்களாகவும் இவர்க

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 528/2013

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	17
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 886
ஊர்	:	கூரம்	இ.க.ஆ.அறிக்கை	:	33/1900
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	பல்லவர்	ஊ.க.எண்	:	2
அரசன்	:	நிருபதுங்கவர்மன்			

இடம் : கேசவப்பெருமாள் கோயில் வடக்குச் சுவர்.

குறிப்புரை : படுவூர்க்கோட்டத்து காரை நாட்டுப் பல்லவ நாராயண சதுர்வேதி மங்கலத்து சபையார், இவ்வூரிலிருந்த 27,000 குழி நிலத்தினை 27 பங்குகளாகப் பிரித்து ஆளுங்கணத்து உறுப்பினர்களாக இருந்த பிராமணர்களுக்கு விற்றுக் கொடுத்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] கோவிசைய நிருபதொங்கபருமற்கு யாண்டு பதின் ஏழாவது படுவூர்க்கோட்டத்து காரைநாட்டுப் வ஌வநாராயண ஸதுர்வ்வேதி மங்கலத்து ஸபையோம் எம்மூர் கற்கயம் இருபத்தேழாயிரங் குழி . . . . . இக்கோட்டத்து . . . . அமனிநாராயண ஸதுர்வ்வேதிமங்கலமும் [ய]ாளுங்கணத்தாருள் ஸ்ரீஹாளெக்கணசர்ம க்ரமவித்தனும் . . . . ருக்கு மூவாயிரங் குழியும் கூாஞ்சிக் குமரடிச்சடங்கவிக்கு அ
2. [ய்]யாயிரங் குழியும் பசிண்டி கணசந்த்ரக்ரமவித்தனுக்கு மூவாயிரங் குழியும் நல்லூர்ச் சன்ன[ஆ]திச்சசர்மமெ வெளி . . . ரிக்கு இராயிரங் குழியும் முடும்பைச் சப்படிக்ரமவித்தச் சோமாசிக்கு ஆயிரங் குழியும் இவர் தம்பி காளிமண்டைச் சடங்க[வி]க்கு ஆயிரங்குழியும் . . . . . னுக்கு இராயிரங் குழியும் குமட்டூர்ச் ச . . ச்சடங்கவிக்கு ஆயிரங்குழியும் மகசிர பொற்காளி ஹட்டனுக்கு ஆயிரங் குழியும் . . . . . யிற் இருபத்தேழு மனையும் பாழ் . . .
3. ப்பாடி இருபத்தேழு பங்கும் மற்றும் பஞ்சாகமுமுள்ள இடத்து இவ்விருபத்தேழு பங்கினாலும் நிலமும் இம்மேற்சொல்லப்பட்ட . . . . . ம் நிலவ[ழி]யால் விலைப்பொருளறக் கொண்டு விற்றுக்குடுத்துச் சிலாலேகை செய்துகுடுத்தோம் ஸபையோம் இவ்விருபத்தேழாயிரங் குழியும் பன்னிருச்சாண் கோலால்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 529/2013**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	10
வட்டம்	:	காஞ்சிபுரம்.	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 995
ஊர்	:	கூரம்	இ.க.ஆ.அறிக்கை	:	33A/1900
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	3
அரசன்	:	முதலாம் இராஜராஜன்			

இடம் : கேசவப்பெருமாள் கோயில் வடக்குச் சுவர்.

குறிப்புரை : ஊற்றுக்காட்டுக் கோட்டத்து நீர்வேளூர் நாட்டுக் கூரமாகிய விஜ்யாவினித சதுர்வேதிமங்கலம் ஊரினை நிர்வகிக்கும் சபை, கச்சிப்பேட்டு அதிகாரி மீனவன் மூவேந்தவேளான் வீட்டின் மேல்புறத்தில் அமைந்திருந்த ஈஸ்வரர் ஆலயத்தின் முற்றத்தில் அனைத்து மக்களுடன் கூடி நிறைவேற்றிய மகாசபை தீர்மானம். இந்த ஆளுங்கணத்து உறுப்பினர் களில் ஒருவரான இருங்கண்டி காளிதாசசோமாசியர் என்பவர் மடம் ஒன்றினை எடுப்பித்துள்ளார். இம்மடத்திற்கு கார்த்திகை, மார்கழி, தை, மாசி, வைகாசி ஆகிய இம்மாதங்களில் தண்ணீர் வைக்கவும், நான்கு நாட்களுக்கு ஒரு முறை தரையினை மெழுகுவதற்கும் நிலம் ஒன்றினை இவ்வூர் மகா சபையினர் இறைநீக்கி மடப்புறமாக அறித்த ஆணை இக்கல்வெட்டாகும்.

கல்வெட்டு :

1. . . . . ளூர்சாலை கலமறுத்தருளி வேங்கைநாடும் கங்கபாடியும் நுளம்பபாடியும் குடமலைநாடும் கொல்லமும் கலிங்கமும் திண்டிறல் வென்றி தண்டால் கொண்டு தன்னெழில் வளர் (வளஊழி) ஊழி எல்லா யாண்டும் தொழுதகை விளங்கும் யாண்டே செழிஞரைந் தேசுகொள் ஸ்ரீகோராஜ ராஜ ராஜகேசரிபன்மற்கு யாண்டு ய-தாவது நாள் . . நால் ஊற்றுக்காட்டுக் கோட்டத்து நீர்வேளூர் நாட்டு கூரமாகிய விஜயாவிநீத சதுர்வ்வேதி மங்கலம் யாளும் ஸபையோம் கச்சிப்பேட்டு அதிகாரிகள் மீனவன் மூவேந்தவே(ள்)ளார் விட்ட வீட்டின் மேல்பக்கத்து ஈஸ்வராலையத்து திருமுற்றத்தே மஹாஸபை குறைவறக் கூடி இருந்து பணிப்பணியால் படுத்தி பணித்து ஸ்ரீமுகம் இட்ட பரிசாவது இவ்வூர் யாளுங்கணத்தாருள் இருங்கண்டி காளிதாஸ . . . சோமாசியாரெடுப்பித்த மட . . . . . மேட்டுப்பட்டியில் முப்பது பட்டிக்கால்லோடுமடைந்தத்தெக்க . . . . துக்கு கார்த்திகையும் மார்கழியுந் தையும் மாசி . . . . .

2. . . . வைகாசியும் ஆனியும் இந்நாலு ஊஸமும் தண்ணீர் அட்டுவதற்கும் நாலு நாளில் ஒருநாள் மெழுகுவதற்கும் ஆட்டொருக்கால் அழிவுசேராது மெழுகுவதற்கும் ஆக வைத்த நிலமாவது . . . . . க்கால்வழி ஆலிக்கொன்றை கேசுவபட்டன் ஊர்விடு நிலம் அரையும் கணியன் பள்ளத்துக் கீழைக்கால்வழி இருங்கண்டி இருஷிகேசுவக் கூஉவித்த சோமாசியார் மகன் *ரவி*கேசுவஜன்மன் ஊர்விடு நிலம் அரையும் ஆக இப்பட்டி நிலமும் இட்டு *ஸஞ(ர)ா*தித்தவற் மடப்புற(ம்)மாகப் பணிப்பணி எடுத்தி பணித்து ஸபை ஸ்ரீமுகம் இட்டு *ஸஞா*தித்தவற் இறையிழிச்சி குடுத்தோம் ஸபையோம் ஸபையுள்ளிருங ஸபை திருவடி பணிப்ப எழுதினேன் இவ்வூர் *உயூஸ்தர்* ஊங்கலோத்தமன் மகன் கற்பகப் பிரியனேன் இவை என்னெழுத்து இத்யூம் *ரக்ஷி*ப்பார் *உபைய ஸ்ரீவாஉஉஷி* என் *ஸிரஸிந* ||–

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: 40
வட்டம்	: காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 947
ஊர்	: கூரம்	இ.க.ஆ.அறிக்கை	: 34/1900
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊ.க.எண்	: 4
அரசன்	: முதலாம் பராந்தகன்		

இடம் : கேசவப்பெருமாள் கோயில் வடக்குச் சுவர்.

குறிப்புரை : ஊற்றுக்காட்டுக் கோட்டத்து நீர்வேளூர் நாட்டுக் கூரம் ஊர் சபையார் கற்கடக மாதம் தேய்பிறை சனிக்கிழமை இரவு அன்று திருவாய்ப்பாடி கூடத்தில் கூடி இவ்வூர் நிலம் ஆறுதரத்திலும் அதிக விளைச்சல் இருந்தாலும் விளைச்சால் குறைந்தாலும் வரிசெலுத்த வேண்டுமென விவாதித்து முடிவெடுத்துள்ளனர். தண்ணீரை முறையாக பகிர்ந்து கொள்ளவும் முடிவெடுத்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] மதிரைகொண்டீழம் புகுந்த கோப்பரகேஸரி வந்ர்க்கு யாண்டு நாற்பதாவது ஊற்றுக்காட்டுக்கோட்டத்து நீர்வேளுர்நாட்டுக் கூரத்து ஸபை

2. இவ்வாட்டை கற்கடகநாயற்று அபரபக்ஷத்துச் சனிக்கிழமையும் நவமியும் பெற்ற உரோயணி நாள் இராத்ரி எம்மூர்த் திருவாய்ப்பாடி ஸ்ரீகூடத்தே குறை

3. வற கூடியிருந்து செய்த வியவஸ்தையாவது இவ்வாண்டுமுதல் எம்மூர் நிலமுதல் ஆறுதரமும் உட்பட பாழும் வாழும் நாம் இறை . . . . . .

4. யும் இறுப்பதாகவும் இ . . . . . . பதாகவும் இகுடும்பின் வழிய் நிலவோபாதி நீருண்பதாகவும் தன் நிலவோபாதி . . . . .

5. கு[றி]த்தா[ன்] வாரியம் செய்வாராகவும் . . . . . .

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 531/2013

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: 12
வட்டம்	: காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 808
ஊர்	: கூரம்	இ.க.ஆ.அறிக்கை	: 35/1900
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு	: பல்லவர்	ஊ.க.எண்	: 5
அரசன்	: தந்திவிக்கிர்மபருமர்		

இடம் : கேசவப்பெருமாள் கோயில் வடக்குச் சுவர்.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு சிறுபகுதி மட்டும் உள்ளது. கூரத்து சபையார் என்ற குறிப்பு மட்டுமே காணப்படுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [||*] கோவிசைய தந்திவிக்கிரமபருமற்கு யாண்டு பன்னிரண்டாவது கூரத்து ஸபையோமெழுத்து இக் .... எம்மூர் உணங்கல்ப்பூண்டி .....

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 532/2013

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: 15
வட்டம்	: காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 954
ஊர்	: கூரம்	இ.க.ஆ.அறிக்கை	: 36/1900
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்		
அரசு	: இராட்டிரகூடர்	ஊ.க.எண்	: 6
அரசன்	: கன்னரதேவர் (மூன்றாம் கிருட்டிணன்)		

இடம் : சிவன் கோயில் அர்த்த மண்டபத் தூண்.

குறிப்புரை : ஊற்றுக்காட்டுக் கோட்டத்து நீர் வேளூர் நாட்டுக் கூரம் என்கிற இவ்வூரைச் சேர்ந்த ஆசாரியன் ஆதிய்யணன் என்பவன் இறைவனுக்கு திருவமுது வைக்க ஏற்பாடு செய்துள்ளான்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] கச்
2. சியும் தஞ்
3. சையும் கொண்ட
4. ஸ்ரீகந்நறதேவற்
5. க்கு யாண்டு பதி
6. னைஞ்(ச்)சாவது
7. ஊற்றுக்காட்டுகோ
8. ட்டத்து நீர்வேளூ
9. ர்நாட்டு கூரத்து ஆ
10. [சா*]ரியன் ஆதி
11. ய்யணன் வை
12. த்த பெருந்திருவ
13. மிது திருவுண்ணா
14. ழிகை உடையா
15. ரில் ஸட்டஸிவரு
16. ம் ஏறடுஸிவ . .
17. . மக்கும் ஒட்டி எ
18. ழுத்திட்டு குடுத்
19. த பரிசாவது யிப்
20. பெருந்திருக்கோ . . .

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 533/2013

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 9-ஆம் நூற்றாண்டு
ஊர்	:	கூரம்	இ.க.ஆ.அறிக்கை	:	36A/1900
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	பல்லவர்	ஊ.க.எண்	:	7
அரசன்	:	-			

இடம் : சிவன் கோயில் அர்த்தமண்டபத்திலுள்ள மற்றொருத் தூண்.

குறிப்புரை : தட்டான் இனத்தைச் சார்ந்த தொதவத்தி என்பவன் இத்தூணினைக் கொடையாக அளித்தச் செய்தி.

கல்வெட்டு :

1. தட்டான்
2. தொதவத்தி
3. வைச்ச தூ
4. ண்[||*]

மாவட்டம் : காஞ்சிபுரம்		ஆட்சி ஆண்டு	: 21
வட்டம் : காஞ்சிபுரம்		வரலாற்று ஆண்டு	: கி.பி. 890
ஊர் : கூரம்		இ.க.ஆ.அறிக்கை	: 37/1900
மொழி : தமிழ்		முன் பதிப்பு	: -
எழுத்து : கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு : பல்லவர்		ஊ.க.எண்	: 8
அரசன் : நிருபதுங்கன்			

இடம் : சிவன் கோயில் அர்த்தமண்டபத் தூண்.

குறிப்புரை : ஒய்மா நாட்டு பேராயூர் (பேரையூர்) நாட்டு நல்லாயூர் ஊரினன் ஒருவனிடம் கூரத்து சபையார் நான்கு கழஞ்சு பெற்றுக் கொண்டு, உணவளிக்கச் சம்மதித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [||*] ந்ருபதொ
2. ங்கர்க்கு யாண்டு இரு
3. பத்தொன்றாவது
4. கூரத்து ஸபை
5. யோ மெழுத்து ஒ
6. ய்மாநாட்டு பேரா
7. யூர்நாட்டு நல்லா
8. யூர் பெருஞ்சி
9. . . . . பக்கல் நாற்
10. கழஞ்சு பொ . . .
11. . . . . . இ
12. . . சான . . . ரு
13. ட்ட . . . . . .
14. கழித் . . . . . .
15. ண்ட முப்பது
16. முதல் 20 வரையிலான வரிகள் மிகச் சிதைந்துள்ளன.
21. ட்டியூட்டுவத . . . . . .
22. த்தோம் ஊட்டா . . . .
23. விதனால் வந்த
24. . . அவ்வவ்வாட்டை . . .
25. . . . கயாகப் பணித்
26. தோம் ஸபையோம் . . .
27. ப்பணிக்கவெழுதி . . . .
28. இவ்வூர் உயூஷந் . . .
29. . . விநீதநேந் . . .
30. ட்டிப் பொத்தன் . . . .

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 535/2013

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: 20
வட்டம்	: காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 866
ஊர்	: கூரம்	இ.க.ஆ.அறிக்கை	: 38/1900
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.இ.கல்.7/40
எழுத்து	: கிரந்தங்கலந்த தமிழ்		
அரசு	: பல்லவர்	ஊ.க.எண்	: 9
அரசன்	: நந்திவர்மன்		

இடம் : கூரம் சிவன் கோயில் அர்த்தமண்டபத் தூண்

குறிப்புரை : பல்லவ மன்னன் நந்திவர்மன் ஊற்றுக்காட்டுக் கோட்டத்துக் கூரத்து சபையாருக்கு அனுப்பிய அரசாணை இதுவாகும். அர்ச்சனைச் செய்த பின்னர் பிராமணர்களுக்கு உணவளிக்க வழங்கப்பட்ட ஆறுபட்டி நிலத்தினை முன்பு வைத்திருந்தவரிடம் இருந்து மற்றொருவருக்கு அளித்து, அர்ச்சனாப் போகமாக நிலம் வழங்கியச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ நந்தி
2. வர்ம்ம மஹாராஜ
3. ந்நெழுத்து ஊற
4. றுக்காட்டுக் கோட்
5. டத்துக் கூரத்
6. து ஸபையார்
7. காண்க தம்மூ
8. ர் அக்கலநிம்மடி
9. ப் போற்றிப்படி
10. ஆயினஆறு ப
11. ட்டி நிலமும் (மு)
12. ன் பெற்றாரை மாற்றி

13. யாண்டு இருப

14. த்து . . . .

15. . . . .

16. மாஹுதேவற்கு

17. . . . . *சுவ்ர்நாஹொம*

18. . . . க் காளன் *சுவ்ரி*

19. த் துண்பானாகக் கா

20. . . . . குப்பணித்

21. . . . . தாலுட்டாங் கண்

22. டருள திருக்கோயி

23. லிற் ஹடாரர் திருவடி

24. க் கீழை *ஸ்ரீமாஹேஸ்வ*

25. செய்து குடுக்க இற் . .

26. நீக்கி

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	27
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 898
ஊர்	:	கூரம்	இ.க.ஆ.அறிக்கை	:	39/1900
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.இ.கல். 7/41
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	10
அரசன்	:	முதலாம் ஆதித்தன்			

இடம் : கூரம் சிவன் கோயில் அர்த்தமண்டபத் தூண்.

குறிப்புரை : ஊற்றுக்காட்டுக்காட்டு கோட்டத்து நீர்வேளூர் நாட்டுக் கூரத்து ஊர் சபையினர், இவ்வூர் தட்டான் ஸ்ரீக்கவைமங்கல பெருந்தட்டான் என்பவனிடம் இருந்து பொன் பெற்றுக் கொண்டு, கூரம் பெருந்திருக்கோயில் மகாதேவர்க்கு நந்தாவிளக்கு ஒன்று வைத்து சம்வத்சரவரியம் செய்பவர்கள் வழியாக இரவும் பகலும் எரிப்பதற்குத் தினமும் உழக்கு எண்ணை கொடுக்க சம்மதித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ
2. கோ ராஜகே
3. ஸரிவர்ற்க்கு
4. யாண்டிருபத்
5. தேழாவது ஊ
6. த்துக் காட்டுக் கோட்ட
7. ற்று நீர்வேளூர் நாட்டு
8. கூரத்து ஸபையோம்
9. எம்மூர்த் தட்டான் ஸ்ரீ
10. க்கவை மங்கலப் பெரு
11. ந் தட்டான் பக்கல் பொ

12. ன் கொண்டு இவ்வூர் பெரு
13. ந்திருக்கோயில் மாதே
14. வர்க்கு நந்தா விளக்கு
15. இரவும் பகலும் எரிப்
16. பதற்கு நிசதி உழக்கெண்
17. ணை அட்டுவோமானோம்
18. அவ்வவ்வாண்டு புக்க ஸ
19. ழவத்ஸரவாரியம் பெரும
20. க்களட்டு விக்காராயில்
21. ஙங்ஙெயிடை குமரி
22. யிடை செய்தான் செய்த
23. பாவம்படுவாராக பணி
24. த்தோம் ஸபையோம்
25. இது குறி இருந்துப் பணித்து
26. எழுதினேன் இவ்வூ
27. ர் மத்யஸ்த்தன் ஸ்ரீக்கவை
28. ஏழாயிரவநேன்

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 537/2013

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: -
வட்டம்	: காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	: கி.பி.-
ஊர்	: கூரம்	இ.க.ஆ.அறிக்கை	: 39A/1900
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.இ.கல். 7/42
எழுத்து	: தமிழ்		
அரசு	: பல்லவர்	ஊ.க.எண்	: 11
அரசன்	: -		

இடம் : கூரம் சிவன் கோயில் அர்த்தமண்டபத் தூண்.

குறிப்புரை : 'ஸ்ரீ பல்லவ மாராசன்', 'மாமல்லன்' என்கிற குறிப்புகள் காணப்படுகின்றன.

கல்வெட்டு :

1. ஸ்ரீபல்லவ
2. மாராசன் ||*
3. . . . மாமல்லன்

த.நா.அ. தொல்லியல் துறை   தொடர் எண் : 538/2013

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	15
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 985
ஊர்	:	காஞ்சிபுரம்	இ.க.ஆ.அறிக்கை	:	1/1906
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	1
அரசன்	:	உத்தமசோழன்			

இடம் : சொக்கீசுவரர் கோயில் தெற்குக் குமுதம்.

குறிப்புரை : மூத்தவாள் பெற்ற கைக்கோளரில் ஆச்சன் சேனாச்சன் என்பவனுக்கு காஞ்சிபுரம் மாநகரத்தார் நிலம் ஒன்றினை விற்றுள்ளனர். இந்நிலம் இக்கோயிலில் உள்ள கரிகாலப் பிள்ளையார் வழிபாட்டிற்குக் கொடையாக அளிக்கப்பட்டுள்ளது. தெற்க்கிருந்த நக்கர் கோயிலிலுள்ள கரிகால சோழப்பிள்ளையார்க்கு சந்தி விளக்கொன்று வைக்க இவனிடமிருந்து சிவபிராமணர்கள் 3 பழங்காசுகள் பெற்றுக் கொண்டனர். இக்கோயில் இறைவன் 'தெற்க்கிருந்த நக்கர்' என்றழைக்கப்பட்டுள்ளார்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] கோப்பரகேசரிபற்மற்கு யாண்டு பதினஞ்சாவது காஞ்சிபுர மானகரத்தோம் இந்நகரத்தில் கோநேரியார் எல்லைக்குத் தெற்கு இன்நிலம் உடையார் மூத்தவாள் பெற்ற கைக்கோளரில் ஆச்சன் சேனாச்சன் இந்நகரத்து கடும்பிடுகு மேற்காப்பில் கரிகாலப்பிள்ளையாற்கு திரு வமுதுக்[கு*] மாநகரத்தோம் விற்றுக் குடுக்கிற நிலமாவது வடபாற்க் கெல்லை
2. கோநேரியார் நிலத்துக்குத் தெற்கும் கிழ்பாற்கெல்லை பெருவழிக்கு மேற்கும் தென்பாற்கெல்லை திருவூரகத்தாழ்வார் நிலத்துக்கு வடக்கும் மேல்பால்க்கெல்லை குழிக்குக் கிழக்கும் இன்னாற்ப்பாற்கெல்லைஉள் அகப்பட்ட நிலம் உடையார் மூத்தவாள் பெற்ற கைக்கோளரில் ஆச்சன் சேனாச்சன் பக்கல் பெருவிலைக்
3. கப்பட்ட நிலம் முன்னூறும் விற்று விலையாவணஞ் செய்து செம்பிலும் கல்லிலும் வெட்டிக்கொள்வதாகவும் செய்துகுடுத்தோம் கடும்பிடுகு மேல்காப்பில் தெ[ற்*]க்கிருந்த நக்கர் கோயிலில் கரிகால சோழப்

பிள்ளையாற்[கு*] ஆச்சன் சேனாச்சனேன் தொர்க்கிருந்த நக்க[ர்*]க்கு வைத்த சஙிவிளக்கு ஒன்றுக்கு மிக்கோயில் காணியுடைய பாதபதி எங்குச்சோழ ஞாணெரஙிரபட்டனும் இவஙம்பி திருவேகம்[ப*]

4. பட்டனும் கைக்கொண்ட பழங்காசு ரூ முன்றுங் கைக்கொண்டோம் இவை தரணேஞு பட்டஸு

5. சிலாலேகை பண்ணிநேந் திருவேகம்பபட்டஸு[||*]

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	20
வட்டம்	:	திருப்பருத்திக்குன்றம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1236
ஊர்	:	திருப்பருத்திக்குன்றம்	இ.க.ஆ.அறிக்கை	:	40/1890
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.இ.க. IV/363
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	1
அரசன்	:	மூன்றாம் இராஜராஜன்			

இடம் : பொருட்கள் பாதுகாக்கும் அறை வடக்குச் சுவர்

குறிப்புரை : தியாகசமுத்திரப் பட்டையார் என்பவருக்கு தாம்பூலம் மடித்து கொடுக்கிற (அடைக்காயமிது இடுகிற) வீம வடுகன் என்னும் பிராமணன், இவன் நென்மேலி என்னும் ஊரில் ஏத்தக் கடமை மூலம் பெறப்பட்ட நெல்லினை இந்நாயனாருக்கு காலை திருப்பள்ளி எழுச்சி செய்து படைக்கப்படும் திருவமுதுக்காக அளித்துள்ளான். மேலும் இக்கல்வெட்டு பொறிக்கப் பட்ட மண்டபத்தினையும் செய்வித்துள்ளான் என்ற செய்தியையும் தருகிறது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தியாக சமுத்திரபட்டையார் கல்வெட்டில் (ஊ.க. எண். 5) தியாக சமுத்திர பட்டையார் ஆன வீமரைசர் என்றழைக்கப்பட்டுள்ளார். எனவே இவர் இப்பகுதி அதிகாரியாக திகழ்ந்துள்ளார் எனலாம். மேலும் இவன் காண்ணிப்பாக்கம் என்ற ஊரினை பள்ளிச்சந்தமாக இவ்வூர் இறைவனுக்கு அளித்ததையும் அக்கல்வெட்டு கூறுவது குறிப்பிடத்தக்கது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ [॥*] *ராஜராஜ*தெவற்கு யாண்டு உய ஆ
2. வது தியாகசமுத்திரப்பட்டையார்க்கு அ
3. டைக்காயமிது இடுகிற பிராமணந் வீமவ
4. டுகன் நெந்மலி மகத்தல் ஏத்த கடமை இ
5. ந்த நாயனார்க்கு திருப்பள்ளிஎழுச்சித் திருவ
6. மிதுக்கு விட்டான் இந்த நெல்லிட்டு இந்த மண்
7. டபஞ் செய்வித்தான் [॥*]

த.நா.அ. தொல்லியல் துறை   தொடர் எண் : 540/2013

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	துந்துபி வருடம்
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1362
ஊர்	:	திருப்பருத்திக்குன்றம்	இ.க.ஆ.அறிக்கை	:	41/1890
மொழி	:	தமிழ் (ம) சமஸ்கிருதம்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	விஜயநகரர்	ஊ.க.எண்	:	2
அரசன்	:	இரண்டாம் புக்கர்			

இடம் : மடப்பள்ளி வடக்குச் சுவர்

குறிப்புரை : விஜயநகர மன்னன் அரிகரராஜன் குமாரன் புக்கராஜன் அவர்களின் நலன் வேண்டி வைச்சிய தண்டநாயகனின் மகன் அமைச்சர் இருகப்ப மகாபிரதானி என்பவர் திருபருத்திக்குன்றத்து திரைலோக்கிய நாதர் கோயில் பூசை, சாலை, திருப்பணி போன்றவற்றிக்காக மகேந்திரமங்கலம் என்னும் ஊரினைத் தானமாக வழங்கியுள்ளார்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ உ ஈந ஈஹி வஷ ழ காத்திகை மாதத்தில் வ௵வ வக்ஷத்துத் திங்கட்கிழமை வெள்ளணையும்* பெற்ற தாகத்திகு
2. கை* நாள் உஹாஉணூ லெஶ்வரநு சுரிஹரரராஜ கஉாரநு ஸ்ரீஉநு வ கககராஜநு யஉஉாக வெசய உணூநாய வருநு
3. ஜெஜொநாக்கமநு இருகப்ப உஹாவ்யாநி திருப்பருத்திக்குன்று நாயனார் த்ரைலொக்ய வல்ல ஹார்கு வ௵ஜெக்கு
4. ஶாலைக்கும் திருப்பணிக்கும் மாவண்டூர்ப் பற்றில் உஹெநூஉங்கலம் நாற்பாற்கெல்லையும் இறைஇலி பள்ளிச்சந்தமாக வநூாஶிதூவரையும் நடக்கத் தருவித்தார் உ யஉஜயஞ்ஜயது உ

---

* பௌர்ணமியும் என்று படிக்கவும்

கார்த்திகை நாள் என்று படிக்கவும்

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 541/2013

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 14-ஆம் நூற்றாண்டு
ஊர்	:	திருப்பருத்திக்குன்றம்	இ.க.ஆ.அறிக்கை	:	42/1890
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	விஜயநகரர்	ஊ.க.எண்	:	3
அரசன்	:	இரண்டாம் புக்கன்			

இடம் : முன்மண்டபம் விதானம்

குறிப்புரை : விஜயநகர மன்னன் இரண்டாம் புக்கனின் அமைச்சனாகிய இருகப்பா என்பவர் சங்கீத மண்டபத்தினைக் கட்டியுள்ளார். இவரது சமயகுருவாகிய புஷ்பசேனரது விருப்பத்திற்கு இணங்க இம்மண்டபம் கட்டப்பட்டுள்ளச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்ரீமத் விஜய புக்கநாயக ராஜ்ய ஸம்வத்ஸரே ப்ரபாவே ஸசிவோவர இருகப்ப புக்கபதி ஸ்ரீ புஷ்பஸேநகுரோ
2. ஸ்ரீகாஞ்சி ஜிந வஸ்துநோ நிர்மாபிதம் ஸங்கீதமண்டபம் ஸச்ரியா ஸுவிகாரஞ்ச ஸிஷ்ய ஹர்ஷ ஸந்தாந ஸம்பத் ॥உ

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	21
வட்டம்	:	திருப்பருத்திக்குன்றம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1199
ஊர்	:	திருப்பருத்திக்குன்றம்	இ.க.ஆ.அறிக்கை	:	43/1890
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.இ.க. VII/366
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	4
அரசன்	:	மூன்றாம் குலோத்துங்கன்			

இடம் : திருப்பருத்திக்குன்றம் கோயில் முன்னுள்ள மண்டபத்தின் நடைவாசல் கீழ்

குறிப்புரை : மண்டியங்கிழான் குலோத்துங்க சோழ காடுவெட்டி என்பார் தமது சமய குருவாகிய சந்திரகீர்த்தி தேவரின் நலத்திற்காகவும், 20 வேலி நிலம் வழங்கிட மன்னனிடம் முறையிட்டான். இவனின் வேண்டுகோளை ஏற்று எயிற்கோட்டத்து அம்பை என்னும் ஊரில் 20 வேலி நிலத்தினை இக்கோயிலுக்கு 'பள்ளிச்சந்த இறையிலி'யாக வழங்க இம்மன்னன் ஆணையிட்டுள்ளச் செய்தி. அம்பை எனும் ஊர் தற்போது 'அம்பி' என்ற பெயரில் காஞ்சி நகரத்திற்கு மேற்கே அமைந்துள்ளது.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* [||*] *த்ரிபுவநச்சக்ரவர்த்தி*கள் மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு ௨௰௧ ஆவது மண்டியங்கிழான் குலோத்துங்கசோழ காடு வெட்டிகள் *ரா*ஜகாரியஞ் செய்து நாயநாரைத் திருவடித் தொழ உனக்கு வேண்டுவன வேண்டிக்கொள்ளென்று திருவுள்ளமாயருள் மண்டி . . களவத்தரும் நாமும் எங்கள் *ஆசார்ய*க்கள் *சந்த்ரகீத்தி*தெவர் திருப்பருத்திக்குன்றிலே இருப்பர் அக்கோயிலுக்கு இருபது வேலி நிலந்திருவுள்ளமாடித்தருள வேணுமென்று இக்கோயிலிற் காணி . . . . . .

2. திரற்கு கொட்டையூ ராசிரியப்பட்டமுங்குடுத்தருளி அம்பயிலே இருபதிற்று வேலிநிலத்துக்கு திருமுகம் *ப்ரஸாதி*த்த திருமுகப்படி கல்வெட்டு *த்ரிபுவநச்சக்ரவர்த்தி* கோநேரின்மைகொண்டாந் ஜயங்கொண்டசோழ மண்டலத்து காலியூர்கோட்டத்துத் திருப்பருத்திக்குன்றின் வாரியப் பிடார்களுக்கு இப்ப . . க்கு வேண்டுவநவையிற்றுக் கிறுப்பதாக எயிற்கோட்டத்து அம்பயிலே இருபதிற்று வேலி நிலம் இருபத்தொன்றாவது முதல் பள்ளிச்*சந்த* இறையிலியாக இட்டு இப் . . .

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 543/2013**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	18
வட்டம்	:	திருப்பருத்திக்குன்றம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1234
ஊர்	:	திருப்பருத்திக்குன்றம்	இ.க.ஆ.அறிக்கை	:	44/1890
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.இ.க. VII/367
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	5
அரசன்	:	மூன்றாம் இராசராசன்			

இடம் : 'சாந்தி மண்டபம்' மேற்குச் சுவர்

குறிப்புரை : தியாக சமுத்திரப் பட்டையார் என்கிற வீமரைசர் என்பவர், திருப்பருத்திக் குன்று இறைவன் செம்பொற் குன்றாழ்வார் வழிபாட்டிற்காக வேண்டி, காலியூர்க் கோட்டத்து விற்பேட்டு நாட்டு காண்ணிபாக்கம் என்னும் ஊரில் நெடுநாள் பயிர் விளையாமல் இருந்த நிலங்களை, இவ்வூர் இறைவனுக்குப் பள்ளிச்சந்தமாகக் கொடையளித்துள்ளார்.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ*[॥*] *த்ரிபுவநசக்ரவர்த்தி*கள் திருப்பருத்திக்குன்றில் நாயனார் செம்பொற்குன்றாழ்வார் பள்ளிச்சந்தம் காலியூர்க்கோட்டத்து விற்பேட்டுநாட்டு காண்ணிபாக்க
2. ம் நெடுநாள் செல்லாதே கிடந்தவிதனைத் தியாகசமுத்திரப்பட்டையாரான வீமரைசர் *ராஜராஜ* தேவர்க்கு யாண்டு பதினெட்டாவ
3. து முதல் இன் நாயனார்க்குப் பள்ளிச்சந்தமாக விட்டார் காண்ணிபாக்கம் வீமரைசர் *யெழுத்து*[॥*]

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 544/2013

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	சகம் 1440
வட்டம்	:	திருப்பருத்திக்குன்றம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1518
ஊர்	:	திருப்பருத்திக்குன்றம்	இ.க.ஆ.அறிக்கை	:	45/1890
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.இ.க. VII/368
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	விஜயநகரர்.	ஊ.க.எண்	:	6
அரசன்	:	கிருஷ்ணதேவராயர்			

இடம் : கோயில் மண்டபம் வலதுபுறச் சுவர்.

குறிப்புரை : செயங்கொண்ட சோழமண்டலத்து எயிற்கோட்டத்து எயில் நாட்டு நகரம் காஞ்சிபுரம் திருப்பருத்திக்குன்றத்து இறைவன் திரைலோக்கிய நாதர் கோயில் ஸ்ரீபண்டாரத்தில் இருந்த குருக்கள் அனந்த வீரிய வாமன முனிவர், இக்கோயில் தானத்தார் பொற்குன்றங் கிழார் தேவாதி தேவர் உள்ளிட்டவர்கள்; காஞ்சிபுரம் சேவகப்பெருமாள் மகன் அரியரபுத்திரரிடம் 120 பணம் பெற்றுக் கொண்டு மனை மற்றும் நிலத்தால் வந்த பங்கினை விற்றுக் கொடுத்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸுபமஸ்து ஸ்வஸ்தி[||*] ஸ்ரீமந் மஹாமண்டலேஸ்வர ராஜாதிராஜ ராஜ பரமேஸ்வர ஸ்ரீவீ
2. ரப்ரதாப ஸ்ரீக்ருஷ்ணதேவமஹாராயர் ப்ருதிவிராஜ்யம் பண்ணி அருளா நின்
3. ற ஸகாப்தம் ௲௪௱௪௰ இதில்மேல் செல்லாநின்ற வெகுதானியங்வஸ ஸரத்து* மகர நாயற்று
4. அமரபக்ஷத்து ஸத்தமியும்* ஆதித்தியவாரமும் பூசத்து நாள் செயங் கொண்ட சோழமண்டலத்து எயிற்கோட்
5. த்து எயில்நாட்டு நகரம் காஞ்சிபுரம் திருப்பத்திக்குன்று நாயினார் திறையிலோய்க்கநாதர் கோயில் சிறீப

---

* வெகுதானிய ஸம்வத்ஸரத்து என்று படிக்கவும்

* ஸப்தமியும் என்று படிக்கவும்

6. ண்டாரத்து குருக்கள் அனந்த வீரிய வாமன முனிவரும் தானத்தார் பொற்குன்றங்கிழார் தேவா
7. திதேவர் உள்ளிட்டாரும் . . . . உள்ளிட்டாரும் நகரம் காஞ்சிபுரம் சேவகப்பெருமாள்
8. புத்திரர் அரியரபுத்திரற்கு கரையும் மனையும் விலைப்பிறமாணம் பண்ணிக்குடுத்தபடி . . . .
9. . . . வாமன முனிகள் விற்ற . . . . . . விற்றதிலும் . . . . கரையில் . . . .
10. லை ஒன்று மேல்வாரம் . . . . த்து நின்றதுக்கு வரும் விழுக்காடும் உள் ஞ ஞ . . . . உய . . . .
11. [ஓ] ஊாயம் வதிக்கு கிழக்கு அறங்காத்தார் திருத்து கிழை . . . க்கு
12. . . . . க்கு வரும் விழுக்காடு . . . .
13. . . . . லடைபாச்சல் . . . .
14. . . . . சூஊாம் பாதிவாரப்பற்று . . . . ஓ சூநாநயந . . . மேல்வாரப்பற்று ஓ ஊாசயம் திருத்து நில . .
15. த்துக்கும் மேடுகொட்டுக்கும் ஏரியிற்குள் வரும் விழுக்காட்டுக்கு . . . கரை பட்டடை வாழைக்காய்
16. ஒடையும் ஒழுகலும் ஓ சாஎய பாதிவாரப்பற்று ஓ சா ம் கொறுக்கை தாங்கலில் வரும்
17. விழுக்காடும் இந்த மூன்று கறைக்கு உண்டான கிணறும் கீழைக்குண்டிகைச்சேறு
18. கக் ஓ ஊாஅய ம் மேலைக்குண்டிகைச் சேறுக்குக் ஓ ஊாஉய ம் மனை கிழக்கு மேற்கு
19. அடி ஊா இதுக்கு எல்லை திருவானைமனைக்கு கிழக்கு அவையம்புக்கார் மனைக்கு
20. மேற்கு திருவீதிக்கு தெற்கு ஆற்றுக்காலுக்கு வடக்கும் ஆற்றுக்கால் கரைமேடும் பசலை மரமுள்
21. பட மனை போந்தது குழிமுற்றும் கிணறுமுள்பட விலையாக நிற்சயித்து பற்றிக் கொண்ட
22. . . . . இப்பணம் இரு நூற்றிருபதுக்குமே விலையாவதாகவும் இதுக்கு வேறொரு கலனுமில்
23. லை கலனுள்வாய் தொற்றுப்படில் நாங்களே கலந்திந்து கொடுக்கக் கடவோமாகவும்

24. இவற்கு விற்று ஒற்றி பிருதிக்கிறைய தாயதன்மங்களுக்கும் உரித்தாக கடவதாகவும்

25. கமுகு வைத்த நிலத்துக்கும் வாரம் யிரண்டுபங்கு விட்டு மேல்வாரம் இருபங்கு கொள்ளக்கடவோம்

26. தென்னமரம் மற்றுமுள்ள பசலைமரத்துக்கும் குடிவாரம் மூன்றுபங்கு விட்டு மேல்வாரம் ஒ

27. ருபங்கு கொள்ளக்கடவோமாகவும் வான்பயிருக்கும் நஞ்சைபுஞ்சைக்கும் ஏத்தி

28. . த்தித்த ஊரில் ஒன்றுமுக்கால் கொள்ளக்கடவோமாகவும் கெடாரம் ௫ க்கு ஊருய ம்

29. அத்திவடத்துக்கு வடக்கு மேடும் இறையிலியாக சந்திறாதித்தியவரையும் நடத்தக்கடவோமாகவும் ஊர்விநிஓக

30. ம் எற்சோறுபடி பொட்டுசோறு இடுகிறது நெட்டஞ்சி குற்றமஞ்சி மானியமாக நடத்தக் கடவோமாகவும்

31. இப்படி சம்மதித்து கரையும் மனையும் விலைப்பிறமாணம் பண்ணிக் குடுத்தோம் அரியரபுத்திரக் குருக்களும்

32. கரணத்தாருமே இவை அனந்தவீரிய வாமனமுனிகள் எழுத்து கரந்தை புட்பசேனமுனிகள் எழுத்து

33. இவை பொற்குன்றங்கிழார் தேவாதிதேவந் எழுத்து கண்ணமுழார் கல்லோயச்சந்த எழுத்து

34. இப்படிக்கு யிந்த சாதனம் எழுதினமைக்கு கோட்டுழார் நயினான் எழுத்து[॥*]

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 545/2013**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	சகம். 1439
வட்டம்	:	திருப்பருத்திக்குன்றம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1517
ஊர்	:	திருப்பருத்திக்குன்றம்	இ.க.ஆ.அறிக்கை	:	188/1901
மொழி	:	கன்னடம்	முன் பதிப்பு	:	தெ.இ.க. VII/398
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	விஜயநகரர்	ஊ.க.எண்	:	7
அரசன்	:	கிருஷ்ணதேவராயர்			

இடம் : திரைலோக்கிய நாதர் கோயில் முன் நடைவாசல் (வராந்தா) கீழுள்ள கல்வெட்டு

குறிப்புரை : முசிறுபாக்கம் என்கிற திருமலைதேவிபுரத அக்கிரகாரம் என்ற ஊர் மக்களின் நலன் வேண்டி, திருப்பருத்திக்குன்றத்துக் கோயிலுக்கு உரிய கோதுகை என்னும் ஊரினை கொடுத்து, அதற்கு மாற்றாக உவச்சேரி என்ற ஊர் பெறப்பட்டச் செய்தி.

கல்வெட்டு :

1. தாது வருஷத வைஶாக ஶுத்த தி... ஸ்ரீமந்மஹாராஜாதிராஜ ராஜ பரமேஶ்வர ஸ்ரீவீரப்ரதாப ஸ்ரீவீரக்ருஷ்ணராய மஹாராயரு ஜயிநஸ்தாந ப்ரஸ்தாநக் க...ருக்கள் உடையர்களுகே நிரூப நிம்ம தேவஸ்தாநகெ செலுவ கோதுகை என்ப கிறாமவனு முசிறுபாக்க ப்ரதிநாமவாத திருமலைதெவிபுரத அக்ரஹாரதெ ப்ராமணரு கேளி பாலிஸி நிம ப்ராமக்கெ ப்ரதியாகி சென்னாமனாயக்க தம்மையன் ஒளிஉ உவச்சேரி என்ப க்ராம
2. க்கே நிம தேவஸ்தாநகெ பாலி த்தேவு நிவு க்ராமவனு கட்டிக்கொண்டு க்ராமவனு நிமதேவர பாஸந கொக்கிகொம்பது இக்கோதுகைய் என்ப க்ராமவனு ஆ திருமலைதேவிபுரத அக்கிறஹாரத மஹாஜெநங்களுக்கே சிலாசாதன ஆக்கி கொடுவதாகி நிம உவச்சேரி என்பக் கிறாமவனு நிம தேவர் திருநாமசேஷத்திறம் ஆக சிலாசாதனம் ஆக்கிகொம்பது ஆஸ்தாநிகனு நிருபவ ஹித்தே ஹித்தேவு ஸ்ரீவிரூபாக்ஷ உ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 546/2013**

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: -
வட்டம்	: திருப்பருத்திக்குன்றம்	வரலாற்று ஆண்டு	: கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
ஊர்	: திருப்பருத்திக்குன்றம்	இ.க.ஆ.அறிக்கை	: 189/1901
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: தெ.இ.க. VII/399
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊ.க.எண்	: 8
அரசன்	: -		

இடம் : குராமரத்து மேடை வடக்குப்புறச் சுவர்

குறிப்புரை : திருப்பருத்திக் குன்றத்துக் கோயிலில் வாழ்ந்த மூன்று முனிவர்களுக்கு ‘குரா’ என்னும் மரம் குன்றாமல் குறையாமல் இருந்து நிழல் தந்தது போன்று மன்னனின் செங்கோல் ஆட்சி சிறப்புடன் நடைபெற வழிகாட்டியது இம்மரம் என்பதனையும் கூறுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ தன்னளவிற் குன்றா துயராது தண்காஞ்சி முன்னுளது மும்முனிவர் மூழ்கியது மன்னவன்தன் செங்கோல்
2. நலங்காட்டுந் தென்பருத்திக் குன்றமர்ந்த கொங்கார் தருமக் குரா உ

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
ஊர்	:	திருப்பருத்திக்குன்றம்	இ.க.ஆ.அறிக்கை	:	383/1928-29
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	தெ.இ.க. XII/259
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	காடவர்	ஊ.க.எண்	:	9
அரசன்	:	இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன்			

இடம் : கிழக்குப் பக்க மதில் சுவர்

குறிப்புரை : இக்கோயில் திருமதில் 'அழகிய பல்லவன்' என்றழைக்கப்பட்ட இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனால் கட்டப்பட்டச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ [॥*] இத்திரும
2. திள் அழகியபல்
3. ல்வன் உ

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 548/2013**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	(கி.பி.1243-79)
ஊர்	:	திருப்பருத்திக்குன்றம்	இ.க.ஆ.அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	பிற்காலப் பல்லவர்	ஊ.க.எண்	:	10
அரசன்	:	இரண்டாம் கோப்பெருஞ்சிங்கன்			

இடம் : குராமரத்து மேடையின் வடக்கு

குறிப்புரை : கச்சித் திருப்பருத்திக்குன்றத்து கோயில் மேற்குப் பகுதியில் இருந்த மூன்று முனிவர்கள் பயன்படுத்தியக் கல்லைக் கொண்டு இந்த பீடம் கட்டப் பட்டுள்ளது. இக்கல்வெட்டில் குறிப்பிட்டுள்ள 'தமிழ்ப் பல்லவகோன்' என்பவன் பிற்காலப் பல்லவ மன்னன் கோப்பெருஞ்சிங்கன் ஆவான்.

கல்வெட்டு :

1. . . . மதிட் கச்சித் திருப்பருத்திக்குன்றதனிற் சிலமலி மும்முனிவர் சேர்ந்திருந்த மேல்பாற்
2. . . . கயைத் திண்சிலையாற் செய் . . நான தருந் தமிழ்ப் பல்லவர் கோன் தான்

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 549/2013

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	கி.பி. 14-ஆம் நூற்றாண்டு
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	-
ஊர்	:	திருப்பருத்திக்குன்றம்	இ.க.ஆ.அறிக்கை	:	-
மொழி	:	சமஸ்கிருதம்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தம்			
அரசு	:	-	ஊ.க.எண்	:	11
அரசன்	:	-			

இடம் : முன்மண்டபம் வலதுபுறச்சுவர் பலிபீடத்தின் மேலுள்ளச் சுவர்.

குறிப்புரை : வாமனசார்ய மல்லிசேனரைப் புகழும் செய்தி.

கல்வெட்டு :

1. ஶ்ரீ ஹ°ஜஜமதாஜெகூ ரிதுழ ரிது ஸஉஷ்நாதி உஙி
2. வஜெஹம் வாஉநாசாயஂழ உஜ்லிஷெண உஙிஸ்வர

த.நா.அ. தொல்லியல் துறை   தொடர் எண் : 550/2013

மாவட்டம் :	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு :	22
வட்டம் :	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1200
ஊர் :	திருப்பருத்திக்குன்றம்	இ.க.ஆ.அறிக்கை :	99/1923
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	-
எழுத்து :	தமிழ்		
அரசு :	சோழர்	ஊ.க.எண் :	12
அரசன் :	மூன்றாம் குலோத்துங்கன்		

இடம் : திருப்பருத்திக்குன்றம் திரைலோக்கியநாதர் கருவறை முன் உள்ள உத்திரம்.

குறிப்புரை : இக்கோயில் தெற்குத் திருச்சுற்று மண்டபம் சீரமைக்கப்பட்டுள்ளது. இவ்வூர் மகாசபையார் 25 கழஞ்சுப் பொன் பெற்றுக்கொண்டு நிலம் ஒன்றினை இறை நீக்கியச் செய்தி.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவந சக்கரவத்திகள் மதுரையும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளிய ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு உ௰உ ஆவது தெற்கிற்த் திருமண்டபம் இழி . . . கை சதுர்வேதிமங்கலத்து ஸபா ஸபையோம் நிலவிலையாவண காசு . . சதுர்வேதிமங்கலத்தார் எங்கள் பக்கல் நிலங் கொண்டு வெட்டிந . . கதுக்குங் கயக்காலுக்கு வடக்கு . . . .

2. ம் மேல்பாற்கெல்லைக்கு இவ்வூரான ஹஸ்தி நிவாரணச் சதுவ்வேதி மங்கலத்துக் கிழக்கும் வடபாற்கெல்லை திருப்பருத்திகுந்றெல்லைக்குத் தெற்கு இன்னான்கெல்லைக்குட்பட்ட நிலநீர் பூசி நெல் விலை எம்மிலிசைந்த பொன் இருபத்தைதைங் கழஞ்சு . . . க்கும் பொன் செல்லகாட்டுகவெனப் பெறாதோமாகவும் கோயிலாற் போந்த கடமை குடிமை வேலிக்கு . . . பொருளறக் கொண்டு . . . நாற்பேரெல்லைக் குட்பட்ட நிலத்துக்கு . . . . .

3. வெட்டிமுட்டையாள் நீர்விலை எற்சோறு செஷீர் முதலாந ஆள்மற்றுமுள்ளன யாதொன்றுஞ் சொல்லவுங் காட்டவு பெறாதோமாகவும் இந்நிலத்துக்கு ஏதேனுமழிவு சொல்லிற் திருவாணை மறுத்தாட்டடது படுவோமாகவும் . . . மங்கலத்து ஸபாஸபையோம் இப்படிக்கு வங்கிப்புற . . . . த்து கருணாகரப்பட்ட னெழுத்து விஸ்வபட்டனெழுத்து இப்படிக்கு வங்கிப்புறத்து கோணகுமர பட்டனெழுத்து இப்படி அறிவேன் . . . கேசுவ பட்டனெழுத்து இப்படிக்கு வங்கிபுறத்து அருளாள பட்டனெழுத்து . . . இப்படிக்கு தஞ்சி க்ரமவித்தபட்டனெழுத்து இப்படிக்கு

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 551/2013**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	15-16-ஆம் நூற்றாண்டு
ஊர்	:	திருப்பருத்திக்குன்றம்	இ.க.ஆ.அறிக்கை	:	97/1923
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	-	ஊ.க.எண்	:	13
அரசன்	:	-			

இடம் : திருப்பருத்திக்குன்றம் வாயிற் கோபுரம் இடதுபுறக் குமுதம் மற்றும் ஜகதி

குறிப்புரை : ஜிந காஞ்சி திரைலோக்கிய நாத சுவாமி பூசைக்காக வேண்டி 2000 குழி நிலம் சறுவமானியமாக விடப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஜிநகாஞ்சி திறய்இலோக்கிய நாத சுவாமியார் பூசைக்கு மாநியம்
2. பறகால மேடு பள்ளம் ௲நாருய பஞ்சம் பட்டடை ௲நா
3. பள்ளப் பட்டடை ௲அா சீரணம் ௲நசா அம்மையார் குண்டில்
4. ௲ருய கோயிலாம் பட்டி ௲கூய சிகப்பு குண்டில் குழி எய
5. வலங்கோயில் குழி ய ஆக சறுவமாநியம் குடுத்த
6. யிந்த இரண்டாயிரம் குழி நிலமும் என்னென்றை
7. கும் சறுவமானிய தற்மமாக யாதாரொருவரும் அகு
8. தம் பண்ணாமல் பரிபாலனம் பண்ணவும்
9. யிதுக்கு அகுதம் பண்ணிநபேர் கங்கா தீர்த்திலே ப்ராஹ்மண . . பண்ணிந தோஷத்திலேபோ
10. க்கடவா . . வ[illegible]
11. ஸ்வஸ்தி

மாவட்டம்	:	நாகப்பட்டினம்	ஆட்சி ஆண்டு	:	6
வட்டம்	:	திருத்துறைபூண்டி	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 546
ஊர்	:	பள்ளன் கோவில்	இ.க.ஆ.அறிக்கை	:	-
மொழி	:	சமஸ்கிருதம் மற்றும் தமிழ்	முன் பதிப்பு	:	பல்லவர் செப்பேடுகள் முப்பது
எழுத்து	:	கிரந்தம், தமிழ்			
அரசு	:	பல்லவர்	ஊ.க.எண்	:	-
அரசன்	:	சிம்மவர்மன்			

இடம் : பள்ளன்கோவில்

குறிப்புரை : இச்செப்பேடு திருப்பருத்திக்குன்றம் கோயிலுக்குக் கொடையளித்தச் செய்தி கூறப்படுவதால் இந்நூலில் திருப்பருத்திக்குன்றம் கல்வெட்டுகள் உள்ள பகுதியில் வெளியிடப்படுகின்றது. பல்லவர் செப்பேடுகள் என்னும் நூலில் இடம்பெற்றுள்ளச் செப்பேட்டு வாசகம் அவ்வாறே எடுத்து தொகுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இதுவரை கிடைத்துள்ளச் செப்பேடுகளில் தமிழில் அரச ஆணையைக் கொண்டுள்ள மிகவும் தொன்மையானச் செப்பேடு இதுவேயாகும். நாகை மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டம் பள்ளன்கோயில் என்ற இடத்தில் இச் செப்பேடு கிடைத்தது. திருப்பத்திகுன்றத்துக் கோயிலுக்கு பள்ளிச்சந்தமாக கொடையளித்தச் செய்தி.

சிம்மவர்மனின் மகனும் முதலாம் மகேந்திரனின் தந்தையுமாகிய சிம்மவிஷ்ணு பல்லவர் ஆட்சியைக் காவிரிக்கரை வரையில் விரித்ததை இச்செப்பேட்டின் சமஸ்கிருதப் பகுதி கூறுகிறது. மேலும் திருப்பருத்திக் குன்றில் வாழ்ந்த நந்திசங்கத்தைச் சார்ந்த வஜ்ஜிரநந்தி என்ற சமண முனிவருக்கு ஓர் ஊரைப் பள்ளிச்சந்தமாகக் கொடுத்ததைச் சமஸ்கிருதப் பகுதி கூறுகிறது. அதே ஆணை சற்று விரிவாகத் தமிழ்ப் பகுதியிலும் கூறப்பட்டுள்ளது. இச்செப்பேட்டினை பற்றி விரிவாக அறிந்து கொள்ள பல்லவர் செப்பேடுகள் முப்பது என்ற நூலைக் காண்க.

இச்செப்பேட்டிலிருந்து கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலேயே அரச ஆணை எவ்வாறு அளிக்கப்பட்டது, அதை எவ்வாறு ஊரார் பெற்று அதன்படி நடந்தனர் என்பதை இச்செப்பேட்டில் காணலாம். கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலேயே எவ்வளவு தெளிவாக ஆட்சி செயல்பட்டது என்பதற்கும் இச்செப்பேடு எடுத்துக்காட்டாக அமைகின்றது.

செப்பேட்டு வாசகம்[1]

முதல் ஏடு பின்புறம்[2]

1. ஸ்வஸ்திவவஸ்திவ்ருமண்ருரு . . . .
2. தாஜ்ஞிநெந்ரு: [।*]உந்நீந்ருஜெவெந்ருந . . . .
3. ஸ்யநுவந்ரு: [க*] க்ருஸீ உம்பஜநாஹ[3]ந[ா]
4. கொம்மிரா ரீவ்வ[பு]ாணெ [ஶ] . . . .
5. யஹஶல்லாஜக:[4][।] ஜ்ராண . . . .
6. ர[5]ஹிவொரம்ஶஸ்தக:வஜ்ஜவ:[ஶ்ரீ] . . . .
7. நாக்ஷாவஜ்ஜஹா[6]வஜ்ஜஹ:॥ [உ*]தத:[வ்ரு]. . . . .
8. கஶொகெஷ்லிகெஷ்லெஶாக . . . .

இரண்டாம் ஏடு - முன்புறம்

9. வஜ்ஜவெஷ க்ருஉாக வ்ருணஉ்ருநுவகஉ்ருஜௌஜ்ஜ்ரணரத்தர
10. ஶ்ஹாதவத்ருப ஜ்ஜ வஉவம்கஜெஷ்ஜ நி ஸிம்ஹவஉாயிவாக॥[நு]
11. ஶ்ரீ ஸிம்ஹவிஷ்ணுஜ்ஜிதஸிம்ஹவிஷ்ணுப்புஜெநஜிஷ்ணுஜ்ஜுநஷாவி
12. ஜிஷஉ [।*] ஜ்ராஜி[ஷ்ணு*]வம்ஶம் ஸ்வஉஜ்ஜம்கரிஷ்ணுந்நிராகந்நிஷ்ணுஸ
13. உரஷயுஷ்ணுஞ ॥ [ச*] ஸதஜ்தாமவிநீததாஜிவிஉஜ்ஜம்[7]
14. யஸ்ஜி நூஜ்ஜ்பாஸ்உம் ஸ்யநும்க்ஷாத்ருமணம் ஸஉநதஉதாவ
15. நெஜ்ஜ்ஜ்ஜ்பா[ஸ்*]உஜ [।*] யெநாஹாரிதராம்கவெரதநயா ஹா
16. ராவி சொஜாவநிஶாஜெயெக்ஷவணாம்ஶகா[8]க்ருஉக

இரண்டாம் ஏடு - பின்புறம்

17. ரஜ்ஜாராஉஸநெவஜா॥ [ரு*] ஶ்ரீவஜ்ஜஉாநெஶ்வர யஜ்ஜ்தீஜ்ஜ
18. ஶ்ரீநஜ்ஜிஸம்வொஜ்ஜமணெ மஜெணஜெஶ[।*] மஜெணஜ்ரம
19. ஜெணஜ்மணிஹி: வ்ருவஞ்ண மணீமணீவாஜநி வஜ்ருநஜ்॥ [கூ*]
20. ஸொஉாந்நுவொஜெஸ் ஶ்ரூஉணாஶ்ரூஉாவஜ்ஜம் ஜ்ராஉஜ

21. ஸ௨ஞு௸ வுவிஹக்ஷஸீ௨௸ [।*] ஜிநெநுஜெநெநு௨¬

22. நீநுஙுநுவ௵ஜாவியாநாயகவொயநாய ॥ [எ*] சுதுாஜ்ஜ

23. ஷ்ரஹ௵நூநீநுநாநூா நரஹயொஹய:[।*] வுஹுயம் வுஶ௨ா

24. ஊ¬ஷுஹ¬ண ஸம்வொஷு [ஊ*]ம்ஸ¬யீ: ॥ [அ*] ஸ௨ஷுஶாஷுநிஷா

மூன்றாம் ஏடு - முன்புறம்

25. தயிஷணொயிஷணொவ௨:[।*] ௨ாநெநாநூாவி

26. ௭௨யாவீ வுஶஷ்ம் கூஜதவாநி௨ா௸ கூ[9]

27. கோ விசைய ஸிம்ஹவர்ம யாண்டாறாவது வெண்

28. குன்றக் கோட்டத்துப் பெருநகர் நாட்டு நாட்டார்

29. காண்க [।*] தந்நாட்டு அமண் சேர்க்கை பருத்தி

30. க்குன்றில் வஜ்ரநந்திக்குரவர்க்குப் பள்ளிச்சந்தமா

31. கக் கொடுத்தோந் தாங்களும்[10] படாகை நடந்து கல்

32. லுங் கள்ளியுந் நாட்டி அறையோலை செய்து கொ

மூன்றாம் ஏடு - பின்புறம்

33. டுத்து விடுதக வென்று நாட்டார்க்குத் திருமுகம் விட நாட்டா

34. ருந் திருமுகம் கண்டு தொழுது தலைக்கு வைத்து படா

35. கை நடந்து கல்லுங் கள்ளியு நாட்டி நாட்டார் விடுத்த

36. அறையோலைப்படிக் கெல்லை [।*] கீழ்பா

37. லெல்லை ஏந்த லேரியின் கீழைக்கடற்றி

38. ன் மேற்குமொமைக் கொல்லை எல்லை இன்னு

39. ம் தென்பாலெல்லை வேள்வடுகன் கேணியி

40. ன் வடக்கும் கடற்றினெல்லை இன்னுந் நீலபாடி

நான்காம் ஏடு - முன்புறம்

41. எல்லை இன்னும் விலாடன் குற்றெத்தத் தெல்லை

42. இன்னும் மேல்பாலெல்லை மாவேத்தத்து

43. வதியின் கிழக்கும் மும்மூலை ஏத்தத் தெல்லை

44. இன்னு மாற்றெல்லை[11] இன்னும் வடபாலெல்

45. லை பெருங் கொல்லையின் றெற்கு இன்னும்
46. பாண்டியன் கயத்தெல்லை இன்னும்[12] முருக்கங்
47. கேணி எல்லை இவ்விசைத்த பெருநான்கெல்
48. லையகத்து மகப்பட்ட நிலம் நீர் நிலமும்

நான்காம் ஏடு - பின்புறம்

49. புன்செய்யும் களரும் கன்று மேய் பாழும் காடு
50. ம் பீடிலிகையும் கிடங்குங் கேணியும் மனை
51. யும் மனைப்படப்பும் உடும்போடி ஆமை தவ
52. ழ்ந்ததெல்லாம் உண்ணிலனொழிவின்றி
53. கோவும் பொறியும் தாற்றி குடிநீக்கி இவ்வூர்
54. பெற்ற *வஜ்ரநந்தி*க்குரவர்க்கே பள்ளிச்சந்தமாக தா
55. மரிலும் பதினாறரைப்பட்டி நிலங்கொடுத்
56. தோம் இந்நிலத்திற் கெல்லை கீழ் பாலெ

ஐந்தாம் ஏடு - முன்புறம்

57. ல்லை புலிகிழார் பட்டியின் மேற்கும் தென்பா
58. லெல்லை முள்ளேறிபாக்கத்தெல்லையின் வட
59. க்கும் மேல்பாலெல்லை போக்குவாய்ச் செறு
60. வின் கிழக்கும் வடபாலெல்லை பல்லாங்கு
61. ழிக்காவின் தெற்க்கும் இந்நான் கெல்லை
62. யகத்தும் அகப்பட்ட *ஸீமை*யும் பருத்திக்குன்றி
63. ல் *வஜ்ரநந்தி*க்குரவர்க்கே பள்ளிச்சந்தமாக *வர்ஷ*
64. *த்தி* சென்றது *ந்ருபஸ்ய* னாணத்தியால் । *ஸி* ॥

<u>அடிக்குறிப்புகள்</u>

1. மூல ஏடு, மசிப்படம், புகைப்படம் ஆகியவற்றிலிருந்து வாசித்துப் பெயர்த்து எழுதப்பட்டது.
2. ஏட்டின் இடதுபாதி மட்டுமே கிடைத்துள்ளது. அதனால் முதல் எட்டு வரிகளில் பின்பகுதி இல்லை.
3. அநுஸ்வாரம் மகரவொற்றின் மேற்பாதிபோலக் காணப்படுகிறது.

4. *ஸம்யக்ஸுரசாஜக:* என்று கொள்ளவேண்டும் *ஸம்* என்பது முன்வரியின் கடைசியில் இருத்தல் வேண்டும்.

5. *வ௱ர* என்பதன் முதல் எழுத்து முன்வரியின் கடைசியில் இருந்து கிடைக்கவில்லை எனலாம்.

6. *ஹா* என்பதற்கு முன்னால் ஒரு கொம்பையும் சேர்த்து *வஷ்ஹொ* என்று கொள்ளவும் கூடம்.

7. மகரம் முதலில் லகரமாக எழுதப்பட்டுப் பின்னால் திருத்தப்பட்டது.

8. ஆகார உயிர்மெய்க்குறி முதலில் வேறு ஏதோ ஓர் எழுத்தாக இருந்து பின்னால் திருத்தப்பட்டது.

9. எழுத்து முக்கால் வரிக்கே உள்ளது. பாக்கியுள்ள இடம் || என்பது போல் ஐந்து உருவங்கள் எழுதிப் பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது.

10. "கொடுத்தோம் தாங்களும்" என்று சந்தி பிரித்து வாசிக்கவும்.

11. றகரமும் றெகரமும் திருத்தப்பெற்றுள்ளன.

12. மகரவொற்று முதலில் முகரமாக எழுதப்பெற்றுப் பின்னால் திருத்தப்பெற்றுள்ளது.

த.நா.அ. தொல்லியல் துறை　　தொடர் எண் : 553/2013

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	சகம். 1699
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1777
ஊர்	:	தாங்கி	இ.க.ஆ.அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	இல்லை
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	-	ஊ.க.எண்	:	1
அரசன்	:	-			

இடம் : தாங்கியின் என்னும் ஊரில் அமைந்துள்ள வழிப்போக்கர் மண்டபம் உட்புற மேற்குச் சுவர்.

குறிப்புரை : தீத்தர் செட்டி, மூத்தர் செட்டி ஆகிய இருவரும் இம்மண்டபத்தினைக் கட்டி வைத்தச் செய்தியினைத் தருகிறது.

கல்வெட்டு :

1. உ விக்கினேஸ்பரர் துணை
2. சாலி வாகன சகாஅப்தம்
3. ௲௬௱௯௰௯ மேல் செ
4. ல்லா நின்ற ஏவிளம்பி ஷு
5. தையி *மீ* ௨௰௪ உ தீத்தர் செ
6. ட்டி மூத்தர் செட்டி தற்ம்ம ப
7. ரிபாலனம் சுபமஸ்த்து

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 554/2013**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	சகம். 1699
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1777
ஊர்	:	தாங்கி	இ.க.ஆ.அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	இல்லை
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	-	ஊ.க.எண்	:	2
அரசன்	:	-			

இடம் : தாங்கியின் ஊரில் அமைந்துள்ள வழிப்போக்கர் மண்டபம் உட்புற மேற்குச் சுவர், முன்னுள்ளக் கல்வெட்டின் அருகிலேயே உள்ளது.

குறிப்புரை : தீத்தர் செட்டி, மூத்தர் செட்டி ஆகியோர் இம்மண்டபத்தினை செய்து வைத்தச் செய்தி.

கல்வெட்டு :

1. ௳ விக்கினேசுவரர் துணை சாலிவாகன
2. சகா அப்தம் ௲௬௱௯௰௯ க்குமேல் செல்
3. லா நின்ற ஏவிளம்பி ௵ தையி ௴ ௨௰௧
4. ௳ தீத்தர் செட்டி மூத்தர் செட்டி தற்ம்மம்
5. பரிபாலனம் வெங்கிடாசலபதி துணை
6. உண்டாயி றஷ்சிக்கவும் சுபமஸ்து ௳

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 555/2013**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	சகம் - 1699
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1777
ஊர்	:	தாங்கி	இ.க.ஆ.அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	இல்லை
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	-	ஊ.க.எண்	:	3
அரசன்	:	-			

இடம் : உட்புற மண்டபத்தின் மேற்குச் சுவர்.

குறிப்புரை : அகரம் தாங்கி என்ற குறிப்பு மட்டும் உள்ளது. எனவே இவ்வூர் பிரமாணர்களுக்கு உரிய அக்ரகாரமாக இருந்துள்ளது எனலாம். இக்கல்வெட்டு அருகே இரு உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டு :

1. உ அக
2. ரம் த
3. ாாங்கி
4. யிலே

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 556/2013**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	காஞ்சிபுரம்	வரலாற்று ஆண்டு	:	18-ஆம் நூற்றாண்டு
ஊர்	:	தாங்கி	இ.க.ஆ.அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	இல்லை
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	-	ஊ.க.எண்	:	4
அரசன்	:	-			

இடம் : இம்மண்டபத்தின் எதிரே, நெடுஞ்சாலை அருகே உள்ள பலகை கல்.

குறிப்புரை : இக்கல்வெட்டில், இம்மண்டபத்தினைக் கட்டிய இருவரின் பெயரும் குறிப்பிடுகிறது. முன் கல்வெட்டுகளில் குறிப்பிட்டுள்ள தீத்தர் செட்டி, மூத்தர் செட்டி ஆகியோரே இவர்கள்.

கல்வெட்டு :

1. சறுவ சித்தி ஶ்ரீ
2. வையாசி மீ௨
3. ௰௨ உ அகரம்
4. தாங்கி தீத்தர்
5. செட்டி மூத்த
6. ர் செட்டி தற்ம்
7. ம பரிபாலநம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 557/2013**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	மதுராந்தம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1781
ஊர்	:	கருங்குழி	இ.க.ஆ.அறிக்கை	:	-
மொழி	:	ஆங்கிலம்	முன் பதிப்பு	:	இல்லை
எழுத்து	:	ஆங்கிலம்			
அரசு	:	ஆங்கிலேயர்	ஊ.க.எண்	:	1
அரசன்	:	-			

இடம் : கோட்டையிலுள்ளக் கல்வெட்டு.

குறிப்புரை : முகம்மதியர்களால் கட்டப்பட்ட இக்கோட்டையை, கி.பி. 1781-ஆம் ஆண்டு கேப்டன் டேவிஸ் என்பவன் தலைமையிலான ஆங்கிலேயர் படை கைப்பற்றியச் செய்தி.

கல்வெட்டு :

SITE OF AN OLD FORT
PROBABLY OF MUHAMMADAN ORIGIN
WHICH WAS FINALLY CAPTURED
FOR THE ENGLISH
BY
CAPTAIN DAVIS
IN 1781 AD

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 558/2013

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: -
வட்டம்	: செய்யூர்	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: ஆலம்பரை	இ.க.ஆ.அறிக்கை	: -
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊ.க.எண்	: 1
அரசன்	: வீரராஜேந்திரன்		

இடம் : ஆலம்பரைக் கோட்டை அருகில் உள்ள கல்லறை அருகே கிடக்கும் துண்டுக் கல்வெட்டு.

குறிப்புரை : இக்கல்வெட்டு முழுமையாக இல்லை. இக்கல்வெட்டில், ஜயமலி ஈஸ்வரமுடைய மகா தேவர்க்கு மடைவிளாகத்திற்கும் திருநந்த வனத்திற்கும் இடைப்பட்டிருந்த மூன்றே முக்கால் வேலி நிலத்தில் பூமரம் வைத்து திருநந்தவனத்தினைத் திருத்தி அமைத்துள்ளச் செய்தி.

கல்வெட்டு :

1. யும் தெல்கு மதக் களிற்றுப் பிரமதேவனையுந் தண்டார்ச் சேர்கை
2. தம்மே வருமோலை விடையோடுங் குடுத்தவ விரட்டபாடிப் பிரட்ட
3. ரசனுமக்களும் ஐயம் மடியஞ்சிப் புரைசையானைப் புழைக்கை
4. டைக்கலத் தடக்கை விஜையாதித்தற்கருளி இகலிடைப் பூண்ட ஜயத்திருவோடுங்
5. நாட்டு ஜயமலிஈஸ்வமுடைய மஹாதெவற்கு மடைவிளாகத்துக்கும் திருநந்தவநத்துக்
6. ள்ளும் நடுவுபட்ட நிலம் வேலி மூன்றே முக்காலும் பூமரம் வைக்கத் திருநந்தவநத்துக்கு விட்ட

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: -
வட்டம்	: செய்யூர்	வரலாற்று ஆண்டு	: கி.பி.17-ஆம் நூற்றாண்டு
ஊர்	: கடப்பாக்கம்	இ.க.ஆ.அறிக்கை	: -
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்		
அரசு	: -	ஊ.க.எண்	: 1, 2
அரசன்	: -		

இடம் : அருணாச்சலேஸ்வரர் கோயில் மேற்கு, தெற்கு மற்றும் வடக்கு குமுதம்.

குறிப்புரை : கோயிலுக்கு நிலம் சர்வமானியமாக வழங்கப்பட்டச் செய்தி.

கல்வெட்டு : 1

1. விரோதி வருஷத்திலே நின்று . . . . கடப்பாக்கம் . . . . ஏழாயிரம் பொன்னுக்கு மானிய[ம்*] பண்ணிக் குடுத்தேன் செலவோலையாக . . ல் . . ரப்ப . . . நாயக்கர் எழுத்து . . . .

கல்வெட்டு : 2

1. எ விளம்பி வருஷ . . கடப்பாக்கம் . . . . பண்ணி . . சர்வமாநியம் பண்ணுகையிலே

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 561-562/2013

மாவட்டம்	: காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	: -
வட்டம்	: செய்யூர்	வரலாற்று ஆண்டு	: -
ஊர்	: வேம்பனூர்	இ.க.ஆ.அறிக்கை	: -
மொழி	: தமிழ்	முன் பதிப்பு	: -
எழுத்து	: தமிழ்		
அரசு	: சோழர்	ஊ.க.எண்	: 1, 2
அரசன்	: -		

இடம் : முத்தாலம்மன் கோயில் முன்மண்டபம் கிழக்குக் குமுதம்.

குறிப்புரை : இவ்வூர் இடைக்கழி நாடு என்கிற கடப்பாக்கம் ஊர் அருகே உள்ளது. சங்க காலப் புலவர்களில் ஒருவரான இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் இப்பகுதியைச் சார்ந்தவர். எனவே இடைக்கழி நாடு சங்க காலம் முதல் இன்று வரை அப்பெயரிலே வழங்கி வருகின்றது. சோழர் காலத்திலும் இப்பகுதி இடைக்கழி நாடு என்ற பெயரிலே அழைக்கப்பட்டதை இக்கல்வெட்டில் 'இடைக்கழி நாடு' என்ற குறிப்பு வாயிலாக அறிகிறோம். இவ்வூரிலிருந்த ஜயமலீஸ்வரர் கோயிலுக்கு விளக்கு ஒன்று வைப்பதற்கு 90 ஆடுகள் தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் 3¾ வேலி நிலம் இக்கோயிலுக்குத் தேவதானமாகக் கொடுக்கப்பட்டுள்ளச் செய்தி.

கல்வெட்டு :

துண்டுக் கல்வெட்டு I

1. . . மலர் மன்நவர் சூட மன்நிய
2. . . கடமலை நடாத்தி வீ*ரஸிംஹாஸந*த்து . .
3. மண்டலத்து இடைக்கழி நாட்டு ஜயமலி . .
4. கு ஒன்றுக்கு விட்ட ஆடு தொண்ணூறு இவ்வா

துண்டுக் கல்வெட்டு II

1. . . . . நையெவ ஆங் . . . சிந்தையு
2. . . மறியவோடி பரிசொரு பலகையிற் பழுதற எழுதி யிப்பின்னைஞ் சார்த்தினவுரை
3. வேங்கை நாட்டு வென்று கொண்ட
4. வையிற்றுக்கு நிலம் வேலி மூன்றே முக்காலே இத்தேவர் ஢ேவதாநம் ஜயங்கொண்ட சோழ நல்லூர்க்கு

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	கலி 4957
வட்டம்	:	செய்யூர்	வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1856
ஊர்	:	நல்லூர்	இ.க.ஆ.அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	-	ஊ.க.எண்	:	1
அரசன்	:	-			

இடம் : விநாயகர் கோயில் வலதுபுற கிழக்குச் சுவர்.

குறிப்புரை : நல்லூர் என்னும் இவ்வூரைச் சேர்ந்த மீராசு வைத்தியநாத பிள்ளை என்பவரின் மனைவி சௌந்திர அம்மாள் என்பவர் இக்கோயிலைக் கட்டியுள்ளச் செய்தி.

கல்வெட்டு :

1. கலியுக ஞ சகூகூா௫௰
2. எ மேல் நள ஞ நல்லு
3. ாறு மிராசு கணரு மிரா
4. சு வயித்தினாத பிள்ளை
5. யாள் சவுந்தர அம்
6. மாள் திருப்பணி தறுமம்

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 564/2013

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	மதுராந்தகம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி 8,9-ஆம் நூற்றாண்டு
ஊர்	:	ஓணம்பாக்கம்	இ.க.ஆ.அறிக்கை	:	-
மொழி	:	தமிழ், சமஸ்கிருதம்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ், கிரந்தம்			
அரசு	:	-	ஊ.க.எண்	:	1
அரசன்	:	-			

இடம் : கருப்பன் குன்று பார்சுவநாதர் சிலை அமைந்துள்ள குன்று.

குறிப்புரை : 'இருபத்திநான்கு' எனும் சபையை நிறுவிய வசுதேவர் என்ற சமண முனியால் இக்கோயில் செய்விக்கப்பட்டுள்ளது. சமண சமயக் கோயில் களை நிர்வகிக்கும் சபை இருபத்து நான்கு சபை என்று 24 தீர்த்தங்கரார்கள் எண்ணிக்கையில் உருவாயிற்று எனலாம்.

கல்வெட்டு :

1. ஸ்ரீ உக~ஷ்ரீஃ
2. யதி ஸ்ராவக வ
3. ஸ~தேவ ஸித்தா
4. ந்த படாரர்
5. செய்வித்த
6. தேவாரம்

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 565/2013**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	-
வட்டம்	:	மதுராந்தம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி 18-ஆம் நூற்றாண்டு
ஊர்	:	மதூர்	இ.க.ஆ.அறிக்கை	:	-
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	தமிழ்			
அரசு	:	-	ஊ.க.எண்	:	1
அரசன்	:	-			

இடம் : மாதவப் பெருமாள் கோயிலில் கீழே வைக்கப்பட்டுள்ள வாயில் நிலைக்கல்லிலுள்ள கல்வெட்டு.

குறிப்புரை : கோவிந்த உடையார், கோமடத்து நயினார் ஆகியோரது அறச்செயல்கள் பற்றிக் கூறுகிறது.

கல்வெட்டு :

1. கோவில் *மொவிந* உடையா[ர்*] *உஹையம்*
2. மொமட[த்*]து நயிநார் *ஸஶாஸெவெ*

த.நா.அ. தொல்லியல் துறை **தொடர் எண் : 566/2013**

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	9
வட்டம்	:	மதுராந்தகம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1259
ஊர்	:	அரசர் கோயில்	இ.க.ஆ.அறிக்கை	:	303/1921
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	பாண்டியர்	ஊ.க.எண்	:	1
அரசன்	:	சடையவர்மன் சுந்தர பாண்டியன்			

இடம் : ஸ்ரீவரதராஜ பெருமாள் கோயில் கருவறை தென்புற முப்பட்டைக் குமுதம்.

குறிப்புரை : இவ்வூரார் சிலர் அன்றாடு நல்பணம் 40 பணம் கொண்டு நிலம் ஒன்றினை வாங்கி திருவரசுரம் பெருமானுக்கு தினமும் அமுதுபடி வழிபாட்டிற்காக அளித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோச்சட பன்மரான சிரீபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீஸுந்தரபாண்டிய தெவர்க்கு யாண்டு ஒன்பதாவது மீன நாயற்று பூர்வ பக்ஷத்து திருதியையும் புதன் கிழமையும் பெற்ற ரேவதி நாள் ஜயங்கொண்ட . . . பாத்தூர்த் திருவரசுரம் பெருமானுக்கு இ[வ்*]வூர் ஆதம்பா[க்க*]த்து திருவேங்கடபட்டன் உள்ளுட்டாரும் கஞ்சி வாமன பட்டன் உள்ளுட்டாரும் இ[வ்*]வனைவோம் பூமி விலை பிராணண தீட்ட . . . [னை]வதரையர் தம்பிமார் ஆனையாநான அதியமான் தேவர் திருவாசுரம் பெருமானுக்கு அமுதுபடிக்கு கொண்டு விடுவி கொ . . .

2. மத்துக்காணி ப்ழந்திருவிடையாட்ட[மாந]ப் பள்ளப்புலத்துக்கு தெற்கில் பள்ளப்புலமும் தென் மேற்க்கு திருவரங்கம் தென்கூறு தளை இரண்டும் பழந்திருவிடையாட்டம் பட்டமனுக்கு மேல் கூறுபட்டமனுமடுக்கின் மேற . . . [ந]டயாட்டம் இரணியனுக்கு மேற்க்கு கரிம்பை வடகூறும் ஆக பாடகம் சஞ சயச இபாடகம் க லே முக்காலே நால் மாவரைக்கும் விலையாக எம்மில் இசைந்த விலைப்பொருள் அன்றாடு நல் பணம் சய இப்பணம் நாற்பதுக்கும் இப்பாடகம் நாலே[ஞ]நால்மாவரையும் விலைக்கற விற்றுப் பொருளறக் . . .

3. ணம் விற்று விலை ப்ரமாணம் பண்ணிக் குடுத்தோம் முதலி பாத்து வேங்கட ஹட்டன் உள்ளிட்டாரும் கஞ்சி[வா]மன் ஹட்டன் உள்ளிட்டாரும் இவ்வனைவோம் இந்நிலங்களில் மேல் நோக்கின மரமும் கீழ் நோக்கின கிணறும் . . . .[தி]ருவேங்கட ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை கஞ்சி வாமன ஹட்டன் எழுத்து இப்படிக்கு இவை கஞ்சிடுவாய வாமன பட்டன் எழுத்து இவை வங்கிபுறத்து மாதவ பட்டன் எழுத்து இவை வங்கி புறத்து திருவேங்கட ஹட்டன் எழுத்து இவை ஆதம் பா[க்க*]த்து கருணாகர ஹட்டன் எழுத்து இப்படி இவர்கள் ெ . . .

4. டி இ ப்ரமாணமா. முதனடைக்க இவை நாலாயிர ப்ரியன் எழுத்து இப்படி அறிவேன் வல்லங்கிழானேன் இப்படி அறிவேன் பெருந்தேவனேன் இப்படி அறிவேன் நாலாயிரப் பிரியன் எழுத்து.

த.நா.அ. தொல்லியல் துறை தொடர் எண் : 567/2013

மாவட்டம்	:	காஞ்சிபுரம்	ஆட்சி ஆண்டு	:	21
வட்டம்	:	மதுராந்தகம்	வரலாற்று ஆண்டு	:	கி.பி 1237
ஊர்	:	அரசர்கோயில்	இ.க.ஆ.அறிக்கை	:	304/1921
மொழி	:	தமிழ்	முன் பதிப்பு	:	-
எழுத்து	:	கிரந்தங்கலந்த தமிழ்			
அரசு	:	சோழர்	ஊ.க.எண்	:	2
அரசன்	:	மூன்றாம் இராஜராஜன்			

இடம் : ஸ்ரீவரதராஜ பெருமாள் கோயில் கருவறை வடக்கு, மேற்கு தென்புற முப்பட்டைக் குமுதம்.

குறிப்புரை : ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துத் தனியூர் ஸ்ரீமதுராந்தகச் சதுர்வேதிமங்கலத்து வடபிடாகை மாத்தூர் ஊர் திருவரசுரம் பெருமாள் கோயில் ஸ்ரீசேனாபதி ஆழ்வார் வழிபாட்டிற்காக இவ்வூரைச் சார்ந்த சிலர் அன்றாடு நற்புதுமாடை 12 காசுகள் பெற்றுக் கொண்டு குறிப்பிட்ட நிலம் ஒன்றினை விற்றுக் கொடுத்துள்ளனர்.

கல்வெட்டு :

1. *ஸ்வஸ்திஸ்ரீ* திருவாய்க் கேழ்வி முன்னாக திரிபு° வனச்சக்கர வத்திகள் *ஸ்ரீராஜராஜ* தெவர்க்கு யாண்டு உயக வது ஷிம்ஹ நாயற்று பூர்வ பக்ஷ த்து . . . .யும் திங்கட்கிழமையும் பெற்ற அத்த[த்*]து நான் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து தனிஊர் ஸ்ரீமதுராந்தகச் சதுவெ்தி மங்கலத்து வடபிடாகை மாத்தூர் . . .
2. இவ்வனைவோம் பூமி விலை ப்ரமாணக் கைச்சாத்து இவ்வூர் திருவரசுரம் பெருமாள் கோயில் ஸ்ரீசேனாபதி ஆழ்வார்க்கு தாங்கள் விற்றுக்குடுத்த பூமி யாவது இவ்வூர் . . . . . தூர் நக்க வாய்க்காலுக்கு வடக்கு மூன்றாங் கண்ணாற்று ஸ்ரீவராக வதிக்கு கிழக்கு ஆறாஞ்சதிரத்து விளை நிலம் தடி பலவினால் ஒழுகின் படியாவது ஐஞ்சேகாலே சின்னமும் சதிரத்துக்கு [உகூ]பட
